1
Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 1. | ஹிஜ்ரி 1349 ஜமாதுல்அவ்வல்மீ 1930 அக்டோபர்மீ | இதழ் 9

... OF THE ... 27 OCT 1930 ... MADRAS ...

உள்ளடக்கம் — பக்கம்

1. ஸூரத்துல் கவ்தர் ... 385
2. நாயக வாக்கியம் ... 388
3. நமது சங்கம் ... 389
4. தொழுகையின் தத்துவங்கள் ... 392
5. இஸ்லாத்தின் அரும்பெருந்தியாகிகள் ... 396
6. அபூபக்கர் ஸித்தீக் (ரலி) என்னும் நூலில் தாஊத்சா இழைத்த தவறு ... 400
7. இயற்கை மதம் ... 404
8. பிரபஞ்ச முஸ்லிம்கள் ... 409
9. இஸ்லாமிய ஆட்சிமுறை ... 412
10. அனாதைக் குழந்தைகள் ... 416
11. சங்கடம் யாருக்கு ... 418
12. இலௌகிக வைதிக சம்பந்தம் ... 422
13. ஞாபகச் சின்னக் கட்டிடம் ... 425
14. ஒரு வேண்டுகோள் ... 426
15. நிரூபசாரம் ... 428
16. யௌமுந்நபி ... 430
17. ஆசிரியர் குறிப்பு ... 432

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4	0	0
தனிப் பிரதி	...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR
27 OCT 1930
MADRAS

حفاظة الاسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்.

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 1	ஹிஜ்ரி 1349 ஜமாதுல் அவ்வல் மீ 1930ஹு அக்டோபர் மீ	இதழ் 9

ஸூறத்துல் கவ்தர்

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஓதுகின்றேன்.)

1. (ஹே! முஹம்மதே!) நிச்சயமாக நாம் உமக்கு (ஹவ்லுல்) கவ்தரை அளித்து விட்டோம்.

2. ஆதலின் உமது "ரப்பு"க்காகத் தொழுவீராக. மேலும் குர்பானியை அறுப்பீராக

3. நிச்சயமாக உம்மைக் கோபமூட்டுகின்றவன் அவன்தான் சந்ததியும், வியாபகமுமற்றவனாவான்.

இத்திரு அத்தியாயம் ஹிஜ்ரத்திற்கு முன்னரே இறங்கினமை பற்றி பெரும்பான்மையோர் இதனை 'மக்கி' யென்றும், சிலர் இதனை 'மதனி' என்றும் வழங்குகின்றனர்.

வள்ளலார் நபிகள் திலகம் தங்கட்கு மகப்பேறு மிகுந்திருந்தது என்பது உண்மை. எனினும் அதன் எண்ணிக்கையில் கருத்து மாறுபாடுண்டு. பெண்மக்கள் நால்வரிருந்தனர் என்பதிலும், அந் நால்வரும் முறையே ஸைனப், ருக்யா, உம்முகுல்தூம், பாதிமா (றலி) என்றழைக்கப்பெற்றனர் என்பதிலும் மாறுபாடில்லை. ஆயினும், ஆண் மக்கள் எத்துணைப்பேர் என்பதிலேயே அபிப்பிராய பேதம் காண்கின்றோம். காசிம், இப்றாஹீம் என இருவரேஇருந்தனர் என்பர் ஒருசாரார்; இவர்களோடு மிகையாக ஆண்மக்கள் எண்மர் இருந்தனர் என்பர் பிறிதொரு சாரார். எத்துணைப்பேர் பிறந்திருப்பினும் அத்துணைப்பேர்களும் சிறுபிராயத்தில் இறந்தனர் என்பதில் ஐயமின்று.

கதிஜா நாயகியார் (றலி) அவர்கள் உதரத்தில் தோன்றிய காசிம் என்பவர் இளமையிலேயே இறைவனடிச் சார்ந்தார். அங்ஙனமே அப்துல்லாஹ் என்பவரும் காலமானார். ஆண்மக்கள் பிறந்ததும் உயிர் நிலைத்து வாழாமை குறித்து, ஆசிப்னுவாயில் என்னும் காபிர் ஒருவன், நபிகள் திலகத்தை ஆண்மகவற்ற 'அப்தர்' என்றும், இதனால் அவர்கள் புகழும் அவர்கள் சன்மார்க்கப்பிரசாரமும், பரவாது ஒழிந்துபோம் என்றும், இதன்பயனாய் காபிர்

கள் மார்க்கம் மீண்டும் தலையெடுக்க வழியுண்டாம் என்றும், போர் முதலியன நிகழா வென்றும் கூறி மனப்பால் குடிப்பானயினன்.

இதற்கு விடையிறுப்பான் இறைவன் மேற் கூறப்பெற்றுள்ள ஸூரத்துல் 'கவ்தரைத்' திருவுளமானன். 'அருமைத் தூதரே! சலியற்க; உறுதியாக உமக்குக் கவ்தரை அருளினேம்' என்று இறைவன் ஆற்றுவித்தான்.

'கவ்தர்' என்னும் பதம் 'கத்ரத்' என்னும் தாதுவினின்று உண்டாயது. இதன் பொருள் மிகுதம் அபரிமிதம் என்பர், இஃது 'ஹவ்லுல் கவ்தர்' என்பதனையே கருத்தாகக் கொண்டதென்று முபஸ்ஸிரீன்களிற் பெரும்பான்மையோரால் கூறப்பெற்றுள்ளது. ஹவ்லுல்கவ்தர் என்பது "மஹ்ஷரி"ல் உண்டாகும் ஒரு ஆற்றின் பெயராகும். அதன் தீஞ்சுவைத் தண்ணீர்பாலினும் வெண்மைத்தாய், தேனினும் இனிப்புடைத்தாய் இருக்கும். இதன் நீரை ஒரோ முறைப் பருகியவர் பின்னர் என்றும் நீர் வேட்கை கொள்ளார். இத்தடாகம் மஹ்ஷர் வெளியில் உள்ளது; நபிகள் பெருமானர்க்கென்று நாயகனல் அருளப்பெற்றது என ஹதீதுகள் கூறா நிற்கின்றன. இவ்வெளியில் மக்கள் பல்வேறு இடுக்கண்களை எய்துவார்கள். நபிகளும் வலிகளும் கூட நீர் வேட்கையால் துன்புறுவர் எனின் ஏனைய மக்களின் இன்னல் எடுத்தியம்பவும் வேண்டுமோ? இவ்வாருக எல்லா மக்களும் வறட்சி மிகுந்து நிலைகுலைந்து எக்க முற்று இடருற்றிருக்க, நபிகள் பெருமானர் ஆங்கு தோன்றி, ஹவ்லுல் கவ்தரின்பால் போந்து நின்று எல்லோர்க்கும் விருந்தளித்து, அவர்கடம் துன்பத்தைப் போக்குவார்கள். மஹ்ஷரில் நாயகமவர்கள்பால் எல்லா நபிகளும் எல்லா மக்களும் தஞ்சம் புகுவர் எனின், நாயகமவர்கடம் உயரிய நிலையை உய்த்துணருங்கள். அவர்கட்கா? வியாபக மற்றுப் போம்? என்னே! காபிர்களின் அறியாமை! எனஇறைவன் சமிக்கை செய்தான்.

"ஹவ்லுல்கவ்தர்" என்பது சுவர்க்கத்தில் ஓடும் ஓர் ஆறென சில ஹதீதுகள் கூறுகின்றன. சொர்க்கத்திலோ ஒவ்வொரு நபிக்கும் ஒவ்வொரு நதி அளிக்கப்பட்டிருக்கும். அந் நதிகளில் அந்தந்த நபிகளின் உம்மத்துக்கள் சென்று நீரருந்துவார்கள். 'என்னுடைய நதியில் அபரிமிதமான என் உம்மத்துக்கள் சென்று நீர் பருகுவார்கள். இதனல் யான் பெருமை பாராட்டுவேன்' என்று நபிகள் நாயகம் திருவாய் மலர்ந்திருக்கின்ருர்கள். ஹவ்லுல் கவ்தர் என்பது சொர்க்கத்திலுள்ள ஆறுகளுக்கும் சொல்லப்படினும், மேற் கூறிய ஹதீதுனின்றும் இவ்வாறுகள் நாயகமவர்கட்கே உரித்தான ஆறுகளைக் குறிப்பன வன்று எனத்தெரிந்து கொள்ளுகிறேம். இத்திருவத்தியாயத்தில் நாயகமவர்கட்குச் சொந்தமாக அருளப்பெற்ற ஆற்றைக் குறிப்பிடுவதால், இஃது மஹ்ஷரில் உண்டாகும் ஹவ்லுல் கவ்தரைத்தான் குறிப்பிடுகின்றது என்று பாரவான்கள் கருதுகின்றனர்.

இரண்டாவதாக; 'கவ்தர்' என்பது 'கய்றில்கதீர்' (அதாவது அபரிமிதமான நன்மை) என்றே பொருள்படும் எனவும் இப்னு அப்பாஸ் (றலி) கூறுகின்ருர்கள். நபிகள் திலகத்திற்கு இகத்தும் பரத்தும் எண்ணிலா நலன்களை இறைவன் திருவருள் புரிந்துள்ளான் என்பதாகும். ஒரு ரிவாயத்தில் கய்றுல் கதீர் என்பதும் 'ஹவ்லுல் கவ்தர்' என்பதும் ஒரு பொருளையே குறிப்பிடுகின்றன வென்றும் கூறப்பெற்றுள்ளது. 'ஹவ்லுல் கவ்தரி'ல் கணக்கற்றப் பாண்டங்கள் இருக்கும் என்றும், இவைகளைக் கொண்டு அளவற்ற நல்லடியார் நீர் வேட்கையைப் போக்கிக் கொள்வர் என்றும் கூறப்பெற்றுளது. இதனல் ஹவ்லுல் கவ்தரால் அபரிமிதமான நன்மைகள் உண்டாகுமென்று செவ்வனே தெரிந்து கொள்கிறேம்.

மூன்ருவதாக; 'கவ்தர்' என்னும் பதம் தொகையில் மிக்க பிள்ளைகளைக் குறிப்பிடுகின்றது என்றும் கூறுப. பிள்ளைகள் இரு வகைப் படுவர் — தன் வழித்தோன்றியவர்கள்; தன் நெறியைப் பின்பற்றுபவர்கள். நாயகமவர்கடம் ஆண்மக்கள் அனைவரும் இளமையிலேயே இன்னுயிர் நீத்தனர். பாத்திமா நாயகியார் அவர்கள் சந்ததி மட்டும் உலகத்தில் பரவுதல் பெற்றது. இச்சந்ததிக்கண் உலமாக்களும். வலிமார்களும் குத்துபுகளும் தோன்றினர்கள். இவர்கள் நாயகமவர்களை எல்லாத்துறைகளிலும் பின்பற்றி நடந்தவர்களாவர். தங்கள் தலைமைத் தந்தையாம்நாயகமவர்கடம் சத்குணங்களையும் நற் செய்கைகளையும் மக்கட்கு எடுத்துப் புகட்டி வந்தனர். இவர்கள் முயற்சியால் எண்ணிறந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர். நபிகள் நாயக

மவர்கடம் புகழும் பெயரும் புவியில் பேரொளி கொண்டு திகழ்வதாயின. பிறிதொரு வகையினராய உம்மத்துக்களைப் பற்றி அனைவரும் அறிவர். இவர்கள், தம் உடல் பொருள் ஆவி உறவினர் அனைவரினும் அதிகமாய் நாயகமவர்கள்பால் அன்படிமை பூண்டு ஒழுகிவந்தார்கள். இற்றைக்கும் இவ்வும்மத்துக்களின் பெருமையை இயம்புதற்கும் இயலுமோ? இவர்கள் எண்ணிறந்த சன்மார்க்க நூல்களைத் தொகுத்தனர். சன்மார்க்க நூல்களைப் பலமொழிகளினும் பெயர்த்து வெளியிட்டு வந்தனர். நபிகடம் புகழை உலகோங்கச் செய்தனர். குறைஷிக் காபிர்கள் மனப்பால் குடித்தமைக்கு முற்றிலும் மாற்றமாய் நபிகடம் திருப்பெயர் வியாபகமாயிற்றேயன்றி, பரவாமல் குன்றியதன்று. உம்மத்துக்கள் மட்டுமின்றி, ஏனைய புற மதத்தினர்கூட எம்பெருமானார் பெருமையை எடுத்துச் சாற்ற எழுந்தனர் எனின், இதனின்று அவர்கள் வியாபகம் சிறுமைப் பட்டதா, பெருமைப்பட்டதா என்று யூகித்துணர்வதற்கு அதிக முயற்சி வேண்டாவே. ஹே! நபியே! உமது வியாபகத்தை உயர்த்திவிட்டேன் என்றான் இறைவன். இது மெய்த்தது என்பது வெள்ளிடை மலையாம்.

நான்காவதாக; 'கவ்தர்' என்னும் பதம் திருக் குர்ஆனையும் அதன் கலைகளையும் குறிப்பிடுகின்றது என்றும் கூறப்பட்டுளது. திருக் குர்ஆனின் கலைகள் அபரிமிதமானவை என்பது எல்லோரும் அறிந்ததோர் உண்மையாகும். அல்ஹம்து ஸூறாவுக்கு 70 ஒட்டகங்கள் தூக்க முடியா அளவில் தப்ஸீர் வியாக்கியானம் புரிதல் இயலும் என்று அலீ (றலி) அவர்கள் செப்பியிருக்கின்றார்கள் எனின் இதற்கு வேறு நற்சான்றும் உளதாமோ? ஆனதுபற்றி கவ்தர் என்பது திருக் குர்ஆனையே குறித்தல் கூடும் என்றும் மொழிகின்றனர். திருக்குர்ஆனின் ஒளியானது இவ்வுலகில் என்றும் நிலவும் என்பது திண்ணம். குன்றா ஒளி பெற்ற குர்ஆனை உலகினர்க்கு எடுத்துரைத்த திருத்தூதர்க்கு அழியாப் புகழும் உண்டாம் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

மேலும் 'கவ்தர்' என்னும் பதம் 5 நேரத் தொழுகையைக் குறிக்கின்றதென்றும், "லாயிலாஹ இல்லல்லாஹு என்னும்" கலிமாவைக் குறிக்கின்றதென்றும் சிலர் உரைக்கின்றனர். எவ்வாறாயினும், நாயகமவர்கட்கு இறைவனால் அருளப்பெற்ற நலன்களைக் கொண்டு நாயக மவர்கடம் பெயரும் புகழும் இவ்வுலகில் என்றைக்கும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்பது திண்ணம். குறைஷிக் காபிர்களின் குலமும் புகழும் இவ்வுலகில் அற்றுப்போனதேயன்றி, நாயகமவர்களின் பிரஸ்தாபம் குறைஷியர்கள் கருதியவாறு மட்டுப்பட்டதன்று. இதனையே இத் திருவத்தியாயம் அறிவுறுத்துகின்றது.

இறைவன் அருளிய நலன்கட்காக நன்றி செலுத்தும் பொருட்டு, அவனைத் தொழுமாறும், குர்பானியை அறுத்து அவன் நெறியில் செலவிடுமாறும் ஆணையிறுத்துள்ளான். இதற்கு ஹஜ்ஜுப் பெருநாளின் தொழுகையும், அன்று அறுக்கும் குர்பானியுமே கருத்தாம் என்றும் கருதுகின்றனர். 'இன்ஹர்' என்னும் பதம் மனோ இச்சைகளை ஒடுக்கி, இறைவன்பால் தன்னையே தத்தம் செய்வதனையே குறிப்பிடுகின்றதென்றும் சிலர் கூறியிருக்கின்றனர். செயல்களையும், உண்டு உறங்குதல் முதல் உறவு பகைமை கொள்வது இறுதியாக எல்லாச் செயல்களையும் இறைவனுக்காகவே செய்தல் வேண்டும் என்பது இதன் கருத்தாம். இதுபற்றி யன்றோ எவனொருவன் அல்லாஹ்வுக்காகவே மற்றொருவனை நட்புக் கொள்கின்றானோ, எவனொருவன் அல்லாஹ்வுக்காகவே மற்றொருவனைப் பகைமை கொள்கின்றானோ, அவ்வொருவன் ஈமானை சம்பூர்ணமாக்கிக் கொண்டவனாவான் என்று நாயகமவர்களும் செப்பி யிருக்கின்றார்கள்.

இத் திருவத்தியாயம் திருக்குர்ஆன் அத்தியாயங்கள் பலவற்றினும் மிகச் சிறிய தொன்றாகும். எனினும் இதற்கு விரிவுரை பரந்து கூறுதல் கூடுமாதலின் விரிவஞ்சி இத்துணையோடு விடுத்தனம்.

நாயகமவர்களை 'அப்தர்' என்று இழித்துரைத்த காபிர்கள் தங்கட்கு மக்கட்பேறும் மட்டற்ற செல்வமும் இருந்தும் இறுதியில் வியாபகமின்றி மண்ணோடு மண்ணாய் நிலை குலைந்தனர். ஆண்மக்களற்றவர் என்ற நபிகள் பெருமானார் அவர்கள் கீர்த்தியோ உலகெங்கும் உயர்ந்தோங்கி வருகின்றது. இத் திருவத்தியாயம் இவ் வுண்மை நிகழ்ச்சிகளை முன்னதாகவே தீர்க்கதரிசனம் செய்தமை காண்க.

நர்யக வாக்கியம்

அனஸ் (றலி) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டது. நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்:—

1. யான் சுவர்க்கலோகத்தில் ஓர் ஆற்றினருகே சென்றேன்; அதனிருப்புறங்களிலும் முத்துக்களினால் இயற்றப்பெற்ற மாளிகைகளிருந்தன. ஏ! ஜிப்ரீலே, ஈதென்னவென்று வினவினேன். உங்கள் இறைவனால் தங்கட்களிக்கப்பட்ட "கவ்தரா"க யிருக்கும் என்றார்கள். அதன் மண்கள் பரிமளம் வீசும் கஸ்தூரியாக யிருந்தது—புகாரி

அப்துல்லா ஹிப்னு அம்ரு (றலி) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டது:—

2. என்னுடைய ஹவ்லு (கவ்தர்) வானது ஒரு மாதம் நடக்கவேண்டிய அளவு பரப்புடையதா யிருக்கும். அதன் நான்கு கோணங்களும் ஒத்திருக்கும். அதன் நீரானது பாலைவிட வெண்மையாகவும் அதன் மணம் கஸ்தூரியைவிட பரிமளமிகுந்ததாயுமிருக்கும். அதில் வைக்கப்பட்டிருக்கும் கலன்களின் எண்ணிக்கையானது வானலோகத்தின் நக்ஷயத்திரங்களின் எண்ணிக்கையை ஒத்திருக்கும். அதில் நீரருந்தியவர் என்றைக்கும் வேட்கையுறார்—புகாரி வ முஸ்லிம்

ஸஹ்லிப்னு ஸஃது (றலி) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டது:—

3. ஹவ்லு (கவ்தர்) க்கு யான் முதன்முதலாகச் சென்று தயார்செய்வேன். என்னருகே வரக்கூடியவர் தண்ணீர் அருந்துவர். அவ்வாறு அருந்தியவர் என்றைக்கும் நீர் வேட்கை யடையார். அவ்வமயம் என்னிடம் சில கூட்டத்தினர் வருவார்கள். அவர்களை நானறிவேன். என்னை அவர்களுமறிவர். எனக்கும், அவர்களுக்குமிடையே ஓர் மறைவு ஏற்படும். அவர்கள் என்னிலின்றுமுள்ளவர்கள் என்று யான் சொல்வேன். இவர்கள் உங்களுக்குப் பின்னர் என்ன நூதனக் கிரியைகளைச் செய்தனர் என்று உங்களுக்குத் தெரியாது எனச் சொல்லப்படும். எனக்குப் பின்னர் என்னுடைய "தீனை" (மார்க்கத்தை) பேதகப் படுத்தியவன் அழிந்துபோகக் கடவன் என நான் சொல்வேன் என நாயகமவர்கள் திருவுளமானார்கள் (புகாரி வ முஸ்லிம்)

ஸமுரத் (றலி) அவர்களால் ரிவாயத் செய்யப்பட்டது.

4. ஒவ்வொரு நபிக்கும் ஒவ்வொரு ஹவ்லு உண்டாகும். யாருடைய ஹவ்லுக்கு அதிக உம்மத்துகள் நீரருந்த வருகின்றார்களோ அவர்கள் பெருமை பாராட்டுவார்கள். அவ்வாறு நீரருந்தவரும் என்னுடைய உம்மத்துக்கள் அபரிமிதமாக யிருப்பர் என யான் ஆதரவு வைக்கின்றேன் என நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இவைகளைபோன்று அநேக ஹதீதுகள் ரிவாய்த்துச் செய்யப்பட் டிருக்கின்றன. எனவே ஹவ்லுல் கவ்தர் என்னும் நீர் நிலையமானது முஸ்லிம்களுக்குக் கிடைக்கும் ஓர் பரிசாகும். இதனைப்பற்றி அநேக ஹதீதுகளில் கூறப்பட்டிருப்பதால் இஃது நபிகள் நாயகமவர்களுக்காக அருளப்படுவது உறுதியென்று நம்பிக்கை கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் கடமை என இமாம்கள் கூறி யிருக்கின்றார்கள். மார்க்கப் புரட்டர்களுக்கு ஹவ்லுல் கவ்தரில் நீரருந்தும் பாக்கியம் கிட்டாதென்று ஹதீதில் கூறப்பட்டிருப்பதால் ரூபிலி, காரிஜி முதலானோர்கள் ஹவ்லுல் கவ்தருக்கு வரமாட்டார்கள் என "தப்வீர் காஸினி"ல் வரையப்பட்டிருக்கிறது. காதியானிகள், அஹ்மதிகள் நம் சன்மார்க்கத்தைச் சின்னாபின்னமாகப் புரட்டிவிட்டனர் என நாம் பன்முறையும் நிரூபித்துள்ளோம். ஆனதுபற்றி அவர்களுக்கும் இப்பாக்கியம் கிடைக்காதென்று கூறவும் வேண்டுமோ? ஆகையால் முஸ்லிம் சகோதரர்கள் மார்க்கப் புரட்டர்களோடு சார்பு கொள்ளாமல் விலகிக் கொள்வார்களாக.

حفاظة الاسلام مدراس

நமது சங்கம்

நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் பிறந்து ஓராண்டுப் பிராய மடைந்து விட்டது. இரண்டாம் வயதை அடைவதற்கு முன்னர் கடந்த ஆண்டின் கண் இஃது இந்நாட்டில் நம் மெய்ந்நெறி பற்றி ஆற்றியதொண்டை யாரே அறியாதார்? இதன் பயனாய் நம் தென்னாட்டில் ஓர் புத்துணர்ச்சி பிறந்திருக்கின்றது என்பதற்கு ஆணித்தரமான நற்சான்றுகள் கிடைக்கின்றன. தீயன கடிந்து நல்லன எடுத்துப் புகட்டற்கு ஆங்காங்கு சங்கங்கள் இன்றியமையாதன வாகின்றன. நல்லன எடுத்துப் பிரசாரம் புரியுமளவிலேயே தீயன வற்றையும் வேரறக் களைதல் அவசியமாகின்றது. களை செறிந்த ஒருசெய்யில் எங்ஙனம் பயிர்கள் விளையாவோ அங்ஙனமே தீய கொள்கைகளைப் பரவுதல் செய்துவரும் ஓர் பகுதியின்கண் நற்கொள்கைகளும் பரவுதற்கியலா. எனவே களைபோன்ற தீயனவற்றைக் கிளைத்தபோழ்தெல்லாம் வேரறக் களைவதும் அதே சமயத்தில் நல்லன விளைப்பதும் இஸ்லாம் பாதுகாப்புச் சங்கத்தின் மார்க்கப் பயிர்த் தொழிலாகும். எல்லாத் துறைகளிலும் அவ்வத் துறைகள் சிறந்தோங்க சங்கங்கள் நிறைந்து தோற்றுவிக்கப் படுகின்றன. மேனாட்டினர் தம் ஆட்சிமுறையினை மாட்சியுறச் செய்தற்கும், உரிமைகளை உரனுறச் செய்தற்கும், கிறிஸ்துவப் பிரசாரம் புரிதற்கும் தங்கனாட்டிலும் கீனாட்டிலும் எண்ணிறந்த ஸ்தாபனங்களை அமைத்து அவற்றால் பலன் பெற்று வருகின்றனர். மற்றும் விவசாயிகள் விவசாய சங்கங்களையும், தொழிலாளர் தொழிலாளர் சங்கங்களையும், வணிகர் வர்த்தக சங்கங்களையும் அமைத்து ஒன்று சேரப் பெரும்பயன் காண்கின்றனர். எனவே, எப்பொருட்டேனும் ஒரு கூட்டத்தார் செழித்து ஓங்கு வற்கு சங்கங்களே இக்காலத்தில் கற்றூண்களாம்.

இதுகாலை நம் முஸ்லிம்கட்கென்று போதிய சங்கங்கள் கிடையா. முஸ்லிம்களின் மிகுந்த தொகைக்கு ஈண்டுள்ள குறைந்த சங்கங்கள் நம்மவர்களின் முயற்சியின் வறுமையைக் குறிப்பிடுகின்றன. இத்துணைக் குறைந்து காணப்படும் சங்கங்களோ வெனின், அவைகளும் தத்தம் வேலைத் திட்டங்களை அறவும் நிறைவேற்றினவன்று. நம் மார்க்கத்தை உயிரே போன்று பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாயிருக்க, இது போழ்து நம் மார்க்கத்திற்கு முரண்பாடாக எழுதுபவர்களைக் குறிப்பிட்டு அவர்கள் கட்டுரைகள் சொற்பொழிவுகள் இவைகளை ஊன்றி நோக்கி அவைகளை மறுக்கவும், கண்டிக்கவும், திருத்தவுமாய ஊக்கம் எடுத்துக் கொள்ளுவதற்கு ஈண்டு ஸ்தாபனங்கள் அரிதே காணப்படுகின்றன. முற்காலத்திலோ வெனின் ஒவ்வொரு முஸ்லிமும் தம் மார்க்கத்தைப் பற்றிக் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தார்கள். தனிப் பொறுப்பிற்குப் போதிய வசதியோ, ஊக்கமோ குன்றிய இக்காலத்தில் சட்ட திட்டங்கட்குக் கட்டுப்பட்ட ஸ்தாபனங்களே இத்தகைய அரும் பணிகளை ஆற்றுவதற்கு அத்யாவசிய மாகின்றன. இஸ்லாத்தைப் புறமதத்தினர் தாக்கி வருவது எல்லோரும் அறிந்ததே. நம்மதத்தினருள்ளும் சிலர் மறைவாகச் சூழ்ச்சியா

கச் சதி செய்து வருவது குறிப்பிடத்தக்க தாகும். இவ்விருவகைப் பகைவர்களின் வீண் கோள்களை ஒருபுறம் வேரறுப்பதோடு, கோடிக்கணக்கில் ரூபாய்களைச் செலவிட்டு, ஆங்காங்கு எண்ணிறந்த சங்கங்களை நிறுவி, தமது கொள்கைகளை எல்லாப் பலங்களுடனும் பரவுதல் செய்துவரும் கிறிஸ்துவ மிஷன்களின் சூழ்ச்சிகளும் நம் மார்க்கச் செழிப்பிற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன. இத்தகைய சூழ்ச்சிகட்கும் வீழ்ச்சி தேடவேண்டியது நம்மவர்களின் ஓர் தலைமைக் கடமையாகின்றது.

சிலரோ, 'நம்மவர்' என்னும் பெயரை ஏந்தி நின்று, இஸ்லாத்தின் மீதும் அதன் திருத் தூதரவர்கள் மிதும் தகாதன உரைத்து வருகின்றனர்; பொய்ம்மொழிகள் புகல்கின்றனர்; வீணுரைகள் விளம்புகின்றனர். மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி என்பவரைப் பற்றி நம் வாசகர்கள் நம் மாசிகையின் வாயிலாய் நன்கறிந்திருப்பார்கள். காதியானி மூடமதி கொண்டு நம் ஷரீஅத்தின் சட்டதிட்டங்களைத் திரித்து உரைபகர்ந்து சின்னபின்னப்படுத்தி யிருக்கின்ருர். இவரைப் பின்பற்றியவர்கள் இருதரத்தார்—காதியானிகள், அஹ்மதிய்யாக்கள். இவ்விருதரத் தாரும் தம் தீய கொள்கைகளைப் பரவுதல் செய்யவும், தம் தொகையினரை மிகைபடச் செய்யவும் சில சட்டதிட்டங்களை அமைத்துக் கொண்டும் அவைகட்கேற்ப சங்கங்களையும் பத்திரிகைகளையும் நிறுவிக் கொண்டும் வேலை செய்து வருகின்றனர். இவர்கட்கு நந் தென்னாட்டின் கண்ணும் மேலாள்கள் (Agents) இல்லாமலில்லை. இம் மேலாட்கள் உதவியால் நந் தென்னாட்டிலும் காதியானிகளின் தீய கொள்கைகள் சன்னம் சன்னமாய்ப் புகட்டப்பெற்று வருகின்றன. தென்னாட்டு முஸ்லிம்கள் கல்வியில் பயிற்சி மிக்காரல்லரெனினும், மார்க்கப் பக்தியில் தலை சிறந்தவர்கள் என்பதில் ஐயப்பாடின்று. எனவே, மார்க்கப்பற்றுடைய நந் தென்னாட்டில் காதியானிகள் தங்கள் தவருன தீயகொள்கைகளை நேர்முகமாகப் பரவுதல் செய்வதற்கஞ்சி, நடுவு நிலைமை கொண்ட ஆராய்ச்சி யாளர்கள்போல் பகட்டி, அஹ்மதியுமல்லன், காதியானியுமல்லன், எக்கட்சிக்கும் வகாலத்து வாங்கிவந்தவனுமல்லன் என்று சொல்லுரைத்து, திரைமறையில் ஒளிந்த வண்ணமாய் நின்று கொண்டு தம் வேலைத் திட்டங்களை ஈடேற்ற முயற்சித்து வருகின்றனர். எப்பகைவனும் கண்முன் தோற்றி நேர்படத் தனது பகைமையை விளம்புவனேல், அப் பகைவன் பாராட்டுக்குரியவனுகின்ருன். அவனது கொள்கைகளும் அவன் கருதியுள்ள செயல் முறைகளும் நமக்கற்றுப்போம். அதன் பயனுய் நாமும் அதற்குரிய நம்மாலியன்ற திட்டங்களை அநுசரித்து நடந்து கொள்வோம். அவ்வாறின்றி புறம்நின்று முதுகில் அம்பெய்யும் ஆண்மையற்றவர் போன்று ஒளிந்து பிரசாரம் புரியும் இவர்கள் அபாயகரமானவர்கள் என்பதில் ஐயமின்று. எனினும் இவர்களின் சூழ்ச்சிகள் நமது உலமாக்கட்கும் புலனுகாமற் போகவில்லை. உலமாக்கள் ஒளிந்து திரியும் இக் காதியானிகளை வலிந்திழுத்துச் சந்திக்குக்கொண்டு வந்துவிட்டனர். தம்மை வெளிப்படுத்திய இவ்வுலமாக்கள்மீது இக் காதியானிகட்கு எத்துணைக் கோபம் உதிக்கும்! வெஞ்சினத்தால் வெகுண்டு உலமாக்களையும், அவர்களோடு சார்பு கொண்டவர்களையும் இத்தீய கொள்கையினர் முல்லாக்கள் என்றும், தற்காலப் போக்கறியாதார் என்றும், மற்றும் பல்வேறுகத் தூற்றுவாராயினர்; பொறுமை கொண்டவர்கள் என்று இழித்துரை கூறினர். எனினும் இவர்கள் இயக்க மெல்லாம் மயக்கமாகவே முடிந்தது. இவர்கள் மாயப்

பிரசாரப் படுகுழியில் சில இளைஞர்களே ஆழ்ந்தனர். சில்லோரே தம் கூற்றுக்களை ஒப்புக்கொள்ளுகின்றனர் என்று கண்டும் அதனால் பின்னிடையாது, இறுமாந்து மீண்டும் இவர்கள் தம் தீய கொள்கைகளை நாடோறும் பரப்பிவருகின்றனர். இம்மிஷனரிகள் இத்துடன் நின்றார்களல்லர். அந்தோ! திருக்குர்ஆனுக்கும் உர்துவிலும் ஆங்கிலத்திலும் முகம்மது அலி, எம்.ஏ., எல்.எல்.பி. என்னும் காதியானி மொழிபெயர்த்து விரிவுரை கூறியிருக்கின்றார்! விரிவுரை என்றால் அதனை யாரே ஏற்பர்? அதில் மலிந்து காணப்படும் பெருந் தவறுகளையும், இமாம்களுக்கும் முபஸ்ஸிரீன்கட்கும் மாறுபட்ட பல கூற்றுக்களையும், (இமாம்களேன்) நபிகள் நாயகமவர்கள் திருவாக்கிற்கே முரண்பட்ட பல கூற்றுக்களையும் கண்டு எந்த உண்மை முஸ்லிம்தான் வாளாவிருப்பர்? எனவே, இவ்வுலக முழுதும் உள்ள உலமாக்கள் அனைவரும் அதனை ஒருமுகமாய் நிராகரித்து விட்டனர்; அதனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்; இஸ்லாமிய அரசாங்கங்கள் அந் நூற்களைப் பறிமுதல் செய்தன; இத் தீய கொள்கைகளைப் பிரசாரம் புரிபவரைக் கல்கொண்டு தாக்கி வதை புரிந்தனர். இத்துணை இழிந்த விறிவுரை, காதியானி களின் தமிழ்நாட்டு மேலாட்கள் (Agents) தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டு வருகின்றனர். அஹ்லுஸ் ஸுன்னத்து வல் ஜமா அத்தாரின் மூல கொள்கைகளைப் பாதிக்கும் பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, சுன்னத்து வல் ஜமாஅத்தார் இனியும் வாளாவிருப்பது வீண் என்று கருதி காதியானிகளின் கட்டறுக்கத் தலைப்பட்டனர். இதன் முதன் முயற்சியாகவே நம் சங்கம் நிறுவப்பெற்றது. இதன் நோக்கங்களை இனிது நிறைவேற்றுமாறு இச் சங்கத்தினர் ஆற்றி வரும் தொண்டு அளவில் சிறப்புடையதாகும். எனவே, சுன்னத்துவல்ஜமா அத்தார்கள் இவ்வுபரிய இன்றியமையாத அரிய ஸ்தாபனத்தை மென்மேலும் வளர்க்க முற்படுவார்களாக.

நாம் சங்கம் நிறுவியதற்கு தற்காலச் சான்றுகள் பல துவக்கத்தில் எடுத்துக் காண்பித்துள்ளோம். இதற்குப் புராதனச் சான்றும் உளது. அதுதான் நபிகள் நாயகம் அவர்கள் எல்லாச் செயல்களையும் எதேச்சாதிகாரத்தோடு செய்யாது தம் தோழர்களோடு கலந்துரையாடி முடித்தமையே யாகும். குறைஷிகட்கும் பனூகைஸ் குலத்தார்க்கும் இடையே ஓர் போர் மூண்டது. அதுகால் அவ்விரு கூட்டத்தாரையும் நாயகமவர்கள் சமாதானப்படுத்தினார்கள். அச் சமாதான முறியின்கண்ணுள்ள சட்ட திட்டங்கள் இற்றைக்கும் எல்லாச் சங்கங்களாலும் எடுத்தாளற்குரியனவா யிருப்பது வியத்தற்குரியதோர் உண்மையாகும். அவையாவன:— துன்மார்க்கத்தை அகற்றவேண்டும். மக்கள் அச்சமின்றி வாழும்படி செய்யவேண்டும். பிரயாணிகளுக்குரிய நலன்களைச் செய்து கொடுத்தல் வேண்டும். ஏழைகட்குதவி செய்தல்வேண்டும். துன்பிழைப்பவர்களைக் கண்டித்துத் துன்புறுத்தப் பெற்றவர்கட்கு ஈடு செய்துதரல் வேண்டும். நபித்துவம் பெறுதற்கு முன்னரேயே நாயகமவர்கள் இத்துணை உயர்ந்த சட்ட திட்டங்களை அமைத்து பொதுச் சேவைகள் செவ்வனே நடைபெறுமாறு செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நல்லடியார்களின் செயல்கள் அவர்கட்கிடையில் ஆலோசிக்கப் பெற்றனவாயிருக்கும் எனத் திருமறையும் முரசிடுகின்றது. ஆதலின் முஸ்லிம்கட்குச் சங்கங்கள் இன்றியமையாதன; இச் சங்கங்களை வளம்படச் செய்வதும் முஸ்லிம்களின் இன்றியமையாத கடமையாகும். முஸ்லிம்களே! விழிமின் !!

தொழுகையின் தத்துவங்கள்.

ஜனுப் மௌலவி எஸ். ஏ. முஹம்மது அலீ சாஹிப் (பாக்கவி) வரைவது.

இவ்வுலக மக்கள் ஏக பரம்பொருளாகிய ஆண்டவனை வணங்குவதற்காக அனுட்டிக்கும் பலதிறப்பட்ட வணக்க முறையில் இஸ்லாமியாசாரத்தில் நம்முஸ்லிம்கள் அனுஷ்டிக்கும் தொழுகை முறையே சாலச்சிறந்ததாகும். இத் தொழுகையில் ஆன்மார்த்த சாதன மனைத்தும் அமைந்திருப்பதேபோல் உலகார்த்த நலன்களும் பல அமைந்துள்ளன. தொழுகையின் பயனாய் ஆன்மப் பக்குவமும், மனத்தூய்மையும், சரீரசக்தியும் உண்டாகின்றனவென்பது வெளிப்படை. நாடோறும் ஐந்துநேரமும் தொழுதுவருவார் நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும் பெற்றுத் திகழ்கின்றனரென்பதுங் கண்கூடு.

இஸ்லாமியத் தொழுகை முறைக்கு அரபியில் “ஸலாத்” எனப் பெயர் கூறப்படும். இதற்குப் பிரார்த்தித்தல், பணிதல், கண்ணியப்படுத்தல், பக்தியில் ஈடுபடல் எனப் பல பொருள்களுண்டு. உண்மையில் தொழுகையில் இகபர நற்சாதனத்துக்காகவும் ஆன்மபக்குவத்துக்காகவும் பிரார்த்தித்தல், ஆண்டவன் பெருமையை யுன்னி அடியான் பணிந்து வணங்குதல், எல்லாம் வல்ல இறைவனை புகழுரையாலும் ஸ்தோத்திர வாசகத்தாலும் போற்றுதல், பக்தியெனும் தெய்வ விசுவாசத்தில் ஆழ்ந்து தியானித்தல் முதலிய அம்சங்களெல்லாம் இனிது அமைந்துள்ளன. நியமமாய்த் தொழுதுவருவதனால் துர்க்குணம் தீய நடத்தை, மூர்க்கம், சோம்பல் ஆகியவெல்லாம் நீங்கி மனத்தூய்மை, நல்லொழுக்கம், சாந்தம், உற்சாகம் இவைகளுண்டாகின்றனவென்பது உண்மை. சுருங்கக் கூறுமிடத்து தொழுகையின் ஒவ்வோரம்சத்திலும் ஆழ்ந்த கருத்துகளும், அரிய தத்துவங்களும், உயரிய நோக்கங்களும், பலதிறப்பட்ட நற்பலன்களும் அமைந்துகிடக்கின்றனவென்பது வெளிப்படை.

மேலும் தொழுகைக்கான ஒலுவு அல்லது தயம்மம் செய்தல் கஅபாத்திசையை முன்னோக்குதல், பாங்கு சொல்லுதல் முதலிய பலபுற அம்சங்களுள. அவ்வாறே தொழுகையினுள் தக்பீர் (அல்லாஹு அக்பர்) உச்சரித்தல், குர்ஆன் வாக்கியங்களைப் ஓதுதல், ஜபித்தல், கைகளை உயர்த்துதல், குனிதல், நிமிர்தல், அஷ்டாங்கமும் நிலத்திற் படுமாறு வணங்கி “ஸஜ்தா” செய்தல் முதலிய அகஅம்சங்களும் பலவாம். இவ்வம்சங்களுக்கெல்லாம் ஆழ்ந்த பொருளும், விழுமிய தத்துவங்களும் மிளிர்கின்றன. ஓரம்சமேனும் இஸ்லாமியத் தொழுகையில் வீணானதாயில்லையென்பது வெளிப்படை. தத்துவப் பொருட்களில் சிலவற்றினை ஈண்டு விளக்குவாம்.

கஅபாத்திசையை முன்னோக்குவதேன் ?

(1) கஅபாவானது உலகத்துக்கே மத்திய ஸ்தலமாகும். ஆண்டவனை வணங்குவதற்காக கட்டப்பட்ட ஆலயங்களில் முதன்மையானதுமாகும். இப்புண்ணிய ஸ்தலமானது ஐம்பெரும் நபிமார்களால் நிர்மாணித்து நிலைநிறுத்தப்பட்டதாகும். முறையே, ஹஜ்ரத் நபி ஆதம் (அலை), ஹஜ்ரத் நபி நூஹ் (அலை), ஹஜ்ரத் நபி இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) ஆகியவர்கள் கஅபாவின் ஸ்தாபகர்களும், பரிபாலன கர்த்தாக்களுமாவர். இவ்வுயர்வு மிக்க நபிமார்களால் ஏற்படுத்தப்பட்ட கஅபாவானது ஆண்டவனுக்கு மிகவும் விருப்பமான ஸ்தலமாகும். ஆண்டவன் மக்கட் கோடிகளுக்கு அதனையொரு புண்ணியஸ்தலமாக்கியுள்ளான். இத்துணைப் புனிதமிக்க கஅபாவைத் தொழுகையில் முன்னோக்குதல் ஆண்டவனை முன்னோக்கிக் கொள்வதற் குபமான மாகும்.

(2) கஅபாவானது “பைத்துல் முகத்தஸ்” பள்ளிவாயிலை விட சிறப்புடையதாகும். ஏனெனின் இப் பள்ளிவாயில் ஹஸ்ரத் நபி ஸுலைமான் (அலை) அவர்கள் ஒருவரால்மட்டும் நிர்மாணிக்கப் பட்டதாகும்.

ஆனால் கஅபாவானது ஐம்பெரு நபிமார்களால் கட்டப்பட்டதும், பரிபாலிக்கப்பட்டதுமாகும். ஆனதுபற்றியே பைத்துல்முகத்தஸைவிட கஅபா உயர்வுடையதாகும். கஅபாவை முன்னோக்குதற்குரிய பல காரணங்களில் இதுவுமொன்றாகும்.

(3) உலகமனைத்தும் பரவியுள்ள சர்வ முஸ்லிம்களும் ஏகமாய் ஒரே புண்ணிய ஸ்தலத்திசையை முன்னோக்கித் தொழுவதில் ஒற்றுமையும், சன்மார்க்கத்தில் யாவரும் ஒரே விதத்தினர் என்பதும் எடுத்துக் காண்பிக்கப்படுகின்றது.

தொழுகைக்கு பாங்கு சொல்லப்படுவதேன்?

(1) தொழுகை முஸ்லிம்கள் பல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாய் நிறைவேற்ற வேண்டிய வணக்கமாகும். இதற்கென்று யாவரும் ஓரிடத்தில் வந்து குழுமவேண்டும். அங்ஙனம் கூடும் ஜனங்களுக்கு ஏக காலத்தில் முன்னறிக்கைச் செய்யப்படல் வேண்டும். ஆகவே முஸ்லிம்களெல்லோரும் வணக்க ஸ்தலமாகிய மஸ்ஜிதுக்கு வந்து ஜமாஅத்துடன் தொழுமாறு அறிக்கையாகிய பாங்கு கூறப்படுகின்றது.

(2) வணக்கத்துக்காக பிரகடனஞ்செய்யும் முறைகளில் பாங்குசொல்வதே சாலச் சிறப்புடைத்தாயிருக்கின்றது. பாங்கில் ஆண்டவனின் திருநாமம் உச்சரிக்கப்படுகின்றது. தெய்வத்தியானமும் சாட்சியமும் புரியப்படுகின்றது. இதனை யாவரும் அன்புடன் கேட்டு உணர்ச்சிகொள்கின்றனர்.

தொழுகைக்கு ஒலுவு செய்வதேன்?

ஆண்டவனைத் தியானித்து வணங்குவதற்குப் பரிசுத்தம் அத்தியாவசியமானதாகும். சுத்தம் அகச்சுத்தம், புறச்சுத்தம் என இருவகைத்தாம். அகச்சுத்தம் நற்குணநல்லொழுக்கத்தாலும், தெய்வபக்தியாலும் உண்டாகும். புறச்சுத்தம் ஸ்தூல உருப்புக்களை தெளிநீர்கொண்டு கழுவிக்கொள்வதால் உண்டாகும். முதலில் புறம்தூய்மையாய் விட்டால் அகத்தூய்மை தானே உண்டாகும். ஆகவே சுத்தமான ஜலத்தைக்கொண்டு உடலினைச் சுத்தமாக்கிக்கொள்ளப்படுகிறது.

தயம்மம் மண்ணால் செய்யப்படுவதேன்?

மனிதச் சிருஷ்டியின் மூலப்பொருட்கள் (அனாஸிர்) நான்காகும். அவை மண், நீர், தீ, காற்று ஆவன. அவற்றில் சுத்தத்திற்கு உபயோகமாவது நீர். ஒலுவுக்காக நீர் கிடைக்காவிடின் மற்ற முப்பொருட்களிலொன்றால் சுத்தம்செய்யவேண்டும். மானிட ஸ்தூல தேகத்துக்கு அக்கினி சத்துருவாகும். காற்று கையினால் பிடிக்கவோ எடுக்கவோ இயலாத பொருளாகும். எஞ்சியிருப்பது மண்ணேயாகும். எனவே, சுத்தமான மண்ணைக்கொண்டு முறைப்படி தயம்மம் செய்யப்படுகின்றது.

ஒலுவில் கரம், வாய், நாசி கழுவுவதேன்?

அகத்தூய்மைக்குப் புறத்தூய்மை வேண்டும்; புறத்தூய்மைக்குச் சுத்தமான நீர் வேண்டும்; சுத்தமான நீர் என்பதை யுணர்ந்துகொள்ள உபாயம் வேண்டும்; சுத்தமான நீர் என்பதற்கு நிறம், உருசி, வாசனை மூன்றும் பிரதான அடையாளங்களாம். ஒலுவுக்கு ஆரம்பத்தில் நீரைக் கரத்திலெடுத்து அதன் நிறம் சரியாயிருக்கிறதா? அது திரவமாயிருக்கிறதா என்று உணரப்படுகின்றது. பின்னர் நீரை வாயிலிட்டு அதன் உருசி ஒழுங்காயிருக்கிறதா என்பதையும் பரிசோதிக்கப்படுகின்றது. பின்னர் நீரை மூக்கில் முகர்ந்து அதன் வாசனை சரியானபடியிருக்கிறதா எனக் கவனிக்கப்படுகிறது. இம் மூன்று அம்சமும் கவனிக்கப்பட்ட பின்னர் முகம், கை, தலை, கால் முதலியன கழுவப்படுகின்றன.

தொழுகையில் கை உயர்த்தப்படுவதும் தக்பீர் சொல்லப்படுவதுமேன்?

(1) தொழுகையில் மனமும் நாவும் அங்கமும் ஒருமித்து ஒரே தன்மையாக இயங்குகின்றன. மனம் இறைவனின் மான்மியத்தை தன்னகத்தேகொண்டு மாண்புபடுத்துகின்றது. நாவும் அப்பரமானின் திருநாம குணங்களை பஜித்துக் கண்ணியப்படுத்துகின்றது. ஆதலின் இவ்வாறே அங்கமாகிய கரமும் அவ்வாண்டவனின் மகாத்மியத்தை உயர்த்துவான்போல் தொழுகையில் உயர்த்தப்படுகின்றது. இங்ஙனம் அனுஷ்டிப்பதால் ஓரடியான் தன் இறைவனை வாக்காலும் மனத்தாலும் உடலாலும் போற்றித்துதித்து வணங்குவ தாகின்றது.

(2) பொதுவாக ஒருவன் ஒரு பொருளின் பருமனை விளக்குங்கால் வாயால் கூறுவ

தோடு கரத்தாலும் உத்தேசமாய் அளவிட்டுக் காட்டுதலைக் காண்கின்றோம். அவ்வாறே தொழுகையில் "அல்லாஹூ அக்பர்!" (ஆண்டவன் மகாப் பெரியவன்) என்று கூறுங்கால் கரத்தையுயர்த்தி ஆண்டவனின் மகாத்மியம் மிகப் பெரியதென்பதை சுட்டிக் காட்டுதல் சிறப்புச் செயலேயாகும்.

(3) தொழுவார்தம் தூய உள்ளத்தின்கண் இறைவன் எழுந்தருளுவதாய் பாவிக்கபடுகின்றது. அதுசமயம் திரிகரண சுத்தயுள்ள தொழுகையாளி இறைவனைக் கண்டு வியப்படைகின்றார். எனவே இதுசமயம் அல்லாஹூ அக்பர் (ஆண்டவன் மகாப் பெரியவன்) என இருகரங்களையும் உயர்த்திக் கூறுகின்றார். உலக வழக்கிலும் ஓரரசன் சமுகத்தில் பிரஜையொருவன் தோன்றுங்கால் இரு கரங்களை உயர்த்தியோ, அசைத்தோ, கட்டிக்கொண்டோ, ஸலாம் ஆதாப்செய்தோ கண்ணியப் படுத்துவது பிரசித்தம். அவ்வாறே தொழுகையாளி ஆண்டவன் திருச்சமுகத்தில் தோன்றியதாய்ப் பாவித்து இரு கரங்களையும் உயர்த்தித் தக்பீர் கூறி ஆண்டவனின் மான்மியத்தை உயர்வாக்குதல் சிறப்புடைத்தாம்.

(4) கடலில் வீழ்ந்து மூழ்குவாரொருவன் தன் இருகரங்களையும் மேலுயர்த்தித் தன்னைக் காப்பாற்றுமாறு இறைஞ்சுவதை உணர்ந்துள்ளோம். அங்ஙனமே தொழுகையாளி, உலகப்பாசங்கள், பாபங்கள் அதர்மங்கள், மலிந்து நிகழும் இவ்வுலகினின்றும் தன்னைக் காத்து சன்மார்க்கக்கரை சேர்க்குமாறு இருகரங்களையும் உயர்த்தி ஆண்டவன்பால் இறைஞ்சுகின்றான். இதில் இன்னும் ஆழ்ந்த கருத்துக்கள் உள்ளன.

தக்பீரின் மேன்மை

தொகையில் இரு கரங்களையும் உயர்த்தி தக்பீர் (அல்லாஹூ அக்பர்) கூறி கட்டிக்கொண்டு பணிவது, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருச்சமுகத்தின் கைகட்டி மரியாதையோடு பணிதலுக் கொப்பாம். இங்ஙனம் தக்பீர் கட்டுதல் இமாமுடன் தொடர்ந்து செய்தல் நனி சிறந்ததாம். தக்பீர் தஹ்ரீமாவை இமாமுடன் தொடர்ந்து அனுஷ்டித்தலின் மேன்மையைப்பற்றி ஹதீதுகளிலும், பிக்ஹூ கிரந்தங்களிலும் அதிகம் வந்துள்ளது. ஈமானுக் கடையாளம் தொழுவதாகும். தொழுவதற்கடையாளம் முதல் தக்பீர் கட்டுவதாகும். தக்பீர் கட்டுங்கால் கைகளை யுயர்த்துவதால் ஓர்வித உள்ளச் சப்பாடும் பக்திப் பெருக்கும் உதயமாகின்றன.

பிரிதோரு ரகஅத்திலும் இரு ஸஜ்தா யிருப்பதேன்.

அல்லாஹூத் தஆலா ஆதியில் ஆதம் நபியைச் சிருஷ்டித்து, அம்முதல் மனிதப் பெரியார்க்கு பணிந்து ஸஜ்தா செய்யுமாறு ஆண்டவன் எல்லா மலக்கு (வானவர்) களுக்கும் கட்டளையிட்டான். அவ்வாறே எல்லா மலக்குகளும் பணிந்து ஸஜ்தா செய்தனர். இப்லீஸ் மட்டும் தெய்வக்கட்டளையை நிராகரித்தனன். அதுபற்றி ஆண்டவனால் சபிக்கப்பட்டுப் போயினன். முதல் ஸஜ்தாவினின்று சிரந்தூக்கிய மலக்குகள், இப்லீஸின்மீது அல்லாஹ்வின் லஅனத் பீடிக்கப்பட்டமையை கண்டு மீண்டும் ஆண்டவனுக்கு மற்றொரு ஸஜ்தாவும் நிறைவேற்றினர். இதன்படியே மனிதரும் ஆண்டவனுக்கு இரு ஸஜ்தாக்கள் புரிந்து தொழுதல் சிறப்புடையதாயிற்று எனக் கூறப்படுகின்றது.

ஐந்துநேரம் தொழுவதேன் ;

(1) இறைவன் நம் மானிட ஜீவகோடிகட்கு கண், மூக்கு, செவி, நாவு, ஸ்பரிசம் என ஐம்புலன்களை யளித்துள்ளான். இந்த ஐம்பெரும் "நிஅமத்து" களுக்காக ஐங்காலம் தொழப்படுகிற தென்பது ஒரு தத்துவக் காரணமாகும்.

(2) புனித "மிஃராஜி"ன் இரவில் உலக தயாளர் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் இறைவன் திருச்சமுகத்தை நண்ணி 50-நேரத் தொழுகை விதியாக்கப்பட்டுத் திரும்புங்கால் ஹஸ்ரத் மூஸாநபியவர்களது தூண்டுதலின் பேரில் எம்பெருமானாரவர்கள் ஐந்து முறை மீண்டும் மீண்டும் இறைவன் திருச்சமுகமணுகி50-நேரத் தொழுகையினை ஐந்து நேரமாக்கிக் கொண்டார்கள்.

(3) பண்டைக்கால மக்கள் நீண்ட வயதுடையவர்களா யிருந்தனர். அன்னோர்மீது அதிகமான வணக்கங்கள் விதியாக்கப்பட்டிருந்தன. ஆகவே அதிகமான புண்ணியந் தேடி வாழ்ந்தனர். ஆனால் இறுதி நபியின் உம்மத்தாகிய நாம் குறைந்த ஆயுளுடைய

வர்களாகவும், சிறிய தோற்றத்தினராகவும், சொற்ப பலமுடையவர்களாகவு முள்ளோம். எனினும் நம் எளியோர்க்கும் புராதன மக்களைப் போன்ற மகாப்புண்ணியம் கிடைப்பான்வேண்டி "ஒருவன் ஒரு நன்மையை கொணர்வாராயின் அதற்காக அதைப் போன்ற பத்து நன்மைகளுள" என ஆண்டவன் கூறியுள்ளான். ஆகவே ஐந்து நேரத் தொழுகையில் ஐம்பது நேரத்தொழுகையின் புண்ணியமுண்டு.

தொழுகையில் ருகூஃ, ஸஜ்தா யிருப்பதேன்?

(1) தொழுகையானது புனிதமானவணக்கமாயிருப்பதுடன், மனித சுகாதார வாழ்க்கைக்கவசியமான சரீரப்பியாஸையாகவு மிருக்கின்றது. சரீரசுகமிருந்தாற்றான் தொழுகை நோம்பு, ஹஜ்ஜு முதலிய வணக்கம் புரிவது சாலும். மருந்தில்லா சிகிச்சையான வியாயாமம் புரிந்தாற்றான் தேகசுகமுண்டாகும். ஆகவே மனிதர்க்கு அவசியமான வணக்கம், சரீராப்பியாஸம் இரண்டும் தொழுகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவேதான் தொழுகையில் நிற்பது, குனிவது, எழுவது, பணிவது, உட்கார்வது, கழுத்துத் திருப்புவது போன்ற சரீராப்பியாஸ முறைகள் அமைந்துள்ளன.

(2) ஆண்டவனைச் சதாகாலமும் வணங்கிக்கொண்டிருக்கும் தேவ தூதர்கள் பல திறத்தாராவர். நின்றுகொண்டு தக்பீர், தஹ்லீல் சொல்லி ஜபிப்போரும், ஓயாது குர்ஆன் ஷரீபை ஓதுவோரும், "ருகூஃ" செய்து (குனிந்து) "தஸ்பீஹ" ஓதிக்கொண்டிருப்போரும், "ஸஜ்தா"வில் பணிந்து ஜபித்துக் கொண்டிருப்போரும், உட்கார்ந்து "அத்தஹிய்யாத்" ஓதுவாரும் பலவகையினருளர். "கய்ருல் உம்மத்" தான நம்மக்களுக்கு அப்படிப்பட்ட நன்மையெல்லாம் கிடைக்க வேண்டுமென்று மேல்படி எல்லா அம்சமும் தொழுகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள.

தொழுகையில் 7-பர்ஜுகள் இருப்பதேன்

மானிட தேகமானது பிரதானப் பொருட்களாகிய மூளை, நரம்பு, சதை, எலும்பு, இரத்தம், ஜவ்வு, சருமம் ஆகிய 7-கூறுகளால் அமைக்கப்பட்டுள்ளது. தொழுகை இதற்குரிய "ஷுக்ராக"வும் இருப்பான் பொருட்டு தொழுகையில் தக்பீரெதஹ்ரீமா, கியாம், கிராஅத், ருகூஃ, ஸஜ்தா, இறுதி கஃதா, தன்னுணர்வு கொண்டு தொழுகையை முடிப்பது ஆகிய ஏழு பர்ஜுகள் ஏற்பட்டுள்ளவென்று அறிஞர்கள் கூறுகின்றனர். உடலின் ஏழு அம்சங்களில் யாதேனுமொன்று கெட்டுப்போமாயின் தேகம் சீர்குலைவதுபோல், ஏழு பர்ஜுகளில் யாதேனுமொன்று கெடுமாயின் தொழுகையும் கூடாததாய்விடுகின்றது.

5-நேரத் தொழுகையில் 17-ரக்அத் இருப்பதேன்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர் மிஃராஜ் இரவில் 7-வானங்கள், 8-சுவனங்கள், அர்ஷு, குர்ஸு ஆகிய 17-ஸ்தலங்களைத் தரிசித்தார்கள். இப்படிப்பட்ட ஸ்தல தரிசனத்தால் கிடைக்கும் புண்ணியத்தைப் போன்றதேனும் நம் உம்மத்தவர்க்கு கிடைப்பதற்காக ஐங்நேரத் தொழுகைகளில் 17-ரக்அத் ஏற்படுத்தப்பட்டுள்ளது. "தொழுகையானது முஃமின்களுக்கு மிஃராஜாகும்" என்னும் ஹதீதுக்கேற்ப தொழுகையில் மிஃராஜின் பலனுண்டு என்பது மிகையாகா.

7-பர்லும் 17-ரக்அத்தும் இருப்பதேன்.

பர்ஜு ஏழும், ரக்அத் பதினேழும் ஆக 24 ஆகின்றது. இரவு பகலுமான ஒரு நாளைக்கு 24-மணியாகின்றது. ஒரு முஸ்லிம் ஐந்து நேரத்தொழுகையில் 7-பர்ஜுகளையும், 17-ரக்அத்துகளையும் நிறைவேற்றுவானுயின் 24-மணி நேரத்து (சிறு) பாபங்களனைத்தும் மன்னிக்கப்பட்டுப் போகும்.

நேயர்காள்! தொழுகையின் தத்துவங்களையும், மேன்மையையும் விவரிப்பதெனில் விரியும். தொழுகையின் மான்மியத்தையுணர்ந்து நாடோறும் தவறாது தொழுவீர்களாக. வஸ்ஸலாம்.

இஸ்லாத்தின் அரும்பெருந் தியாகிகள்.

(ஜனப் எம். சுல்த்தான் சாஹிப் வரைவது)

இற்றைக்குப் பதின்மூன்றரை நூற்றாண்டுகட்கு முன்னர் தீனுல் இஸ்லாமானது அஞ்ஞான அந்தகாரத்திடையே மெய்ஞ்ஞான வளர்பிறைபோல் இலங்கியது. அக்காலே இஸ்லாத்துக்கு எதிரிடையாக குப்பார்கள் பலதிறப்பட்ட சொல்லொணு இன்னல்களிழைத்துவந்தனர். இஸ்லாத்தின் தூய நிலவொளியை எதிரிகளின் சூழ்ச்சிகளாம் கார்மேகங்கள் சூழ்ந்து கவிந்து மறைக்க முயன்றும், அதனொளி மங்கிற்றிலது. நெருக்கடியான அக்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியிருந்த முஸ்லிம் பக்தகோடிகள் இஸ்லாமிய தவ்ஹீதின்பால் நெகிழாப்பற்றும், அன்புங்கொண்டிலங்கிவந்தனர். இன்னோர் இவ்வுலகசுகபோக சாதனமனைத்தினும் இஸ்லாத்தின் தூயஞானபக்தியையே சிறந்ததென மதித்திருந்தனர். தங்கள் ஜீவியத்துக்கே இடையூருய்த் தோற்றிய துன்ப வெள்ளங்களைத் தங்கள் திடச்சித்தம் என்னும் கலன் கொண்டு கடந்து உண்மைக் கரையேறினர் அப் பெருந் தகையினர்.

மேலும் கி. பி. 612-ம் வருடம் லோக தயாளர் நபிகள் திலகம் முஹம்மத் ரஸூல் (ஸல்) அவர்கள் உலகமாந்தருக்கு இஸ்லாத்தை இனிது போதித்துவந்த காலத்தே, மக்காவின் குறைஷ் குலக்குப்பார்கள் எம்பெருமானர் (ஸல்) அவர்களது நற்பிரசாரத்துக்கும் முஸ்லிம்களது வாழ்க்கைக்கும் சொல்லொணுக் கொடுமைகளையும், எண்ணிலா இன்னல்களையும் இழைத்து வந்தனர் என்பதற்குச் சரித்திரம்சான்று பகர்கின்றது. இத்தகைய இடுக்கண் மலிந்த நிலைமையில் கூட நமது உலக தயாளர் நபிகள் திலகம் (ஸல்) அவர்களுடைய உத்தம சஹாபாக்களாகிய சத்தியத் தோழர்களும் இஸ்லாம் பிரசாரத்தை ஒரு சிறிதளவும் கைவிடாது மேன்மேலும் உயர் நிலைக்கே தீனுல் இஸ்லாத்தை ஏற்றிவந்தார்கள். இவ்வளவில் அப் பண்டைப் பெருந்தகையோர் புரிந்த தியாகங்களும், ஆற்றிய நற்றொண்டுகளும், சகித்த துன்பங்களும், ஈண்டு அளவிடற் பாலன வன்று. இஸ்லாத்தின் நன்மைக்காகவும், தங்கள் ஈமானின் பாதுகாப்புக்காகவும் அரும்பெருந் தியாகம்புரிந்து சர்வலோக கீர்த்திக் குரியார்களான "ஹஜ்ரத் பிலால் ஹபஷி, ஹஜ்ரத், அபூதர்ருல் கிபாறி, ஹஜ்ரத் குபைப், ஹஸ்ரத்ஜைத் (ரலி) ஆகிய சில பெரியோர்களின் அருந்தியாகங்களைமட்டும் ஈண்டு சுருக்கமாக எடுத்தோதுவாம்.

ஹஜ்ரத் பிலால் (றலி) அவர்களின் தியாகம்.

மக்காவின் அடிமைகளில் முதன் முதல் இஸ்லாத்தைத் தழுவியவர் அபூஅப்துல்லாஹ் பின் ருப்பாஹ் எனப்படும் ஹஜ்ரத்பிலால் ஹபுஷிஅவர்களேயாவர். இவர் அபிஸ்ஸினியர் வம்சத்தைச் சேர்ந்த நீக்ரோவகுப்பார். எனவே கருத்தமேனியும், பருத்த தேகமும், சிவந்த கண்களும், சுருண்ட மயிர்களும் உடையவராய் விளங்கினர்கள். இவ்வுத்தமர் தோற்றத்தில் புறத்தே கறுத்தவராய்க் காணப்படினும் உள்ளத்தும் நிரம்பிய தெய்வ பக்தியாலும், இஸ்லாத்தின் பற்றாலும், நாயக அன்பாலும், அகத்தே வெளுத்தவராய், நற்செயல்களுக்கு ஓர் மெய்ச்சான்றாய் விளங்கினர்கள். இப்பெரியார் இஸ்லாத்தைத் தழுவிய காலத்துப் புஜபல பராக்கிரமம் வாய்ந்த யௌவனப் புருடராகவும், வீர தீரத்திற்றேர்ந்தவராகவும் இனியஉரத்தகம்பீரக் குரலோசை வாய்ந்தவராகவும் திகழ்ந்தார்கள். எனவே இவர்கள் நபிகள் நாயகத்தின் காலத்தில் யுத்த வீரராகவும், மஸ்ஜிதில் பாங்கு சொல்லும் முஅத்தினகவுமிருந்து இஸ்லாமியத் தொண்டாற்றி கீர்த்திக்குரியவரானர்கள்.

இஸ்லாமியச் சூரியன் இளங்கதிரொளி பரப்பி உலகத்தைப் பிரகாசிக்கத் துவங்கிய காலத்தில் நமது ஹஜ்ரத் பிலால் (றலி) ஓர்

அராபிய குறைஷ் குலக்குப்பாரிடம் அடிமையாயிருந்தார்கள். இதுகாலேயே இன்னவர் நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்களுடைய இனிய மதோபதேசங்களைக் கேட்டு வந்தார்கள். எனவே, இஸ்லாமிய ஆரம்ப காலத்திலேயே ஹஜ்ரத் பிலால் (ரலி) எம்பெருமானார் திருச்சமுகத்தில் பரிசுத்த தீனுல் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாகிவிட்டார்கள். இவ்வுத்தமர் இஸ்லாத்திற்சேர்ந்த விஷயம் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவர் முஸ்லிமான பின்னரும் சிலகாலம் குறைஷ் குலக்குப்பார் எஜமானிடம் அடிமைப் பணி புரிந்துவந்தார். சின்னாட்கட்குப் பின்னர் இந்த எஜமானன் தன் அடிமையாகிய நம் ஹஜ்ரத் பிலால் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாகிவிட்டதை உணர்ந்துகொண்டனன். எற்கெனவே இஸ்லாத்துக்கும், நபிகள் நாயகத்துக்கும் கொடிய பகைவனுயிருந்துவந்த அக்காபிர் எஜமானன் ஹஜ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் திரஸ்கரித்துவிடுமாறு நிர்ப்பந்தப் படுத்தினன். ஹஜ்ரத் பிலால் அதற்கு இணங்கினரல்லர். எனவே அவ் வதிபன் பிலால் (ரலி) அவர்களைச் சொல்லொணுக் கொடுமைகட்கு உட்படுத்தினன். கொடிய வெய்யிலினும் கொதிக்கின்ற மணலினும் ஹஜ்ரத் பிலாலைக் கிடத்தி உடையினைக் களைந்து கைகால்களைப் பிணைத்து கசைகொண்டு கைசோர அடிப்பான். பல மணி நேரம் அங்ஙனமே அன்னந் தண்ணீரளியாது கொடிய வெய்யிலில் கிடத்திவிடுவான். சத்திய பிலாலவர்கள் இக் கொடுமைகளையெல்லாம் சகித்துக்கொண்டனரே யல்லாது இஸ்லாத்தை ஒரணுவும் திரஸ்கரிக்க இணங்கவேயில்லை. தன் எஜமானின் கொடுமை அதிகரிக்கும் போழ்தெல்லாம் அச் சத்தியரின் உள்ளத்தில் இஸ்லாத்தின்பற்றும் ஏக தெய்வ பக்தியும், திருநபி விசுவாசமும் அதிகரித்தே வந்தன. எஜமானன் தன்னைக் கோடையில் வீழ்த்திச் சாட்டைகொண்டு அடித்துத் துன்புறுத்தி வந்தபோழ்தெல்லாம் “அஹதுன்! அஹதுன்!!” என ஏகதெய்வத் திருநாமத்தை உச்சரித்து ஜபித்தனரேயன்றி எஜமானன் ஏவற்கிசைந்து இஸ்லாத்தைக் கைவிடுத்தார்களல்லர்.

இங்ஙனம் பன்னாட்கள் அக்கொடுமைகளைச் சகித்தனர். இறுதியிலொருநாள், காபிர் எஜமான் ஹஜ்ரத் பிலாலவர்களைச் சொல்லொணுக் கொடுமைக்குட்படுத்திக்கொண்டிருந்த கோரக்காட்சியை ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கண்ணுற்றனர். எனவே மனமிளகிக் கண்ணீர்வடித்து, அவ்வெளிய அடியார்பால் பேரிரக்கங்கொண்டு அடிமைக்குரிய விலைப்பொருளை அவ் வெஜமானனுக்களித்து மீட்டுக்கொண்டனர். தமது ஆளாய்விட்ட ஹஜ்ரத் பிலாலை அபூபக்கர் (ரலி) அவர்கள் உடனே உரிமையாளராக்கி விடுவித்து, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்தில் சேர்த்துவிட்டார்கள். எம்பெருமானார் அவர்கள் இந்நல்லடியாரை வரவேற்று தமது சத்தியத் தோழர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொண்டு சமத்துவமளித்தார்கள். ஹஜ்ரத் பிலால் அவர்களுடைய மதபக்தியையும், தெய்வ விசுவாசத்தையும், திட நம்பிக்கையையுமுணர்ந்து அவர்பால் கருணை பாராட்டினர்கள். தொழுகை நேரங்களில் பாங்கு சொல்லும் திருப்பணியையும் பிலால் (ரலி) பால் ஒப்படைத்தார்கள். ஹஜ்ரத் பிலால் அதான் சொல்லுந் தொனியானது கொடி மனத்துடையவருள்ளும் தெய்வீகமான ஓர் உணர்ச்சியையும், வசீகரத்தையும் உண்டாக்கத் தக்கதாயிருந்தது. இஸ்லாமிய ஆசாரத்தில் மஸ்ஜிதில்பாங்குச் சொல்வதற்காக முஅத்தினுக முதன்முதல் ஏற்படுத்தப்பட்டவர் ஹஜ்ரத்பிலால் (ரலி) அவர்களேயாவார்.

இஸ்லாம் மதம் நாளுக்குநாள் செழிப்படைய குப்பார்களின் தொல்லை அதிகரித்தது. குப்பார்களினின்றும் முஸ்லிம்கள் தங்களையும், இஸ்லாத்தையும் காத்துக்கொள்வான் வேண்டி போர்புரிந்த காலங்களில் நம் ஹஜ்ரத் பிலால் (ரலி) அவர்களும் ஓர் இணையற்ற போர்வீரராய் விளங்கி இஸ்லாத்திற்குச் சேவை புரிந்து வந்தார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றி மக்காவை விடுத்துத் திருமதீனவுக்கு ஹிஜ்ரத்துஞ்செய்துள்ளார். பலகால் எம்பெருமானார் (ஸல்) அவர்களுடனிருந்து பணிவிடையும் புரிந்துள்ளார். மேலும் இப்பெரியார் இத்தரணியை நீத்து இறக்குந்தருவாயும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அளித்த முஅத்தின் வேலையிலேயே தொண்டாற்றினரெனத் தெரிகிறது. ஹஜ்ரத் பிலால் (ரலி) இஸ்லாத்துக்காற்றிய தியாகம் தொண்டுகள் எண்ணில.

அனைத்தினையும் எடுத் தியம்பற்கு இயலா வெனச் சுருங்க வுரைத்தனம்.

ஹஜரத் அபூதர்ரு (ரலி)

ஹஜ்ரத் அபூதர்ருல் கிபாரீ (ரலி) அவர்கள் பெருந்தகைமை வாய்ந்த சஹாபியும், முஜாஹித்களின் தலைவருமாவார். இப்பெரியார் நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்) அவர்கள் திரு சமுகத்தில் பல சமயம் சேவை புரிந்துள்ளனர். இஸ்லாமிய யுத்தச் சமயங்களில் இவ்வீரதீரப் புருடர் அரும்பெருந் தியாகங்களும் புரிந்துள்ளனர். இவ்வீரர், இஸ்லாமிய ஆரம்ப காலத்திலேயே ஈமான் கொண்டவராவர். தமது சுதேசத்தில் வசித்துவந்தபோது இஸ்லாத்தின் மேன்மையைப்பற்றியும், நபிகள் பெருமானாரின் தூய வாழ்க்கையைப்பற்றியும் கேள்வியுற்று இஸ்லாத்தின்மீது தாமாகவே பற்றுக்கொண்டிருந்தார். எனவே இவர்தம் உற்றாருறவினரை விடுத்து மக்காவுக்கு வந்து எம்பெருமானார் சமுகத்தில் இரகசியவாகவே பரிசுத்த இஸ்லாம்மதத்தைத் தழுவிக்கொண்டார். இவர் இஸ்லாத்தின்மீதும், எம்பெருமானார் மீதும் கொண்ட அளவிடற்கரியபக்தி விசுவாச மேலீட்டால், தமது ஊர்க்குச் செல்ல மனமில்லாதவராய் மக்காவிலேயே நபிகளின் திருச்சமுகத்தில் தம்வாணாட்களைக் கழித்துவரத் துணிபுற்றார். இஸ்லாம் மதம் சிறிது புகழும் வியாபகமும் அடையும்மட்டும் தம் ஊருக்கே சென்றிருக்குமாறு எம்பெருமானார் கூறியதின்பேரில் அபூதர்ரு அவர்கள் அவ்வாறே செய்யலானார். இஸ்லாம் சற்று பிரசித்திபெற்றதும் மீண்டும் மக்காவுக்குச் சென்று எம்பெருமானார் திருக்குழாத்தில் சேர்ந்து இஸ்லாத்தின் தொண்டாற்றலானார்கள்.

தைரியமும், பராக்கிரமும்மிக்க இவ்வுத்தமர் குறைஷ்குலக்காபிர்கள் ஒருவர்க்கும்அஞ்சாத நெஞ்சம் படைத்தவராய் விளங்கினார். இஸ்லாத்தின்மீது இவர் அபரிமிதமான பற்றுக் கொண்டிருந்தமையால், இஸ்லாத்துக் கனுகூலமான செயற்கரிய பல செயல்களையும் துணிந்து செய்பவராய்க் காணப்பட்டார்.

அபூதர்ரு (ரலி) அவர்கள் மக்களிடையே இஸ்லாத்தின் ஜோதியைத் துரிதமாய்ப்பரத்த வேண்டுமென்ற உற்சாகம் மேலிட்டு ஒரு முறை கஃபா புண்ணியஸ்தலத்துக்குட் பிரவேசித்தார். ஆங்கு குப்பார்கள் 360-விக்கிரகங்களை வைத்திருப்பதைக் கண்டு அடக்கொணா ஆத்திரங்கொண்டார். தெய்வ பக்தி மேலீட்டால் "அல்லாஹு அக்பர்!" (ஆண்டவனே மஹாப் பெரியவன்) என கஃபாவின் நாற்புறச்சுவரும், அருகேயுள்ள மலைக்குன்றுகளும் எதிரொலிக்கிளம்புமாறு வீரகேசரிபோல் கர்ஜித்தார். இதனைக்கேட்ட காபிர்கள் நாராசம் காய்ச்சிச் செவியில் விடப்பட்டவர்கள்போல் ஆத்திரம் பூண்டு ஹஜ்ரத் அபூதர்ரு அவர்களைப்பிடித்து நையப் புடைத்துவிட்டனர். எனவே அவ்வுத்தமர் மூர்ச்சித்தவரானார். இவரது உணவற்ற நிலையைகண்ட ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் தூக்கிவந்து ஓர் அறையில்வைத்து உணர்வு தெளியவைத்தபின் அவரைநோக்கி "நண்ப! அபூதர்ரு! இனி காபிர்களின் சிலைகள் முன் எதேச்சையாய்ச்சென்று "அவ்வாறு கூறாதீர்," என்று கேட்டுக்கொண்டனர்.

மறுதினமும் ஹஜ்ரத் அபூதர்ரு (ரலி) அவர்கள் பக்தி மேலிட்டவராய் முன்னாட் போன்றே மீண்டும் கஃபாவுக்குள் சென்று "அல்லாஹ் அக்பர்!" எனப் பன்முறை ஆரவரித்தனர். பின்னரும் காபிர்கள் அபூதர்ரைப் பிடித்து நையப்புடைத்து மூர்ச்சிக்கச் செய்து வெளியிற் கிடத்திவிட்டனர். மறுநாளும் அபூதர்ரின் உற்சாகம் குன்றவேயில்லை. இவ்வாறே தொடர்ந்து 20-நாட்கள் வரை கஃபாவுக்குட் செல்வதும் "அல்லாஹு அக்பர்!" ஆண்டகையின் திருநாமத்தை உரத்துரைப்பதும் காபிர்களால் மூர்ச்சிப்பதுவுமா யிருந்தார். இறுதியில் காபிர்கள் களைத்துப்போய் இத்துணிச்சலானவரை இனி அடக்க முடியாதென விட்டுவிட்டனர். இந்த 'தக்பீர்' கோஷத்தின் பயனாய் இஸ்லாம் குறைஷியர்பால் ஒருவாறு பிரசித்தி யடைந்ததெனலாம்.

இஸ்லாம் சன்மார்க்கம் பூர்ணசந்திரனே போல் பூர்த்தியாகப் பரவி உலகின்கண் ஒளி பரப்பி; அதன்பின் எம்பெருமானார் (ஸல்) அவர்கள், இத்தரணியைவிட்டு மறைந்தபின் னருங்கூட, நமது ஹஜ்ரத் அபூதர்ருல் கிபாரீ (ரலி) அவர்கள் மூன்று கிலாபத் ஆட்சிக் காலம்வரை ஜீவித் திருந்துள்ளார்கள். நான்காம் கலீபாவான ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களது கிலாபத் காலத்தில் ஸிரியாவுக்கும்

சென்றிருந்தனர். இது காலை முஸ்லிம்களில் ஒரு சாரார் ரோமராஜ்ஜியத்தின் செல்வாக்கையும், ஆங்கு தமக்கு கிடைக்கும் சுகபோக பாக்கியத்தையும் இச்சித்து ஸிரியா (ஷாம்) வுக்குச் சென்றிருந்தனர். இத்தகைய சுய நலம் பூண்டவர்க்கத்தாரை அபூதர்ரு (ரலி) அவர்கள் திருத்தி, இனிய முறையில் நல்வழிக்கும், இஸ்லாத்தின் சாதாரண வாழ்க்கைக்கும் கரை சேர்த்தார்கள்.

அக்கால் அமீ முஆவியாக்களின் ஆட்சி ரோமராஜ்ஜியத்தாரின் ஆட்சியைப்போன்றே சிறப்புடைத்தா யிருந்தது. முஆவிய்யாக்கள் அக்காலை இஸ்லாமிய கிலாபத் ஆட்சிக்கும், இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் இடையூறான காரியங்களை இயற்றி வந்தார்கள். இவற்றினைக்கண்ட அபூதர்ரு (ரலி) அடிக்கடி முஆவியாக்களுடன் எதிர்த்தும், விவாதித்தும், கண்டித்தும் வந்தார். இஸ்லாத்தின் நன்மைக்காக இவ்வுத்தமர் தம் உயிரையும் தியாகம் புரியச் சித்தமாயிருந்தார். இதன் பயனாய் முஆவியாக்களின் பல இடையூறுகட்கும், சூழ்ச்சிக்கும் ஆளானார். எனினும் தனது கடமையைத் தொடர்ச்சியாய் ஆற்றிவந்தார் இறுதியில் முஆவிய்யாக்களின் அநீதத்தால் பிரசித்தியற்ற ஒரு சிற்றூரின்கண் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு, ஆங்கேயே கண் மறைவாய் வைக்கப்பட்டு, இஸ்லாத்தின் நன்மையைச் சிந்தித்தவராகவே தன் ஆயுட் காலத்தை இனிது முடித்தார்.

ஹஜ்ரத் ஜைத், ஹஜ்ரத் குபைப் (ரலி) இவர்கள் மார்க்கத் தொண்டு

ஹஜ்ரத் ஜைத் (ரலி) ஹஜ்ரத் குபைப் (ரலி) ஆகிய இரு பெரும் சிரேஷ்டரும் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தின் "தீனுல் இஸ்லாத்தின் தவ்ஹீதை" பிரசாரம் செய்பவர்களில் பிரதானிகளாக விளங்கினார்கள். ஹிஜ்ரீ 5-வது ஆண்டு சுற்றுப்புறப் பிரதேசத்து ஒரு அராபியக் கூட்டத்தினர் இஸ்லாத்தைத் தழுவியிருந்தனர். இவர்களெல்லோரும் இஸ்லாமியகல்வியும், ஆசாரமும் தெரியாதவர்களா யிருந்தனர். இன்னோரில் சிலரின் வேண்டுகோள்படி, அவர்கள் பகுதியில் இஸ்லாமியத்தொழுகை வணக்க ஆசாரங்களைக் கற்பிப்பதற்கும், கலாஞானம் போதிப்பதற்காகவுமென்று நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களிலிருந்து பதின்மரைத் தேர்ந்தெடுத்துப் பிரசாரகர்களாக ஆங்கு அனுப்பி வைத்தார்கள். இவர்களில் ஹஜ்ரத் ஜைத் ஹஜ்ரத் குபைப் ஆகிய இரு சிரேஷ்டருமிருந்தனர். இப்பதின்மரும் பிரசாரம் புரியவேண்டிய ஸ்தலத்தை யடையப் புறப்பட்டுச் சென்று "ரஜீஃ" என்னுமிடத்தை அணுகினர். முன்கூட்டியே சதியாலோசனைச் செய்திருந்த காபிர்க்கூட்டத்தினர் (தாங்கள் செய்து கொடுத்திருந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக) இப்பதின்மரை வந்து அதிக்கிரமமாய்த்தாக்கி எண்மரைக்கொன்று ஷஹீதாக்கிவிட்டனர். அவர்களுள் இருவரே தப்பினர். அவ்விருவர் ஹஜ்ரத் ஜைதும், ஹஜ்ரத் குபைபுமாவர். இவ்விருவர்களும் பிரதானமானவர்களாயிருந்ததால் இன்னோரை எவ்வாற்றாலேனும் தங்கள் பக்கல் சேர்த்துக் கொள்வதென்று காபிர்கள் எண்ணிக்கொண்டு இருவாரங்கள்வரை இருள்சூழ்ந்த சிறைக்கூடமொன்றில் அடைத்து வைத்திருந்தனர்.

இவ்விரு உத்தமர்களைக் காபிர்கள் பலவித ஆசைமொழி கூறி ஏமாற்றித் தங்கள்பால் ஈர்க்கவும் முயற்சித்தனர். இஸ்லாத்தை விட்டு மீண்டும் விக்கிரகாராதனைக்காரர்களாவரேல் பெருஞ்செல்வமும், அழகிய மாதரையும் மற்றுஞ் சுகபோக பாக்கியங்களையும் அளிப்பதாய்க் கூறினர். இதற்கு இவ்விரு உத்தமர்கள் இணங்கினார்களல்லர். எனவே கொடுந் துன்பங்களால் அவ் விருவரைக் காபிர்கள் தம் வயப்படுத்த முயன்றனர். சொல்லொணாக் கொடுமைகள் புரிந்தனர். பல துன்பங்களை இழைத்தனர். கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினர். இறுதியாய் அவ்வாறே அவ்வுத்தமர்களைக் கொல்லத் துணிந்தனர். சற்றும் இரக்கமில்லாக் குறைஷ்குப்பார்கள் முதலாவது ஹஜ்ரத் குபைப் (ரலி) அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்று ஷஹீதாக்கியேவிட்டனர். அந்தோ பரிதாபம்! இவ்வுத்தமச்சிரேஷ்டர் இஸ்லாமியப் பிரசாரத்துக்காக உயர் தியாகம் புரிந்தமை என்னே! என்னே!

பின்னர் ஹஜ்ரத் ஜைத் (ரலி) அவர்களைக் கொடிய காபிர்கள் கொலைக்களத்தில் நிறுத்தி இஸ்லாத்தை விட்டுவிடுமாறு வற்புறுத்திக் கூறினர். பின்னர் அச்சுறுத்தினர். எதற்கும் ஜைத் (ரலி) இணங்காததால் இவ்வுத்தமரைக்

கூறிய வாளால் சிறிதும் இரக்கமின்றிச் சிரச்சேதம் செய்து ஷஹீதாக்கிவிட்டனர். இவ்வாறு இஸ்லாத்தின்நன்மைக்காக இருபெரும் புண்ணியவான்களும் தமதினிய உயிரினைத் தியாகம் புரிந்தனர். ஆகவே முஸ்லிம் சோதரர்காள்! இப்பெரியோர்களின் தியாக வாழ்க்கையினின் படிப்பினைப் பெற்று இஸ்லாத்துக்கு நலன் விளைவிப்பீர்களாக!

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) என்னும் நூலில் தர்வூத்சா இழைத்த தவறு

நபிகள் நாயகத்தின் மாட்சி ஊன்றிப்படியுங்கள்.

(சென்றமாதத் தொடர்ச்சி)

ஆண்டவனிடத்திலிருந்து நபீ அவர்களுக்குக் கிடைத்த இறுதியான வாக்குத் தத்தம் இதுதான். திருக்குறுஆனிலுள்ள இந்த இறுதியான வாக்குறுதியைப் படித்துத்தெரிந்து கொண்ட எந்த முஸ்லிமும் 'நபீ அவர்கள் அந்த ஹிஜ்ரத்தின்போது எதிரிகளிடம் சிக்கிக் கொண்டிருப்பாராயின் நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப்பார்' என்று எழுதத் துணிவானு? மேலே கூறிய ஆதாரங்களும் இன்னும் இவைபோன்ற சல ஆதாரங்களும் திருக் குர்ஆனில் ஏராளமாகக் காணக்கிடக்கும்போதும் நபீ அவர்களுடைய பரிசுத்த வாழ்க்கைச் சரித்திரங்களிலும் நபீ அவர்கள் திருவாக்கு சம்பந்தமான நூல்களாகிய "முஸ்தத்ரிக்ஹாகிம்" "மஸ்நத்இப்ன் ஹன்பல்" "சஹீஹ்புகாரி", "ஜாமிஃதிர்மதி", "சஹீஹ்முஸ்லிம்" முதலியபிரபல கிரந்தங்களிலும் விசேஷ ஆதாரங்கள் இருக்கும்போதும் இவைகளுக்குமாறுக 1347 வருஷங்களுக்குப் பின்னர் திருக்குர்ஆனிய கலை நபீ திருவாக்குக்கலை, சரித்திரக் கலை முதலிய சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்கும் பாடசாலையை எட்டிக்கூடப் பார்த்திராத ஓர் ஆங்கில பி. ஏ. பட்டதாரி 'அந்த ஹிஜ்ரத்தின் போது அவ்விருவரும் எதிரிகள் வசம் சிக்கிக்கொண்டு டிருப்பார்களாயின் நிச்சயமாகக் கோல்லப்பட்டே போயிருப்பார்கள்' என்று சொல்லி நபீ அவர்களின் கண்ணியமான வாழ்க்கை இயல்பைக் கொலை செய்ய முன்வந்தால், நபீ அவர்களுக்குப் பின்னுல் அவர்கள் வாழ்க்கைச் சரித்திரக்கலைகளையும் திருக்குர்ஆனையும் நன்குணர்ந்து, அவைகளிலே தங்கள் வாழ்நாட்களைப் போக்கி இருக்கும் பக்த சிரோமணிகளான நமது உலமாக்கள் வாய்மூடி மௌனஞ் சாதித்து சும்மாயிருப்பார்களா? அவர்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறினுல் ஆண்டவனுக்கு உத்திரவாதம் செலுத்த வேண்டுவதில்லையா?

ஆகாயத்திலே பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலிய கிரஹங்களின் தன்மையையும், நிலையையும் பற்றி எடுத்துக் கூறுபவனும், அவைகளுடைய தாரதம்மியங்களைப்பற்றி அபிப்பிராயங் கொடுப்பவனும் வானசாஸ்திரக்கலையில் தேர்ச்சிபெற்ற ககோளசாஸ்திரி அதற்கு அருகனேயன்றி, பூகோளசாஸ்திரி அதில் பிரவேசிக்கப் பாத்திரனுவானு? பூமியின் தன்மையையும் அதன் தரா தரங்களையும் பற்றிப் பேசவும், அதைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கவும் முன்வருபவன் பூமி சாஸ்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற பூகோள சாஸ்திரியே யாவனல்லாது ககோளசாஸ்திரிக்கு அங்கு வேலையுண்டா? தாவர வர்க்கங்களைப் பற்றிப் பேசவும், அவைகளின் தன்மைகளை விளக்கவும் அவைகளைப்பற்றி அபிப்பிராயங் கொடுக்கவும் முன்வருபவன் தாவர சாஸ்திரியே யாவானல்லாது பிராணி சாஸ்திரிக்கு அங்கிடமுண்டா? மிருகவர்க்கங்களின் தன்மையையும் அவைகளின் குணுகுணங்களையும்

உபயோகங்களையும் பற்றிப் பேசுவதற்கும் அபிப்பிராயங் கொடுப்பதற்கும் முன் வருவோன் பிராணி சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்த பிராணி சாஸ்திரியேயன்றி தாவர சாஸ்திரி அவ்விஷயத்தில் தலையிட அருகனா? அப்படியே நமது நாயகம் றசூல் அதிபருடைய சரித்திரத்தைப்பற்றி பேசவும் அபிப்பிராயம் கொடுக்கவும் முன் வருபவன் முதலில் திருக்குர்ஆன் சம்பந்தமான கலைகளில் தேர்ச்சியடைந்தால் மட்டில் போதாது. மதத்தில் பரம பக்த சிரோமணியாகவும் அவன் இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால்தான் அவன் கொடுக்கும் அபிப்பிராயம் ஜனங்களைத் கெடுக்கக்கூடிய விஷப்பேச்சுகளின்றி இருக்கும். மற்றப்படி அவனுடைய வாக்கில் தீமைதான் பிரபலித்துக்காணும். சுருங்கக்கூறின் றசூல் அதிபரவர்கள் நபீ, றசூல் என்ற பதவியையும் அப்படியே நபீ றசூல் என்ற அந்த ஞான வார்த்தைகளிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களையும் ஞானமாயுணர்ந்து றசூல் நாயகம் அற்புத வரப்பிரஸாதம் பெற்றவர்கள் என்ற நம்பிக்கை எவருக் கில்லையோ அவர் பி. ஏ. பட்டதாரியானாலும் சரியே, வேறெவராயிருப்பினும் சரியே, இத்தகையோர் ஒரு சாதாரணமனிதனுடைய இயற்கையையும் புற இலக்ஷணத்தையும் போலவே நபீ அவர்களையும் கருதி ஒருசாதாரண மனிதன் விஷயத்தில் கொடுக்கும் அபிப்பிராயத்தை யொத்தே அவர்கள்பாலும் கொடுக்க முன்வந்து விடுகின்றனர். பொதுவாக மேற்கூறியவர் போன்ற பட்டதாரக் கோஷ்டிகள் நபீ அவர்களை ஒரு சாதாரண மனிதனை விட மேலாக ஒரு சமயம் கருதிய போதிலும் அவர்கள் உலகத்தைச் சீர்திருத்த வந்த ஒரு சீர்திருத்தக்காரர் என்ற அளவில் மட்டும் கருதவும் சொல்லவும் கூடிய ஒரு குறுகிய அறிவுக்குக் கட்டுப் பட்டும் போகின்றனர். அவர்கள் நபீ, றசூல், என்ற அப்பதவியின் உயர்ந்த ஞானக் கருத்தையும் ஆழ்ந்த தத்துவத்தையும் ஒரு சிறிதும் ஆய்ந்தோய்ந்து பாராமல் நபீ அவர்களை நம்மைப்போல், நம்மைப்போல், என்று அம்மட்டோடு சொல்லி முடிவுகட்டி யிடுகிறார்கள்.

பாவம்! என் செய்வர்! நுபுவ்வத், ரிஸாலத், வஹீ, இல்ஹாம், ரூஃயத் என்னும்பாடங்களைக் கற்பிக்கும் ஞான கலா சாலைகளில் போய் அவர்கள் உண்மையான ஞானப் பயிற்சி பெறாத குற்றமே யொழிய வேறொன்றுமில்லை. அதில் பயிற்சி பெற்றவர் எவரோ அவர் நபீ அவர்களைப்பற்றிப் பின் வருமாறு கொள்வர்.

நபீ அவர்கள் (பஷர்) படைப்புத்தான். படைப்பில் சிரேஷ்டர். அப்படியே அவர்கள் (இன்ஸான்) மனிதர்தான். மனிதரில் சிரேஷ்டர். அப்படியே அவர்கள் சிரேஷ்டர் தான். ஆனால் சிரேஷ்டமான இன்ஸானில் (இன்ஸான் காமில்) சம்பூரண மனிதர். அப்படியே அவர்கள் சம்பூரணமான மனிதரிலும் றசூல் பதவிபெற்றவர்கள். அத்துடன்கூடத் தூதாங்கத் தலைவரும் இறுதியான தூதருமாவார்கள். மேலும் அவர்கள் நபீ பதவி பெற்றவர்கள். ஆனால் (காத்தமுன் நபீ) இறுதியான தீர்க்கதரிசி. அவர்களுடைய ஹிருதயம் நமது ஹிருதயம் போன்றதே. ஆனால் அவர்களது நெஞ்சம் பிளக்கப்பட்டு அதில் தெய்வீக ஒளி நிரம்பி அவர்களுடைய ஹிருதயப் பெட்டியில் "வஹீ" அறிவிக்கப்பட்டு வந்தது. அவர்களுடைய நா, நம்முடையதைப் போன்றதே. ஆனால் அந்த நாவின் வழியாய் "வஹீ" புறப்பட்டது. அவர்கள் கண்கள் நமது கண்களை யொத்தவையே ஆனால் அவர்கள் பார்த்தகாட்சிகளை நாம் காண முடியாது. அவர்கள் கண் ஜிப்ரீலைப் பார்த்த கண்; அவர்களுடைய செவிகள் நம்முடைய செவிகள் போன்றனவே. ஆனால் அவை கேட்ட கேள்விகளை நாம் கேட்க முடியாது. அவர்களது கைகள் நமது கைகளைப்போன்றவையே. ஆனால் அவைகளால் நிகழ்த்தப் பெறும் நிகழ்ச்சிகள் நமதுகைகளால் நிகழ்த்தப்படமாட்டா. அவர்களது செய்கை தெய்வீகச் செய்கை. அவர்களுடைய கால்கள் நமது கால்களைப் போன்றனவே. ஆனால் அவை நடந்து சென்று நின்ற ஸ்தலத்திற்கு நாம் போக இயலாது. அவர்களுக்கு முன் வந்த எந்த றசூலும் அந்த ஸ்தலத்தில் அடியெடுத்து வைக்கப் பாக்கியம் பெறவில்லை.

இவ்வகையில் அவரைத் தெரிந்து கொள்ளாதவர் எவரோ, அவர் நபீ அவர்களும் நம்மைப்போல் மனிதனே, மனிதனே, என்று மாத்திரம் அடிக்கடி சொல்லியும் வரைந்தும் வருவர். நபீ அவர்கள் அடிக்கடி உங்களைப் போல் ஒரு மனிதன்தானென்றும், அப்படி அவர்கள் சொல்லியிரா விட்டால்தெய்வ அவதாரம்என்று ஜனங்கள் சொல்லி விடுவார்கள்

என்றும் அடிக்கடி அலட்சியமாய்ப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் அன்னர் எழுதி நபீ அவர்களின் மகிமையைக் குறைத்து வருவர். ஆனல் நபீ அவர்களைக் குறித்து ஆண்டவன் ஜனங்களுக்கு உங்களைப்போல் நான் ஒரு மனிதன்தான் என்று சொல்லும்படி திருக்குர்ஆனில் வந்த வாக்கியம் அத்துடன் முடியாமல் தொடர்ந்தே "என்னிடம் வஹீ அறிவிக்கப்படுகிறது" என்றிருக்கும் வாக்கை அடியோடு களைந்துவிட்டு, 'வஹீ' என்ற ஞானக் கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் "உங்களைப்போல் மனிதன்தான்" என்ற முடிவற்ற வசனத்தை மட்டும் சொல்லி நிறுத்தி விடுகின்றனர் (இவர் வஹிபின் கருத்தறியாது நேர்வழியில் செல்லும் ஒவ்வொரு முஸ்லிமும் வஹியை யடைய முடியும் என்று எழுதிப் பிணத்தியுள்ளார்.) வார்த்தைபைத் துண்டித்துச் சமயம்போல் தங்கள் புத்திக்குத் தக்கபடி திருக்குர்ஆன மாற்றிக்கூறும் சுபாவம் யாருக்கு உளதோ அவர்களே யூதசுபாவமுள்ளவர்கள். அல்லது யூத குணமுள்ளவர்கள் என்று மட்டும் சொல்லிவிட முடியாது. யூதர்களே! யூதர்கள். அவர்களுக்கு உலகத்தில் தலைசாய்க்க இடமிராது. அவர் எங்கும் சிதறுண்டு போவர்; மனம் போன போக்கிலே திண்டாடித்திரிவர்; மிருகத்தினுங் கேடாவர். அவர் போகுமிடமெல்லாம் இழிவடைவர். அவர்கள் ஓலமிடும் சத்தமும், எழுதும் எழுத்தும் உலகத்தைக் கலகத்திற்குள்ளாக்கும்; இரத்தம் சிந்துதலுக்கும் ஆளாக்கும். ஏனெனில் ஆண்டவனுடைய சாபம் அவர்களிடத்தில் பதிவாகிவிட்டது. இதனல் தான் உம்மில் குர்ஆனில் குறிப்பாய் ஆண்டவனுடைய கோபத்தில் சிக்குண்ட யூதருடைய பாதையில் எங்களை நடத்தாதேயென்று விண்ணப்பஞ் செய்யும்படி ஆண்டவன் நமக்குக் கற்பித்துக் கொடுத்திருக்கின்றான்.

பக்தர்களே! நபிகள் நாயகத்தின் பரிசுத்த வாழ்க்கையைப்பற்றி நமது பக்த சிரோமணிகளான முன்னேர்கள் எத்தனையோ பல நூற்றுக்கணக்கான கிரந்தங்கள் இயற்றியுள்ளார்கள். அப்படியே பின்னேராலும், பல்லாயிரக் கணக்கான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இன்னமும் அந்தப் பரிசுத்த றசூல் அதிபரின் வாழ்க்கைச் சரித்திரம் பலபக்தர்களால் எழுதப்பட்டு உலகத்தில் பிரபலித்துக் கொண்டே வருகிறது. இவ்வாறாக, வெளிவந்துகொண் டிருக்கும் நபீ அவர்களுடைய பரிசுத்த ஜீவிய சரித்திர நூல்களின் கிரந்த கர்த்தாக்களில் எவரேனும், நபீ அவர்கள் ஹிஜ்ரத் சென்ற அந்தத் தருவாயில் "அவர்கள் அந்த ஹிஜ்ரத்தின் போது எதிரிகளிடம் சிக்கிக்கொண்டால் நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்று அபிப்பிராயம் கொடுக்கின்றனரா?

"இப்ன்இஸ்ஹாக்" "இப்ன்ஸஅத்" 'தபரீ' "ஷாஃபீ" "முஹம்மத்பின் ஈஸா" முதலிய மேதாவிகளான சரித்திராசிரியர்களுடைய கல்வி கேள்வியையும், அந்தஸ்தையும்தாண்டி இந்த பி. ஏ. டிக்ரி, அபிப்பிராயங் கொடுக்கத் தலைப்பட்டனரா? அல்லது தலைகீழாய்ப் புரட்ட வாயில் வந்தபடி எல்லாம் உளறிக் கொட்டுவதென்பதே இவரது நோக்கமா?

நபீ அவர்களுடைய பரிசுத்த வாழ்க்கைச் சரித்திர சம்பந்தமாய் இஸ்லாமிய ரல்லாத மேல் நாட்டு எதிர் மதவாதிகளில் பலர் பொறுமைகொண்டும், கெட்ட நோக்கத்துடனும், பலநூல்கள் இயற்றி வெளிப்படுத்தியுள்ளார். அத்தகை யோர்களில் இங்கிலாந்திலுள்ள (Dr. White) டாக்டர் ஒய்ட், (Carlyle) கார்லைல், (Muir) மூவர், (Wo laston) வால்ஸ்டன், (Margali outh) மார்கயூலிஸ், (Koelle) கொயில் முதலியவர்களும், ஜெர்மன் தேசத்திலுள்ள Dr. Sprenger) டாக்டர் ஸ்ப்ரின்கர், (Von Kremer) வான்க்ரிமர், (Krehl) கராஹில் முதலியவர்களும், பிரான்ஸ்தேசத்திலுள்ள(St. Hilaire) ஸென்ட், ஹிலய்ர், (Julius Charles) ஜூலைஸ் சார்லிஸ், (Renan) ரெய்னன் முதலியவர்களும், இத்தாலி தேசத்திலுள்ள (Princecaetani) பிரின்ஸ் கேப்டானி, ஹாலந்து தேசத்திலுள்ள. (Dozy) டோஸி, (H. Grim) எய்ச். க்ரைம், (Bhul) புஹ்ல், முதலியவர்களும் மிக்க பிரபலம் பெற்றவராவர். இத்தகையோர் நபீ அவர்களுடைய பரிசுத்த வாழ்க்கைச் சரித்திரத்தை உண்மைக்கு மாறாகப்புரட்டி உலகத்துக்குக் காண்பிக்கும் நோக்கங்கொண்டே எழுதியுள்ளார். எனினும் இத்தகைய வஞ்சகரான சரித்திராசிரியர்களில் எவராவது நபீ அவர்கள் ஹிஜ்ரத் சென்ற அந்தத் தருவாயில் அவர், "அந்த ஹிஜ்ரத்தின்போது எதிரிகளிடம் சிக்கிக்கொண் டிருப்பாராயின் "நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப்பார்" என்று

அபிப்பிராயம் கொடுத் திருக்கின்றனரா? கேவலம், அத்தகைய இஸ்லாத்தின் சத்துருக்களான அவர்களும், தங்கள் தங்கள் கிரந்தங்களில் அங்கங்கே சிற்சில சந்தர்ப்பங்களில் "மற்றவை எப்படி யிருந்தபோதிலும் கடவுளுடைய அனுக்கிரகமும், பலமும் அரபியாவின் தீர்க்க தரிசிக்கு இருந்ததினாலேயே அவர்கள் தமது காரியத்தில் சித்திபெற்றார்கள்" என்று அவர்கள் தங்களை அறியாமல் வாய்விட்டுச் சொல்லக்கூடிய சித்தத்துக்கு ஆளாயிருக்கின்றனரே! இந்த பி ஏ. பட்டதாரி, திருக்குர்ஆனையும், அதன் சம்பந்தமான கலைகளையும் படித்து, ஞானமடைய விதியற்றுப் போனாலும் சத்துருக்களால் நபீ அவர்களுடைய ஜீவியத்தைப்பற்றி எழுதியுள்ள அத்தகைய நூல்களையாவது வாசித்துப் பலன் கண்டு, ஒரு தீர்மானததுக்கு வரலாகாதா? இஸ்லாத்தின் சத்துருக்கள், இந்த பி. ஏ. டிக்ரி சொல்வதுபோல் சொல்ல அவர்கள் நாவெழவில்லை. ஆனால் இந்த பி. ஏ. டிக்ரியோ வாய்கூசாமல் அச்சமற்று, பக்தியற்று, ஞானமற்றுச் சொல்ல முன் வந்தது எவ்வளவு மதியீனம்:-

றசூலின் வாழ்க்கையையே உங்கள் நடத்தைக்கு முன் மாதிரியாக வைத்திருக்கும் பக்தர்களே!

1300 வருடங்களாக றசூல் அதிப ரவர்களின் வாழ்க்கைச் சரித்திர சம்பந்தமாய் முஸ்லிம்களில், பல கபட புத்தி யுடையோரும், அவர்களில் சில நடு நிலைமையைக் கையாடியவர்களும், பல நூற்றுக் கணக்கான கிரந்தங்கள் எழுதி யுள்ளார்கள்.

அவைகள் யாவும் சேமிக்கப்பட்டே வருகின்றன. அவைகளில் உண்மைக்கு மாறாய் எழுதி வெளிவந்திருக்கும் நூல்களை, விவேகிகளான நடு நிலைமை வகித்துள்ள மேதாவிகள் அந்நூல் ஆசிரியர்களின் அறிவீனத்துக்காக நகைத்தும் அவர்களைச் சபித்தும் வருகிறார்கள். அவர்கள் தங்கள் திறமையையும் சாமார்த்தியத்தையும், உலகில் நிலை நிறுத்த அரும்பாடுபட்டு எழுதிவைத்தார்கள். ஆனால் ஞான முள்ள உலகமோ, அவர்களை, இகழவும் சபிக்கவுமே, அந்நூல்கள் அவர்களுக்கு உபகரணமாயின என்று கூறுகின்றது.

பரிசுத்த றசூல் அதிபரின் வாழ்க்கைச் சரித்திரத்தைப்பற்றி எவர், எந்தப்போக்கில் எழுதினாலென்ன? எவர் எதைச் சொன்னாலென்ன? எவை இருந்தா லென்ன? எவை அழிந்தாலென்ன? மகாகண்ணியங் தங்கிய பரிசுத்த ரசூல் அதிபரின்வாழ்க்கை, திருக்குர் ஆனோடு இணைந்து, அதைக் குர் ஆன் தன் உள்ளத்தில் அடக்கம் செய்து கொண்டிருக்கிறது. "ரூஹுல் அமீன்" சொல்லால் ("லௌஹின் மஹ்பூல்") என்ற பாதுகாப்புப் பலகையிலேயே அவருடைய வாழ்க்கை எழுதப்பட்டுச் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வைத்திருக்கும் அந்தப் பரிசுத்த நபீயின் ஜீவிய சரிதையைக் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ, தப்பபிப்பிராயங் கொடுக்கவோ, எவராலும் சாத்தியப்படாது. 1300 வருடங்களுக்கு மேலாக ஒரு அட்சரமேனும் அழிந்தும், சிதைந்தும் போகாவண்ணம், திருக்குர்ஆன் காப்பாற்றப் பட்டிருக்கிறது. இனி என்றென்றும், அப்படியேதான் இருக்கும். ஆகையால் நபீ அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை எழுத, எழுதகோல் கையில் எடுப்பவன் ஒரு அணுவளவு பிரமாணம் உண்மைக்கு மாறான அபிப்பிராயங் கொடுக்க முன் வருவானாயின், திருக்குறுஆன் அவனைத் தன்னிடம் விட்டு ஒதுக்கித் தள்ளி விடும். இந்த ஸ்திதியில் தான் B. A, டிக்ரியின் ஞானமற்ற அபிப்பிராயத்தைத் திருக்குர்ஆன் சபித்துப் புறக்கணித்துத் தள்ளுகிறது. திருக் குர்ஆன் உள்ளளவும், நபீ அவர்களின் வாழ்க்கை சரிதையும் ஜீவனோடேயே இருந்துவரும்.

(தொடரும்)

இயற்கை மதம்.

மௌலவி A. K. அப்துல் ஹமீது சாஹிப் (பாக்கவி) வரைவது.

(சென்ற ஜூலை மாதத் தொடர்)

ஆலயப் பிரவேசத்தால் உங்களுக்கு பிராமணர்கள், ஹிந்துக்கள் வசிக்கின்ற அக்கிரகாரம் முதலிய நகரபாகங்களில் தாராளமாக வசிக்க இடங் கிடைத்துவிடமாட்டாது.

உங்களுக்கு வேண்டியவைகள் இவைகள்தான்; ஆலயப்பிரவேசமல்ல. இவைகளின்றி உங்களுடைய குறைகள் நிவர்த்தியாகா. வெறும் ஆலயப்பிரவேசத்தை அடைவது கொண்டு நீங்கள் சுதந்தரத்தையும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், அடைந்துவிட்டதாகக் கருதவேண்டாம்.

இயற்கையாக, மனிதர்களுக்குரிய சாமான்யமானதொரு உரிமையும் உங்களுக்கில்லையென்றும், மிருகத்திலுங் கேவலமான இத்தாழ்ந்த நிலைமையில்தான் உங்களை ஆழ்த்திவைத்திருக்கவேண்டுமென்றும் ஹிந்துமதமே கட்டளையிடுகின்றது.

ஆகவே, அந்த ஹிந்து மதத்தை நீங்களும் பின்பற்றுவதாகக் கூறும்வரையில் உங்களுடைய இழிவான இந் நிலைமையிலிருந்து விடுதலையடைய நீங்கள் என்ன முயற்சிசெய்தபோதிலும் அது உங்களுக்கு பயனளிக்காது.

அல்லது, மற்றைய ஹிந்துக்களாற்றான் உங்களுக்கு விடுதலை அளித்து மேற்கூறிய சுதந்தரங்களை அளித்துவிட முடியுமா?

அவ்வாறு செய்யப்போவதாகப் பல ஹிந்து தலைவர்கள் கூறுகின்றனரே, அது ஆகக்கூடியதா?

அப் பெரியார்களின் அனுதாபத்திலும், வீரத்திலும், தீரத்திலும் எவருக்கும் எள்ளளவுஞ் சந்தேகமில்லை; அவர்கள் அரும்பெருந் தியாகங்களையே செய்துவருகின்றனர்; செய்யவுஞ் சித்தமாயிருக்கின்றனர்.

எனினும், துர்ப்பாக்கியமான உங்களுடைய கொள்கையே அதற்குத் தடையாக இருக்கின்றது.

* "ஹிந்து" என்னும் பதத்தின் அருத்தமே எவரும் விரும்பத்தக்கதாக இல்லை.

ஆகவே, நீங்கள் உங்களை ஹிந்துக்களென்று கூறும்வரையில் விடுதலை அடையப்போவதில்லை.

அவர்களும் ஹிந்துக்களாக இருக்கும்வரையில் உங்களுக்கு விடுதலை அளிக்கப்போவதுமில்லை.

அவர்கள் செய்யும் அரும்பெரும் முயற்சிகளையெல்லாம் ஹிந்துமதமும், ஹிந்து என்னும் பதமும் பலனற்றதாக்கிவிடுகின்றது.

அவர்கள் உங்களுக்கு விடுதலையளிப்பதென்ன? தங்களினத்தாராகிய பிராமணரல்லாதாருக்குமே விடுதலையளித்து அச்சுதந்தரத்தையும், சமத்துவத்தையும் அளிக்க முடியாது.

பிராமணரல்லாதாரின் நிலைமைதான் என்ன? அவர்கள் தங்களை பிராமணர்களுக்குச் சமமெனக் கூறமுடியுமா?

அவ்வாறு கூறினும் அதனை அவர்களுடைய மதம் அங்கீகரிக்குமா?

பிராமணர்களுடைய நன்மைக்காகவே இந்த பிராமணரல்லாதார் இவ்வுலகத்தில் வாழவேண்டும். இவர்களுடைய பொருள், பெண், ஆவி யாவையும் பிராமணர்களுக்குத் தத்தஞ்செய்து இவர்கள் மோக்ஷத்தையடைய வேண்டும். அவ்வாறே பிராமணர்களுடைய மதம் கூறுகின்றது.

அவர்கள், தங்களை ஹிந்துக்களென்று கூறும்வரையில் இவ்வாறு பிராமணர்களுக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டியதுதான்.

---

* ஹிந்து என்னும் பதத்தின் அருத்தம் 'திருடன்' 'அயோக்கியன்' 'அடிமை' என்றவைதான் என்று ஆரியசமாஜிகளின் மிக்க சிறந்த தலைவராகிய 'பண்டிட் லேக்ராம்' என்றவர் தமது 'குல்லியாதெ-ஆரியாமுஸாபிர்' (= ஆரியர்களின் சட்டதிட்டங்கள், சரித்திரங்கள்) என்னும் நூலில் தெளிவாக ஸ்தாபித்திருக்கின்றார்.

பிராமணர்களுக்கு இவ்வாறடிமைப்பட்டு அடிபணிந்து நடக்கும், இவர்களுக்கும் அந்த பிராமணர்களுக்கு மிடையிலேனும் சமபந்தி போஜனமாவது, கலப்பு விவாகமாவது உண்டா?

அல்லது, இந்தப் பிராமணரல்லாதார்களுக்குள்ளாகவேனும் கலப்பு விவாகமும், சமபந்தி போஜனமுமுண்டா?

அவர்கள், தாங்களும் ஹிந்துக்களென்று கூறிக்கொண்டிருக்கும் வரையில் இவ்வாறே சிதறுண்டு மற்றையவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டியதுதான்.

அல்லது, உங்களையும், அந்த பிராமணரல்லாதாரையும் இவ்வாறடிமைப்படுத்தி வைத்திருக்கும் அந்தப் பிராமணர்கள்தான் உங்களை விடுதலை செய்துவிட முடியுமா? அவ்வாறு செய்யப்போவதாக சில பிராமணத் தலைவர்களும் கூறுகின்றனரே, அது ஆகக்கூடியதா?

அவர்கள் இதுவரையில், உங்களில் எவ்வளவு ஜனங்களை மற்றைய பிராமணர்களோ அல்லது மற்றைய ஹிந்துக்களோ தங்களுக்குச் சமமாகப் பாவித்து சமபந்தி போஜனம், கலப்பு விவாகம் செய்துகொள்ளும்படி செய்திருக்கின்றனர்?

இந்த பிராமணத் தலைவர்களின் அனுதாபத்திலும், ஜீவகாருண்யத்திலும், பரோபகாரத்திலும் எவருக்கும் எள்ளளவுஞ் சந்தேகமில்லை; மிக்க உத்தம புருஷர்கள்தான்; அரும்பெருந் தியாகங்களையுஞ் செய்கின்றனர்; தங்களைப்பற்றி தங்களினத்தார் கூறுங் குறைகளையும் பொருட்படுத்தாது உங்களுடைய சேரிகளுக்கும் நேரே வருகின்றனர்; உங்களுடன் சமமாகவே உட்கார்ந்துகொள்ளுகின்றனர்; உங்களுடைய குறைகளையும் மிக்க அனுதாபத்தோடுங் கேட்கின்றனர்; உங்களுடைய தீண்டாமையை நீக்கிவிட்டதாகவுங் கூறி உங்களைத் தீண்டியுங்கொள்ளுகின்றனர்; உங்கள் வீட்டில் நீங்கள் சமைத்த சாதத்தையும் புசித்துவிடுகின்றனர்.

எனினும், இதுவரையில் அவர்கள் உங்களுடைய எத்தனை பெண்களை விவாகஞ் செய்துகொண்டிருக்கின்றனர்? தங்களுடைய எத்தனை பெண்களை உங்களுக்கு விவாகஞ் செய்து கொடுத்திருக்கின்றனர்? இச்சம்பந்தமின்றி, அவர்கள் உங்களுக்களிக்கும் சமத்துவம் நிலைக்குமா? அவர்களுக்கும் உங்களுக்கும் மெய்யான சகோதரத்துவமேற்படுமா? அவர்களுக்குள்ள சகல உரிமைகளையும் நீங்களும் அடைந்து விடுவீர்களா?

இதற்குந் துணிந்து அவர்கள் முன்வரின், அவர்களினத்தாரே அவர்களை பஹிஷ்கரித்து, அவர்களையும் உங்களுடன் சேர்த்து விடுவார்கள்.

அந்த பிராமணர்களின் மதம் உங்களுக்கு இவ்வுலகில் என்ன மதிப்பளித்திருக்கின்றதென்பதை நீங்கள் அறிவீர்களா?

ஒரு பிராமணன் உங்களிலெவரையும் கொலை செய்துவிட்டால் அவனுடைய தலையை மொட்டையடித்து விட்டுவிட வேண்டுமேயன்றி வேறொன்றும் செய்யப்படாது என்று கூறி உங்களுடைய உயிர் பிராமணர்களின் மயிருக்குத்தான் சமம் என்பதை மிக்க தெளிவாகவே அறிவித்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு உங்களை இழிவு படுத்தியும், மற்றைய ஹிந்துக்களைச் சிதறடித்தும் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அந்த பிராமணர்களின் நிலைமைதானென்ன? அவர்களுக்குள்ளேனும் மெய்யான சமத்துவமும் சகோதரத்துவமு முண்டா?

அவர்களுளும், வைஷ்ணவர்கள் என்றும் ஸ்மார்ந்தர்கள் என்றும், மாத்வர்கள் என்றும், மூன்று பிரிவுகளிருக்கின்றன,

இதிலும், வைஷ்ணவர்களுக்குள் தென்கலை என்றும், வடகலை என்றும், நாதமுனி சிஷ்யர்கள் என்றும், ஆசார்ய பரம்பரை என்றும், ஆழ்வார் அடிகள் என்றும், பிரிவுகளிருக்கின்றன.

சுமார்த்தர்களுள், வடமர்கள் என்றும், வாத்திமர்கள் என்றும், அஷ்டஸஹஸ்ரர் என்றும், அரஹசரணர் என்றும் பிரிவுகளிருக்கின்றன.

மாத்வர்களுக்குள் மஹாராஷ்டிரர்கள் என்றும், கன்னடர்கள் என்றும், பிரவுகள் இருக்கின்றன,

இவர்களைத்தவிர, ஸௌராஷ்டிரர்கள் தாங்களும் பிராம்மணர்களென்கின்றனர். அவ்வாறே, விஸ்வகர்மரும், சாத்தானியரும் தங்களைப் பிராம்மணர்களென்கின்றனர். மலையாளத்தில் மீன் பிடிக்கும் ஒருவகுப்பாரும்

தங்களைப் பிராமணர்களென்கின்றனர். இன்னும் எவரெவர் இவ்வாறு கூறுகின்றனரோ, யாமறியோம்.

ஆகவே இவர்களி லெவர்க்குமே மனஸ்தாபமேற்படாத விதத்தில் இவர்கள் யாவரையும் பிராமணர்களென்றும், பிறப்பைக் கொண்டே மேலானவர்களென்றும் அங்கிகரித்துக் கொள்வோம்.

எனினும், இவர்களுக்குள்ளாகவே ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பாருடன் சமபந்தி போஜனமாவது, கலப்பு விவாகமாவது உண்டா?

அல்லது, பிராம்மணர்களாகிய இவர்களிலெல்லாம் தாங்களே மேலென்று கூறுகின்ற வைஷ்ணவர்கள், ஸ்மார்த்தர்கள், மாத்வர்கள் என்னும் இம்மூன்று வகுப்பு பிராமணர்களுக்குள்ளாக வேனும் மெய்யான சமத்துவமும், கலப்பு விவாகமு முண்டா?

அல்லது இம்மூன்று வகுப்புகளில் ஒவ்வொன்றுக் குள்ளாகவே இருக்கும் உட்பிரிவினர்களுக்கிடை யிலேனும் மெய்யான சமத்துவமும், கலப்பு விவாகமுண்டா? இல்லை, இல்லை.

இவர்களில் ஒவ் வொருவரும் தாங்களே மேலென்றும், மற்றையவர்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர்களென்றுமே கூறுகின்றனர்.

ஆகவே, தங்களையல்லாத மற்றைய தங்களினத்தாரையே தங்களுக்கு தாழ்ந்தவர்களென்று கூறும் இந்த பிராமணர்கள் தானா தீண்டப்படாதாரென்னும் உங்களுக்கும் மற்றைய ஹிந்துக்களுக்கும் மெய்யான சமத்துவத்தையும் அளிக்கப்போகின்றனர்? உங்களை உங்களுடைய இவ்வடிமைத் தனத்திலிருந்து விடுவித்து விடப்போகின்றனர்?

அல்லது, கிறிஸ்தவ மதமேனும் உங்களை உங்களுடைய இவ்வடிமைத் தனத்திலிருந்து விடுவித்து விடுமா?

கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய தீண்டப்படாதாரின் நிலைமைதான் என்ன? அவர்கள் இன்றையதினம் மெய்யான சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைந்திருக்கின்றனரா?

அல்லது இவ்வுலகத்தைச் சீர்திருத்துவதற்காகவே யாங்கள் சிருஷ்டிக்கப்பெற்றிருக்கின்றோம் என்று கூறுகின்ற மேனாட்டினரேனும் உங்களை, உங்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, உங்களுடன் சமபந்தி போஜனம், கலப்பு விவாகம் செய்து கொள்வார்களா?

ஆகவே, இவ்வடிமைத்தனத்தி லிருந்து மெய்யாகவே உங்களைவிடுவித்து மானிடவர்க்கிற்குரிய சகல உரிமைகளுடன் கூடிய மெய்யான சமத்துவத்தையும், சகோதரத் துவத்தையும் உங்களுக் களிக்கக்கூடியது நீங்கள் விரும்பும் ஹிந்து ஆலயப்பிரவேசமல்ல; பிராமணர்களுமல்ல, கிறிஸ்தவமதமுமல்ல; அந்த கிறிஸ்தவமதத்தைப் பின்பற்றும் கீழ்நாட்டினருமல்ல; மேனாட்டினருமல்ல.

உங்களை விடுவித்து அச்சுதந்தரங்கள் யாவையும் பூரணமாக அளிக்கக்கூடியதெல்லாம் 'திருக்குர்ஆன்' என்னும் பரிசுத்த வேதந்தான்.

அது அவ்வாறே செய்து மிருக்கின்றது; செய்தும் வருகின்றது.

ஆகவே, தீண்டப்படாதார் என்னும் நீங்கள் உங்களுடைய அடிமைத் தனத்திலிருந்து விடுதலை யடையக்கருதி எந்நேரத்தில் இவ்வேதத்தை பின்பற்றுகின்றீர்களோ அதே நேரத்தில் உங்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு விடுகின்றீர்கள்; "ஹுர்ருன்" (—சுதந்தரன்; Free man) என்ற பட்டத்தையும் அடைந்து விடுகின்றீர்கள்.

மெய்யான ஆண்டவனை வணங்குவதற்கு இவ்வுலகில் ஏற்பட்ட எந்த ஆலயத்திற்குள்ளும் நீங்கள் எந்நேரத்திலும் செல்லலாம். உங்களைத் தடைசெய்ய எவருக்குஞ் சக்தியில்லை.

அவ்வாலயத்தில் தொழுது கொண்டிருப்பவன் இவ்வுலக மனைத்தையும் ஆளும் ஏகச்சக்கரவர்த்தியா யிருந்தபோதிலும் நீங்கள் அவனுடைய தோளோடு தோள் சேர்த்தே நின்று தொழலாம். அவ்வரசன் உங்களில் எவரையும் நோக்கி "நீ தீண்டப்படாதான்; நீ எனக்கு சமமாக நிற்காதே" என்று கூறவுந் தடை செய்யவும் முடியாது.

பாரபக்ஷமின்றி மனிதர்களாகப் பிறக்கும் யாவருக்குமே சமமான உரிமைகளை அளித்திருக்கும் மெய்யான ஆண்டவன் அவ்வாலயத்தில் உங்களையும் அவ்வரசனையும் தன்முன் சமமாகவே நிறுத்தி அவ்வரசனை நோக்கி,

"பிரஜைகளுடைய நன்மைக்காக நீ அரசனாக ஏற்பட்டாயேயன்றி உன்னுடைய நன்மைக்காக பிரஜைகள் ஏற்படவில்லை; பிரஜைகளுக் கிடையில் ஏழையென்றோ பணக்காரனென்றோ அடிமையென்றோ சுதந்தரனென்றோ ஆணென்றோ பெண்ணென்றோ எவ்வித வித்தியாசமும் பாவிக்காமல் மெய்யான நீதியையும் நியாயத்தையும் செலுத்தி இயற்கையாக மனிதர்களுக்குள்ள சகல உரிமைகளையும் அவர்களுக்களித்து மனித அபிவிருத்திக்குரிய நேரான வழியில் அவர்களை செலுத்துவது அரசனாக ஏற்பட்ட உன்மீது சுமத்தப்பட்ட கடமையாகும். என்றைய தினம் நீ, உன்மீது சுமத்தப்பெற்றிருக்கும் இக் கடமைகளை பொருட்படுத்தாது பிரஜைகளின் நன்மையைப் புறக்கணிக்கின்றாயோ அன்றைய தினமே உன்னுடைய ஆட்சியைத் தொலைத்து பிரஜைகளின் நன்மையைக் கோரக் கூடியவனை அரசனாக்கிக் கொள்ள பிரஜைகளுக்கனுமதி அளித்திருக்கின்றேன்; மேலும், எவன் மனிதர்களில் எவரையும், தீண்டப்படாதான் எனக் கூறி கேவலமாக மதிக்கின்றானோ அவன் என்னுடைய ஆலயத்திற்குள் வரவுங்கூடாது" என்றுக் கட்டளையிடுகின்றான்.

நீதியும், நியாயமும் பொதிந்துள்ள இவ்வாறான கட்டளைகளை இறைவன் மானிடவர்க்கத்திற்கு அடிக்கடி ஞாபகமூட்டும் பொருட்டே ஒவ்வொரு நாளிலும் ஐந்து வேளை ஆலயங்களில் ஹாஜராகி அவர்கள், இறைவன் சந்நிதியில் நிற்பதாகக் கருதி, அரசன்முதல் பிரஜைகள்வரை யாவரும் சமமாக நின்று தொழும்படியாகவும் அந்த ஐந்து வேளை தொழுகையிலும் இறைவனுடைய இத்தகைய கட்டளைகளைப் பொதிந்துள்ள திரு குர்ஆன் என்னும் வேதத்தையே ஓதும்படியாகவும் கட்டளையிட்டிருக்கின்றான்.

ஆகவே தீண்டப்படாதார் என்னும் சகோதரர்களே! இவ்வுலகில் இருவகை ஆலயங்களிருக்கின்றன.

ஒன்று:—மனிதர்களுக்குரிய யாதொருஉரிமையும் உங்களுக்கில்லை யென்றும், மிருகத்தினும் மிக்க தாழ்ந்த நிலைமையிலேயே உங்களை ஆழ்த்தி அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்றுங் கட்டளையிடுகின்றது.

மற்றொன்று:—உங்களை இவ்வடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அரசனும், உங்களைத் தனக்கு சமமாகவே பாவிக்கவேண்டும்; மனிதர்களுக்குள்ள சகல உரிமைகளையும் உங்களுக்களிக்கவேண்டும் என்று கட்டளையிடுகின்றது.

இவ்விரு ஆலயங்களில் எதற்குள் செல்ல நீங்கள் விரும்புகின்றீர்கள்?

எந்த ஆலயம் உங்களை அடிமைப்படுத்தியே வைத்திருக்க வேண்டுமென்று கட்டளையிடுகின்றதோ அதே ஆலயத்திற்குச் சென்றால் உங்களுக்கு விடுதலை கிடைக்குமா?

அந்த ஹிந்து ஆலயங்களுக்குள் செல்ல நீங்கள் முயற்சிப்பதானது, உங்களுடைய அடிமைத்தனத்தின் விலங்கை நீங்களே பின்னும் பலப்படுத்திக்கொள்ள முயற்சிப்பதாகும்.

உங்களை அடிமைப்படுத்தியே வைத்திருக்க வேண்டுமென்று கட்டளையிடும் ஆலயத்தில் உங்களைச் சிருஷ்டித்த கருணாநிதியாகிய மெய்யான ஆண்டவனிருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?

உங்களைச் சிருஷ்டித்த கருணாநிதி அங்கிருந்தால், உங்களை அடிமைப்படுத்தியே வைத்திருக்க வேண்டுமென்று அவ்வாலயத்திலிருந்து கட்டளை பிறக்குமா?

ஆகவே தீண்டப்படாதார் என்னும் சகோதரர்களே! உங்களுடைய இழிவான இவ்வடிமைத்தனத்திலிருந்து மெய்யாகவே நீங்கள் விடுதலையடையக் கருதினால் எந்த ஆலயம் உங்களுக்கு விடுதலை யளிக்கின்றதோ, அந்த ஆலயப் பிரவேசத்தையே விரும்புங்கள்;

அந்த ஆலயத்திற்றான் உங்கள் சிருஷ்டிக் கர்த்தாவாகிய கருணாநிதி யிருக்கின்றான். ஆதலாற்றான், உங்களை விடுவிக்கும்படியான கட்டளை அங்கிருந்து பிறக்கின்றது.

இரவு பகல் எந்நேரமும் உங்களுடைய வரவுக்காக அது திறக்கப்பட்டிருக்கின்றது; எந்நேரத்திலும் நீங்கள் அங்கு செல்லலாம்;

அவ்வாலயப் பிரவேசத்தையோ அல்லது நீங்கள் அங்கு சென்று, விடுதலை அடைவதையோ தடைசெய்ய எவருக்கும், அவர் எவ்வளவு பெரிய அரசனாக இருந்தபோதிலும் சக்தியில்லை;

அவ்வாலயப் பிரவேசத்திற்காக உங்களுக்கு ஒரு பைசாவும் செலவில்லை; நீங்கள்

சத்தியாகிரகம் செய்து கஷ்டப்படவேண்டியதுமில்லை.

உங்களுடைய விடுதலையைப்பற்றி உங்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பவர்களின் அனுமதியைக் கோரவேண்டிய அவசியமுமில்லை;

உங்களை விடுவிக்கும்படி நீங்கள் விண்ணப்பம் கொடுக்கவேண்டிய அவசியமுமில்லை; வக்கீலும் வேண்டியதில்லை;

உங்களுடைய விடுதலைக்கு யாதொரு ஹிரங்கியுமில்லை; வாயிதாவுமில்லை; காலதாமதமுமில்லை.

எந்நேரத்தில் நீங்கள் அங்கு செல்கின்றீர்களோ அதே நேரத்தில் விடுதலையடைந்து விடுகின்றீர்கள்; உங்களுடைய இழிவான இவ்வடிமைத்தனத்திலிருந்து நீங்கி மனிதர்களுக்குரிய சகல உரிமைகளையும் நீங்கள் பூரணமாக அடைந்தும் விடுகின்றீர்கள்;

இவ்வுலகிலுள்ள ஐம்பதுகோடி முஸ்லிம்களுக்கும் நீங்கள் மெய்யான சகோதரர்களாகவும் ஆகிவிடுகின்றீர்கள்.

இன்றையதினம் உங்களைத் தீண்டப்படாதார் எனக் கூறிக்கொண்டிருக்கும் இந்த 2½ கோடி ஹிந்துக்களென்ன? இவ்வுலகத்தின் மற்றைய பாகங்களில் வசிக்கும் எவருமே, உங்களைத் தீண்டப்படாதாரெனக் கூறவும், பாவிக்கவும் முடியாது.

இஃது உலகமறிந்த உண்மை.

மெய்யான இத்தகைய சமத்துவத்தையும், சுதந்தரத்தையும் இவ்வேதம் தன்னைப் பின்பற்றுவோர்களுக்குத்தான் அளிக்கின்றதென்பதல்ல. மனிதனுகப் பிறந்த யாவருக்குமே, அவர்கள் எவ்வகுப்பாராயினும், எத்தேசத்தாராயினும், எம்மதத்தாராயினும், எவ்வர்ணத்தாராயினும் இச்சுதந்தரங்கள் யாவையும் பூரணமாகவே அளிக்கின்றது.

ஆகவே, "மனிதராகப் பிறந்த எவருக்கும் இச் சுதந்தரங்களில் எதையும் இல்லை என்று, இவ்வேதத்தைப் பின்பற்றும் எவரும் மறக்கவும் படாது; கூறவும்படாது" என்று இவ்வேதம் வெகு கண்டிப்பாக உத்தரவிடுகின்றது.

ஆதலாற்றான், முஸ்லிம் ராஜ்ஜியங்களில் வசிக்கின்ற அந்நியமதத்தினர், அவர் எத்தேசத்தாராயினும், எவ் வர்ணத்தாராயினும் அவருக்கு 'திம்மீ' (=பிணையேற்கப்பெற்றவர்) 'முஸ்தஃமன்' (=அபயம் பெற்றவர், அச்சமற்றவர், பயமற்றவர்) என்றும் பேயர் கூறப்படுகின்றது.

இவ்வாறு மானிடவர்க்கம் யாவுக்குமே எல்லாச் சுதந்தரங்களையும் அளித்துக்காப்பது இவ்வேதத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவன்மீதும் சுமத்தப்பட்ட கடமையாயிருப்பதால், அவனுக்கு 'மூமின்' (=அபயமளிப்பவன்; அபயமளிக்கக் கடமைப்பட்டவன்; இரக்ஷிப்பவன் இரக்ஷிக்கக்கடமைப் பட்டவன்; மெய்யான கடவுளை விசுவாசிப்பவன், மெய்யாகவே இறைவனை விசுவாசித்து அவனுடைய கட்டளைகளுக்கு அடிபணிபவன்) என்ற பெயரை இவ்வேதம் அளிக்கின்றது.

இவ்வாறு மற்றவர்களை இரக்ஷிக்கக்கடமைப்பட்ட இவனால் எவருக்கும் எவ்விதத் தீங்குமேற்படக்கூடாது. ஆதலால், இவ்வேதத்தைப் பின்பற்றுகின்றவனுக்கு "முஸ்லிம்" (=தீங்கிழைக்காதவன்) என்ற பெயரையும் இவ்வேதம் அளிக்கின்றது.

ஆதலாற்றான், "எவன் மற்றையவர்களுக்குத் தன்னுடை கையைக்கொண்டோ, நாவைக்கொண்டோ தீங்கிழைக்கின்றானோ அவன் முஸ்லிமல்ல" என்று நபிபெருமான் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள்.

படை மருந்து

அய்யம்பேட்டை ஜோராபாய் யூனனி மெடிகல் ஹால் மானேஜரிடமிருந்து "எக்ஸீரெதிஸிஸ்மி" என்ற படை மருந்தின் புட்டிகள் மூன்று வரப்பெற்றோம். படை நோயால் வருந்திய நம் நண்பர்களில் சிலருக்குக் கொடுத்து பரீட்சித்ததில் இம்மருந்து வியக்கத்தக்க அபூர்வ குணத்தை கொடுத்துள்ளது. அதன் விளம்பரத்திற் கண்டவாறு அது சிறந்த குணந்தருவதைக் காண சந்தோஷிக்கிறோம். பலவித போலி மருந்துகளுக்காக விருதாவில் செலவு செய்பவர்கள் நம்பிக்கையுடன் இதை வாங்கி உபயோகித்து குணமடைவார்களாக. இதன் கிரயம் புட்டி 1-க்கு அணா 8. டஜன் 1-க்கு ரூ. 4-8-0 மேற்சொல்லப்பட்ட விலாசத்திற்கெழுதி பெற்றுக் கொள்ளலாம். (ப-ர்.)

பிரபஞ்சத்து முஸ்லிம்கள்

உலகம் இஸ்லாம் மயமாதல்

அரேபியா, பர்ஷியா, துருக்கி, எகிப்து இந்தியா முதலிய கீழ்நாடுகளிலெல்லாம் இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம்கள் அபிவிருத்தியடைந்துள்ளதேபோல் ருஷ்யா, பிரித்தானியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சீனம் ஆகிய நாடுகளிலும் இதுகாலை இஸ்லாத்தைத் தழுவியுள்ள முஸ்லிம்கள் அதிகரித்து வருகின்றார்கள். எனவே ஆங்காங்கு முஸ்லிம்கள் அபிவிருத்தியடைதலை நோக்குங்கால் பிற்காலத்தில் இத்தாரணி முழுவதும் முஸ்லிம்கள் மயமாகவே விளங்குமென்பதில் ஐயமில்லை. இறுதிக்காலத்தில் உலகமனைத்தும் இஸ்லாம் மயமாக நிலவும் என்பது இஸ்லாத்தின் கோட்பாடுமாகும். "சன்மார்க்கத்தில் (ஜனங்கள்) கூட்டங்கூட்டமாக நுழைவதை நீவிர் கண்டுகொள்வீர்" என ஆண்டவன் குர்ஆனில் கூறியுள்ளபடியும் இஸ்லாமிய நிலை மாறுதலடைந்து வருகின்றது. எனவே, ஒழுங்கானமுறையில் ஒவ்வோரிடங்களிலும் இஸ்லாமியப் பிரசாரம் புரியப்படுமாயின் "உலகம் இஸ்லாம் மயமாகுமென்பதில் ஐயுறவில்லது."

இதுகாலை ருஷ்யா, ஆஸ்திரேலியா, நியூகினி, பிஜீ தீவுகள், அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தென் அமெரிக்கா, டச்கயானு முதலிய மேனாட்டுப் பிரதேசங்களில் எங்கெங்கு எத்துணை அபிவிருத்தியடைந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதை மேனாட்டு நம் முஸ்லிம் அறிஞர் ஒருவர் சில ஆண்டுகட்கு முன் சமீபத்தில் கணக்கெடுத்துள்ளார்; அது வருமாறு :—

ருஷ்யா

ருஷ்யக் குடியரசாங்கத்தினர் சமீபத்தில் எடுத்த சனத்தொகைக் கணிதப்படி அப்பிரதேசங்களில் ஒருகோடி அறுபத்தாறு இலக்ஷம் முஸ்லிம்கள் வசித்து வருகின்றனர். இன்னோரில் ஆயிரத்துக்கு 189-பேர் தாத்தாரி-முதல் வர்க்கத்தினராகவும், 143-பேர் உஸ்ரகானியர்களாகவும், 140-பேர் பதக்ஷானியர்களாகவும், 92-பேர் ஸர்கிஜியர்களாகவும், 50-பேர் கலுமோகர்களாகவும், 42-பேர் தூர்க்கயானிகளாகவும், 25-பேர் காகேஜியர்களாகவும் இன்னும் பல்லோர் பல திறப்பட்டவர்களாகவும், வசித்து வருகின்றனர். இம்முஸ்லிம்கள் தங்களுள் சன்மார்க்கக் கல்வியபிவிருத்திக்கென பல கல்விச்சாலைகளும் பொதுஸ்தாபனங்களும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இம் முஸ்லிம்களது முன்னேற்றத்துக்காகச் சில பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் நடைபெறுகின்றன. ருஷ்ய அரசாங்கத்தாரும் இம் முஸ்லிம்களின் நலனைக் கருதி கல்வி வசதிகள் பல அளித்துள்ளனர், அளித்தும் வருகின்றனர். இங்கு நாளுக்குநாள் முஸ்லிம்கள் அபிவிருத்தியடைந்தே வருகின்றனர். தற்போது ருஷ்யக் குடியரசாங்கத்தார் நாஸ்திகக் கோட்பாடுகொண்டு தம் மதச்சின்னங்களை சின்னபின்னப் படுத்திவிட்டனரென்றும், இவ்வாறே முஸ்லிம்களுடைய மஸ்ஜித்களையும், மதக் கல்விபோதனா சாலைகள் பலவற்றைத் தகர்த்தெரிந்துவிட்டனரென்றும் விபரீதமாய்க் கூறப்படுகிறது. (அது விஷயம் உர்ஜிதப்படவில்லை) மேலும் பரிசுத்த தீனுல் இஸ்லாம் ஆண்டவனால் பாதுகாக்கப்படுவதும், உலகமுடிவு காலம்வரை நிலைத்து நிற்கவல்லதும், அழிவில்லாததுமாதலின் எம் மானுஷ்யவர்க்கத்தாராலும் இஸ்லாம் மதம் ஒழிக்கப்படமாட்டாதென்பது முஸ்லிம்களின் உள்ளக்கிடக்கையாகும்.

ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரதேசப் பகுதிகளில் 3908-முஸ்லிம்கள் இருந்து வருகின்றனர். இவ்விடத்திலும் மக்கள் நாளுக்கு நாள் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிம்களாகி வருகின்றனர். அப்கானியர்களால் நிர்மாணிக்கப்பட்ட பூர்வீக மஸ்ஜிதுகள் இப்பிரதேசங்களில் இருபது இருந்துவருகின்றன. இங்குள்ள முஸ்லிம்கள் போதிய மதக்கல்வி, இலௌகிக ஞானமுடையவர்களாகவேயிருந்து வரு

கின்றனர். இங்குள்ள முஸ்லிம்கள் பெரும் பாலும் எளியவர்களேயாதலில் இன்னோர் சாதாரண வாழ்க்கையும் எளிமையும் பூண்ட வர்களா யிருக்கின்றனர். ஆனால் தெய்வபக்தி யும், மதாபிமானத்திலும் பிறரினும் பிற் பட்டவர்களல்லர்.

பிஜீ, நியூக்னி தீவுகள்.

பிஜீ தீவுப்பிரதேசத்தில் சுமார் மூவாயிரத் துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வசித்து வரு கின்றனர். நியூக்னி என்னும் பிரதேசத்தில் சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் கள் வசித்துவருகிறார்கள். பிஜீ முஸ்லிம் மதாபிமானத்திலும், தெய்வ விசுவாசத்தி லும் ஏனையவரினும் சிறந்தவர்களாவர். இப் பிரதேசங்களிலுள்ளோர் இந்தியா முதலிய வெளியிடங்களின் ஆலிம், மௌலவி அறி ஞர் ஆகியோரை ஆர்வத்தோடு வரவழைத்து மதப்போதனை பெற்று, நல்லொழுக்கமும், சற்குணமும் பூண்டு இஸ்லாமிய சத்தியா சாரப்படி ஒழுகுவதில் அதிகப்பிரியர்களா யிருக்கின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் இருக்கின்றனர். இன் னோரின் இஸ்லாமிய ஜனத்தொகை இன்னும் திருப்திகரமாய் எடுக்கப்படவில்லை. எனினும் அந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள முஸ்லிம்களுடைய பொது ஸ்தாபனமாகிய "வெஸ்ட்ரன் இஸ்லாமிக் அஸோஸியேஷன்" நிர்வாகிகள் அப்பிரதேச முஸ்லிம்களின் ஜனத்தொகைக் கணக்கை சரியானபடி எடுக் கின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டு முஸ்லிம்கள்.

நியூயார்க், பாலிமோர், போஸ்டன், பிளாட்லிபியா, மிலோரதி, பெட்ஸ்பெர்க், ஷிகாக்கோ, டெட்டராயிட், காஸ்டர் முதலிய பகுதிகளிலேயே பெரும்பாலும் வசித்து வரு கின்றனர். அமெரிக்க தேசத்துப் பிரபலக் கோடீஸ்வரும், மோட்டார் தொழிலின் விற்பன்னருமான மிஸ்டர் போர்டு என்பவ ரின் மாபெரும் தொழிற்சாலையிலே மேற் கூறப்பட்ட முஸ்லிம்கள் அதிகமாக வேலை செய்து ஜீவித்துவருகின்றனர்.

மெக்ஸிக்கோ.

மெக்ஸிக்கோ என்னும் பிரதேசத்தில் நான்காயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் அராபிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாவர். இவ்வராபிய ரெல்லோரும் ஒரே குடும்பத் தைப்போல் ஐக்கியமாய் வாழுகின்றனர். அவ் வராபிய முஸ்லிம்கள் தங்கள் வர்க்கத்துக்கு பலமாக ஒரு இஸ்லாமிய சங்கத்தை தங்கட் பகுதியில் ஸ்தாபித்துக்கொண்டு மதசமூதாய அனுகூலமடைந்து வருகின்றனர். இஸ்லாமி யப்பிரசாரமும் சிறுகச் சிறுக நடைபெறு கின்றது.

தென் அமெரிக்கா.

தென் அமெரிக்காவின் பிரதேசங்கள் எங் கும் முஸ்லிம்கள் பரவி வசித்து வருகின்றனர். "கியூபோ" என்னுமிடத்தில் 2000-முஸ்லிம் களுக்கு மேலிருந்து வதிகின்றனர். "பரா ஸில்" என்னுமிடத்தில்தான் அபரிமிதமான முஸ்லிம்கள் வசித்து வருகின்றனர். இன்னோ ரின் தொகை சுமார் 50-ஆயிரமிருக்குமெனக் கூறப்படுகின்றது. தென் அமெரிக்காவைச் சேர்ந்த "ஸென்போலா" என்னுமிடத்தில் ஏராளமான முஸ்லிம்கள் வசித்து வருகின்ற னர் எனினும் சரியான சனத்தொகைக் (Census) கணக்கு எடுக்கப்படவில்லை. மேற் கூறப்பட்ட இடங்களில் முஸ்லிம்களு டைய முன்னேற்றத்துக்காகவும், கல்வி ஞான விவேக அபிவிருத்திக்காகவு மென்று, ராவ்வோ என்னுமிடத்தினின்று 4-பத்திரி கைகளும், ரோலோ என்னுமிடத்தினின்று ஆறு பத்திரிகைகளும் நடைபெறுகின்றன. இவை சமுக சீர்திருத்தமும் புரிந்து வருகின் றன.

ஆர்ஜன்டினா.

ஆர்ஜன்டினா குடியரசாங்க ஸ்தானத்தில் சுமார் 10-ஆயிரத்துக்கு அதிகமான முஸ்லிம் கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுள் அநேகர் சுற்றுப்புறங்களாகிய பைராகவே என்னுமிடத்திலும், போராகா என்னும் தலத்திலும் குடியேறி வசித்து வருகின்றார் கள். கொலம்பியா, நெஸ்வலா முதலிய இடங் களில் கூட சொற்பத்தொகை முஸ்லிம்கள் இருந்து வருகின்றார்கள். ஆர்ஜினியா குடியர சாங்கத்தலை நகரினின்று இம் முஸ்லிம்களின்

முன்னேற்றத்துக்கென இரண்டு அரபிப் பத்திரிகைகள் நடைபெறுகின்றன. இவ்விடங்களில் வாழும் அராபிய முஸ்லிம்கள் அந்தலஸ் என்னும் பிரதேசத்து அராபியர்களுடைய வம்சத்தினின்று விருத்தியானவர்களாவர். இங்கு அராபியர் மட்டும் ஓராயிரத்துக்குக் குறைவில்லாதிருக்கின்றனர்.

டச்சு கையினு.

டச்சு கையினு முதலிய பிரதேசங்களில் பொதுவாக 107827-ஜனங்கள் வசித்து வருகின்றனர். இத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரே முஸ்லிம்களாவர். ஜாவா முஸ்லிம்களுக்கும் இங்குள்ள முஸ்லிம்களுக்கும் பல விஷயத்திலும் நெருங்கிய சம்பந்தங்கள் இருந்துவருகின்றன. சென்ற சில ஆண்டுகளாக ஈண்டு இஸ்லாம் மதப்பிரசாரம் தீவிரமாய் நடைபெற்று வருகின்றது. இவ்விடத்து முஸ்லிம்களில் எளிய வாழ்க்கையினரும், பாடுபட்டுச் சம்பாத்தியம் புரிவோரும் மிகையாகக் காணப்படுகின்றனர்.

கையினு.

பிரான்ஸைச் சேர்ந்த கையினு என்னும் பிரதேசத்தில் 6750-முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். பிரித்தானியாவைச் சேர்ந்த கையினுவில் 18,000 முஸ்லிம்கள் இருந்து வருகின்றார்கள். இவ்விடங்களில் இஸ்லாமிய மக்கள் பரவியமை "வெஸ்ட்ரன் இஸ்லாமிக் அஸோஸியேஷன்" சங்கத்தாரின் புனிதமான மதப்பிரசார ஊழியத்தினுலேயேயாம்.

டிரேண்டாடு.

டிரேண்டாடு என்னும் தீவில் சுமார் 18-ஆயிரம் முஸ்லிம்களுக்கு மேல் வசித்து வருகின்றார்கள். ஆங்குள்ள ஆப்ரிக்க ஜாதியினர் சிறுகச்சிறுக இஸ்லாத்தின் சிறப்புகளையுணர்ந்து இஸ்லாத்தை தழுவிகொண்டு வருகிறார்கள்.

பிரான்ஸ், ஜமேகா.

பிரான்ஸில் இதுகாலை சுமார் 80-ஆயிரம் முஸ்லிம்கள் வசித்து வருகின்றார்கள். அநேகமாய் இன்னேரெல்லாம் கல்வி ஞானமுடைய விவேகிகளாகவே விளங்குகின்றனர்.

ஜமேகா என்னும் பிரதேசத்தில் ஐயாயிரம் முஸ்லிம்கள் வசித்து வருகின்றார்கள். இவர்கள் எளியவர்களாவர். இவர்கள் எளியவர்களாயினும் இஸ்லாமிய பக்தியில் வலியவர்களாவர்.

பெல்ஜியம், லக்ஸம்பர்கு.

பெல்ஜியம், லக்ஸம்பர்கு ஆகிய பிரதேசங்களில் ஐயாயிரம் முஸ்லிம்கள் வதிந்து வருகின்றார்கள். இவர்கள் அநேகமாக யாவரும் தொழிற்சாலைகளில் ஜீவனோபாயம் புரிபவர்.

பாரிஸ்.

பாரிஸில் வதியும் முஸ்லிம்களின் ஜனத்தொகை சுமார் 25,000-பேர்களெனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இங்கு புராதன வனப்புடைய மஸ்ஜிதொன்று இருந்து வருகின்றது. இஃது கி. பி. 1907-வது வருடம் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

பிரித்தானியா, மலேயா.

வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த காடப் என்னுமிடத்தில் சுமார் 10-ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இருந்து வருகின்றார்கள். இன்னேரில் பெரும்பாலோர் அராபியர்களாகவே காணப்படுகின்றனர்.

மலேயா முஸ்லிம்களும், இந்திய முஸ்லிம்களும் ஆங்கு அபரிமிதமாக இருந்து வருகின்றார்கள். இவர்கள் ஆங்கு மணந்து கொண்ட மனைவிமார்களும், இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் இஸ்லாமிய ஆசாரத்தை அனுஷ்டித்து முஸ்லிம்களாகவே யிருந்து வருகின்றனர். ஆங்குள்ள முஸ்லிம் பல வகுப்பினர்களா யிருந்தும் யாவரும் ஐக்கிய வாழ்க்கையே பூண்டுள்ளனர்.

தெற்கு ஷேல்டு.

தென்புற ஷேல்டு என்னுமிடத்தில் அராபியர், மலேயாக்கள், ஹிமாலியர், துருக்கியர், எகிப்தியர் ஆகிய பல திறத்தாரும் சேர்ந்து வசித்து வருகிறார்கள். இவர்களுக்குத் தலைவரா யிருப்பவர் ஹஸன் முஹம்மத் என்பவர். மேனுட்டு இஸ்லாமியப் பிரசார சபையினர் இவர்களது இஸ்லாமிய ஆசார சவுகரியத்துக்காக வென்று மத்ரஸா மஸ்ஜித் முதலியன நிர்மாணிப்பதற்காக நிலம் வாங்கி ஏற்பாடு செய்துவருகின்றனர். இங்குள்ள முஸ்லிம்கள் வாணிபம் புரிந்து வருகின்றனர்.

இதர இடங்கள்.

ஹெல்ஸன்டர் லாண்டு, நார்த் ஷெல்டஸ் நியூகாஸல், லவ்வர்பூல், முதலிய இதர இடங்களிலும் முஸ்லிம்கள் ஏராளமாகப் பரவி வாழ்ந்து வருகின்றனர். லண்டனைச் சார்ந்த கீழ்ப்பகுதியொன்றில் 300 முஸ்லிம்கள் ஒருங்கே வசித்து வருகின்றனர். துறைமுகத்திற்கு வரும் மாலுமிகளும், பிரயாணிகளும் தங்கிச் செல்வதற்கு விடுதிகள் இப்பகுதியில் அதிகமிருந்து வருகின்றன.

வாழ்க்கை

மேற் கூறப்பட்ட பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் சாதாரண வாழ்க்கையுடையவர்கள். முஸ்லிம் சிறுவர்கள் சாதாரணபாடசாலைகளிலும், கிறிஸ்துவப் பள்ளிக்கூடங்களிலும் படித்து வருகின்றார்கள். முஸ்லிம்களுக்கென்று தனிப்பாடசாலையும், இஸ்லாமிய மத்ரஸாவும் ஏற்படுத்த வேண்டுமென்று ஆங்குள்ளோர் வேண்டுகின்றனர். இங்கு சென்ற 30-வருடங்களுக்கு முன்னிருந்தே முஸ்லிம்கள் வசித்து வந்துள்ளார்கள். இம் முஸ்லிம்கள் அவ்விடத்துப் பெண்களை மணந்து விருத்தியா யிருக்கின்றனர். அநேக ஆங்கிலப் பெண்கள் முஸ்லிம் புருஷர்களை மணந்துகொண்டக்கால் மனமுவந்து முஸ்லிம்களாகி யுள்ளார்கள். இத்தகையோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த முறைக்கல்வி புகட்டவேண்டுமென விரும்புகின்றனர். இத்தகைய இடங்களில் இஸ்லாமியப் பிரசாரமும் மதக்கல்வி அபிவிருத்தியும் புரியப்படுமாயின் முஸ்லிம் சமூகம் தீவிர முன்னேற்றமடைந்து சிறந்து விளங்குமென்பது திண்ணம்.

இஸ்லாமிய ஆட்சிமுறை

(ஜனுப் குதாபக்ஷ்சாஹிப் வரைவது)

இஸ்லாம் மார்க்கத்தில் அரசருக்கே மதத்தலைமையும் அளிக்கப்பெற்று வந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதத்தலைவர்களாக இருந்ததோடு அராபியர்கட்கும் தலைவராக விளங்கினர்கள். இத்தகைய ஆட்சிமுறை அஃதாவது மதத் தலைமையோடு ஆட்சித் தலைமையினையும் வகித்துநிற்றல் இற்றைவரை சில மாறுதல்களோடு நீடித்து வந்தது. இஸ்லாமிய ஆட்சி முறையைப் பற்றி இயம்புங்கால் அதனை மூன்று வகைகளாகப் பிரித்துவிடலாம்:(1) பனூஉமய்யாக்கள் அல்லது அராபிய பிரபுக்களிலிருந்து தோன்றிய கலீபாக்கள் (2) பனூ அப்பாசிய்யாக்கள் அல்லது பாரசீக கலீபாக்கள் (3) அபூபக்கர் (ரலி), ஹஜரத் உமர் (ரலி), ஹஜரத் உதுமான் (ரலி) ஹஜ்ரத் அலி (ரலி) முதலானவர்களின் தலைமையிலிருந்த ஆட்சிமுறை ஆகியனவாம்.

மதசம்பிரதாயத்திலும், செங்கோலோச்சுதலினும் கலீபாக்கள் உண்மையிலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முற்றிலும்பின்பற்றியவர்களாவர். இஸ்லாம் நெறிக்கு முழுமனதுடன் இடைவிடா ஊக்கத்துடனும் இக் கலீபாக்கள் தொண்டாற்றி வந்தனர். தங்களின் எல்லா நலன்களையும் இஸ்லாத்தின் மேன்மைக்கே ஈடுபடுத்தியவர்கள். இஸ்லாத்தை உலகமதமாக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தாலும், இதுபற்றி பகைவர்களை எதிர்த்துப் போர் புரியவேண்டுமென்ற ஆர்வத்தாலும் அக்காலத்துக் கலீபாக்கள், கலீபாப் பதவிக்குக் கூட ஒருவர்க்கொருவர் அளவுகடந்து போட்டிபோட்டனரல்லர். இதற்குச் சான்றாக நபிகள்பெருமானவர்கள் காலமான பின்னர், கலீபாப் பதவியை யாருக்குஅளிப்பது என்னும் ஐயப்பாடு நிகழ்ந்தது. அதுகால் ஹஜரத்உமர் (ரலி) அவர்கள் அபூபக்கர் ஸித்திக் (ரலி) அவர்களையே கலீபாவாகத் தேர்ந்து அவர்கள்பால் விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். உடனே இதுபற்றிய கலவரம் கலைந்து போயிற்று. இஸ்லாம் மார்க்கத்தின் சட்டப்பிரகாரம் சந்ததிகளிலிருந்துதான் கலீபாக்களை நியமிக்கவேண்டும் என்னும் வரையறை கிடையாது. அவ்வாறிருக்குமாயின், அதுகாலை நாயகமவர்களின் மரபிலுள்ள அலீ

(ரலி) அவர்கட்கே கலீபாப் பதவியை அளித்திருக்கவேண்டும். ஆனல் அவ்வாறின்றி அபூபக்கர் (ரலி) அவர்களைக் கலீபாவாக ஏற்றுக்கொண்டமை அராபியர்களின் ஓர் ஒப்பற்ற குணதிசயத்தை எடுத்துக்காட்டுகின்றது. அராபியர்கள் என்றும் புறநாட்டினர்க்குத் தலைவணங்காத் தன்மையினர். வேற்றரசர் எத்துணை வலியுடையோராயிருப்பினும் அவர்கட்குக் கீழ்ப்படியாது தம் கூட்டங்களில் யார் பெரியவரோ, யார் நற்குண நல்லொழுக்கத்தில் சிறந்தவரோ, அவரையே அவர்கள் தலைவராகக் கொள்ளுதல் வழக்கமாக இருந்துவந்தது. இதற்கேற்பவே, அபூபக்கர் (ரலி) அவர்கள் வயதிலும் ஒழுக்கத்திலும் முதிர்ந்திருந்தவராக யிருந்தார்கள். நாயகம் (ஸல்) அவர்களும் சமிக்கை செய்திருந்தார்கள். அதனல் அராபியர்கள் தங்கள் வழக்கத்திற்கிசைய அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களை கலீபாவாக ஏற்றுக்கொண்டனர். ஹஜரத் உமர் (ரலி) அவர்களை அபூபக்கர் (ரலி) அவர்களே கலீபாவாக நியமித்துச் சென்றுர்கள். உதுமான் (ரலி) அவர்களை ஹஜரத் உமர் (ரலி) அவர்களால் நியமிக்கப்பெற்ற ஓர் சபையினர் கலீபாவாகத் தேர்ந்தெடுத்தனர். ஹஜரத் உமர் (ரலி) அவர்கள் போர்க்களத்தில் குற்றுயிரோடு இருக்குந் தருணத்தில் கலீபாப் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்படி அலி உதுமான், ஜுபேர், தல்ஹா, சஅத், அப்துர் ரஹ்மான் இபுனு அவ்ப் (ரில்வானுல்லாஹி அலைஹிம்) முதலானவர்களடங்கிய ஒரு சபையை நியமித்ததோடு, இச் சபையில் தம் மகன் அப்துல்லாவையும் ஓர் அங்கத்தினராக அமைத்தார்கள். ஆயின் எக்காரணம்பற்றியும் கலீபாப் பதவிக்குத் தம் மகன் அப்துல்லாஹ் ஓர் அபேட்சகராக நிற்றல்கூடாது என்றும் ஆணையிட்டிருந்தார்கள். இதனின்றும் கலீபாப் பதவிக்கு அக் காலத்தில் எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள் என்பதும், இது விஷயத்தில் அவர்கள் எவ்வாறு சுயநலமின்றி பொது நோக்குடன் ஒழுகினர்கள் என்பதும் வம்ச பரம்பரைப் பாத்தியதையோடு கலீபாவாகத் தேர்ந்தெடுப்பது அவசியமில்லை என்பதும் இனிது விளங்கும். ஆனல் பரம்பரைப் பாத்யதையோடு பிற்காலத்தில் கலீபாக்கள் தோன்றினரே, அஃது எவ்வாற்றுல் எனின் கூறுவாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலும், பொதுவாக அராபியர்கள் வழக்கப்படியும் பாரம்பரீயப் பாத்தியதை என்பது தலைமைப் பதவியில் அநுட்டிக்கப் பெறவில்லை. இஃது பனூ அப்பாஸிகள் என்பவர்களின் உரிமையை ஆதரிக்கும்பொருட்டு இடைக்காலத்தில் இஸ்லாத்தில் புகுத்தப் பெற்றதாயிற்று.

கலீபா—பரம்பரை உரிமை.

முஆவியா காலத்திலேயே பரம்பரை உரிமையை ஏற்புறுத்த முயற்சிக்கப்பெற்றது எனினும், இஃது வலிமை பெறவில்லை. பனூ உமய்யாக்கள் மிகவும் வலிமை பொருந்தியவர்களாக யிருந்த போழ்திலும், அராபியர்களின் வழக்கத்திற்கு மாறுதலாக பரம்பரைப் பாத்தியதையை உட்புகுத்தமுடியாம லிருந்தனர். கலீபாப் பதவியைப் பரம்பரைப் பாத்தியதை உடையதாகச் செய்துவிட வேண்டும் என்னும் துர்ப்போதனையை முதன்முறையாக முஆவியாவுக்குப் போதனை செய்தவன், உலகத்திலேயே முதன் முறையாகக் கள்ள நாணயம் அச்சிட்ட அல் முலீரத்து பின் ஷுஐபா என்பவனுகும். இவனின் துர்ப்போதனைக் கிணங்கியே யஸீதினிடம் சிலர் ராஜவிசுவாச வாக்குறுதியும் நல்கினர். கலீபாக்கள் இதுகாறும் தம்மை அரசர்கள் என்று சிறப்பித்துக் கொண்டனரல்லர். ஆனல் முஆவியா முதன்முதலாகத் தன்னை ஓர் அரசர் (முலுக்) எனக் கூறிக் கொள்ளலானர். இதுபற்றி ஜைதுப்னு மஸ் அப் என்பவர் முஆவியாவை இழித்துரை செய்துமுள்ளார். பரம்பரைப் பாத்தியதையை வற்புறுத்திய பனூ உமய்யாக்களை பொதுவாக எல்லா முஸ்லிம்களும் அருவருப்புக் காண்பிக்கலாயினர். இதன் தொடர்பாய் சிறுகதை ஒன்றும் கூறப்படுகின்றது. அது வருமாறு:—முஆவியா தன்னை ஓர் அரசன் என விளம்பரப்படுத்திக் கொண்டதும் ஸஅதிப்னு அபீ வக்காஸ் என்பவர் முஆவியா முன்தோன்றி தமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார். உடனே முஆவியா சிரித்துக்கொண்டு "நான் உண்மையாளர்களின் தலைவர் என்னும் பட்டத்தைத் தரிப்பதில் என்ன தவறுளது?' என்று வக்காஸ் அவர்களை வினவினர். அதற்கு வக்காஸ் அவர்கள் "நும்போன்று நான் இந்தப் பட்டத்தை அடைய விரும்பமாட்டேன்'' என்று விடையளித்தார். இத

னின்றும் கலீபாக்கள் தொன்மையில் மார்க்கத்தின்செழிப்பிலேயே தலைமையானநோக்கமுடையவர்களா யிருந்தனர்என்றும், அவ்வாறின்றி அவர்கள் அரசராக ராஜரீகம்புரிவதில் அக்காலத்தில் முஸ்லிம்கள் சம்மதப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது. கலீபாப் பதவியை பனூஉமய்யாக்கள் காலத்திலும் பனூஅப்பாசிய்யாக்கள் காலத்திலும் பரம்பரைப் பாத்தியதை உள்ளதாகச் செய்துவிடப் பெருமுயற்சி செய்யப்பட்டதெனினும், இதற்கு ஆதாரமாக பல சான்றுகள் புனைந்துரைக்கப்பெற்றன வெனினும், கலீபாப் பதவியைப் பொறுத்த வரையில் இத்தகையோர் முயற்சி பலன்பெறவில்லை. பனூஉமய்யாக்கள் காலத்தில் கலீபாக்களாக இருந்த பதினொன்கு பேர்களுள் நால்வரே தம் புதல்வர்களை கலீபாக்களாக நியமித்தனர். இஃதே போல் பனூஅப்பாஸ் காலத்தில் கலிபாக்களாக இருந்த இருபத்து நான்கு பேர்களுள் அறுவரே தம்புதல்வர்களைக் கலீபாக்களாக நியமித்தனர். எனவே தம் புதல்வர்களைப் பெரும் பதவிகளில் நியமித்துப் பார்ப்பது என்னும் புத்திர வாஞ்சையிலும், அருகரானவர்களையே உயரிய பதவிகட்குத் தேர்ந்தெடுத்து நியமிப்பது என்னும் பண்டைக் கால அராபிய வழக்கமே பெரும்பாலும் கையாளப் பெற்று வந்தமை காண்க.

கலீபாக்களை முஸ்லிம்கள் கண்மூடித் தன்மையாகத் தம்தலைவர்களாக அமைத்துக்கொண்டார்களல்லர். கலீபாக்களும் தமக்குப் பதவி கிடைத்தவுடன் இறுமாப்பு எய்தி தமது கடமைகளை யாற்றப் பின்வாங்கினார்களல்லர். கலீபாப் பதவி என்பது ஓர் அரிய உயரிய சேவையாகக் கருதப் பெற்று அச் சேவையினை அக்காலத்து முஸ்லிம்கள் முற்றிலும் அக் கலீபாக்களிடம் எதிர்ப்பார்த்தனர். கலீபாக்களும் அவ்வாறே ஒழுகி வந்தனர். எனவே ஆளப்படுவர்கட்கும் ஆளுபவர்கட்கும் ஓர் ஒப்பந்தம் இருந்து வந்தது என்றும், இவ் ஒப்பந்தத்தை இரு தரத்தாரும் நன்கு போற்றி வந்தனர் என்றும் நமது கலீபாக்களின் சரிதைகளிலிருந்து இனிது புலனாகின்றது. தாம் மன்னர் பதவியில் இருப்பதாகப் பெருமகிழ்ச்சி அடைந்து குடிஜனங்களைக் கலீபாக்கள் தம்மிலும் தாழ்வுடையராக மதித்தனரல்லர். இதற்குச் சான்றாக கலீபா ஒருவர் தம் பதவியை ஏற்றவுடன் அவர் மக்களுக்கு அறிக்கையிட்டதோர் விளம்பரத்தை ஈண்டு சுருக்கிக் கூறுகின்றாம்:—

"நான் தற்பெருமைக் காகவோ, உலக நலனுக்காகவோ, அரசுரிமைக்காகவோ, வலிதோடு போர் புரியவில்லை. நான் இறைவனுக்காகவும் அவனளித்த இஸ்லாத்திற்காகவுமே போரிட்டேன், நான் (என் சொந்த நலனுக்காக) பெரும் கட்டிடங்களையோ, ஆறுகளையோ, அரண்மனைகளையோ, இயக்கப்போவதில்லை; என் மனைவி மக்கட்காகச் செல்வத்தையும் சேகரியேன். எனவே, நான் என் உறுதி வாக்கைக் காப்பாற்றுவேனாயின் நீங்களும் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். நான் ஒழுக்கத்தில் பிறழுவேனாயின் நீங்கள் என்னை உடனே நீக்கிவிடலாம். ஆனால் அவ்வாறு நேர்ந்தக்கால் எனக்குமட்டும் நீங்கள் முன் எச்சரிக்கை செய்து விடுவீர்களாக. முன் எச்சரிக்கை கேட்டு நான் மீண்டும் என் ஒழுக்கத்தைச் சீர்திருத்திக் கொள்வேனாயின் என்னை மன்னித்து விடுவீர்களாக. இந்த உடம்பாட்டைக் காப்பாற்றக்கூடிய என்னினும் சிறப்புடைய ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்களானால், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பெற்றவர்க்கு நானே என் மரியாதையை முதன் முதலாகச் செலுத்துவேன். மக்களே! (அரசனாயினும்) ஒருவன் பாவமான காரியத்தைப் பணிப்பானாயின் அவன் ஏவலைச் செவியேற்கலாகாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.''

எத்துணைப் பெருந்தகைமை பொருந்திய விளம்பரம்! தான் ஓர் கலீபா என்னும் பெருமையோ மமதையோ இதில் எட்டுணையும் காண்பதரிதாகின்றது. மக்களின் ஊழியனாகவும், சன்மார்க்கக் காவலராகவும் தன்னை மதித்து, அவ்வாறே தன்னை மக்கள் தேர்ந்தமை பொருட்டுத் தன் பதவியும் தன் நல்லொழுக்கம் கேடுறாத வரையிலுமே நீடிக்கும் என்றும் இவ்விளம்பரத்தில் எடுத்துக் காட்டுதல் காண்க. இஃதேபோல் மற்றொரு கலீபாவும் " இறைவன் பேராலும், நாயக மவர்கள் பேராலும் இது கூறுகின்றேன். நான் இறைவன் சட்டத்திற்கு இயைபு கொண்டும், இறைவன் அருளிய திரு குர் ஆனுக்கு இயைபு கொண்டும், நபி நாயகமவர்கள் உங்களை எவ்

வாறு உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை யின்றி நடத்தினர்களோ அவ்வாறாகவே நடத்துவேன்'' என்றுதான் கலீபாப் பதவியை ஏற்றவுடன் மக்களிடத்தே உறுதி வாக்களித் திருக்கின்றார்.

இச்சான்றுகளினின்றும் அராபியர்கள் தங்கள் கலீபாக்களைத் தம்மினும் உயர்ந்தவர்களாக, அஃதாவது மக்களின் கட்டுப்பாட்டிற்கு மீறியவர்களாகக் கருதவில்லையென்பது வலியுறுத்தப்பெறுகின்றது. மக்கள் கீழ்ப்படிவது என்பது ஓர் உடம்பாட்டின் பேரிலேயே நிகழ்ந்துவந்ததன்றி, கலீபாக்களைக் கண்டஞ்சி முஸ்லிம்கள் கீழ்ப்படிந்தனரல்லர். சன்மார்க்கம் ஓங்குதற்குத் தலைவர்களின் அவசியத்தை உணர்ந்தவர்களாய், அவ்வாறு சன்மார்க்கத்தைப் பரவுதல் செய்யவல்ல தலைவர்களைத் தேர்ந்து, அத்தொண்டை அக் கலீபாக்கள்பால் அவர்கள் எதிர்பார்த்தனர். கலீபாப் பதவி என்பது ஒரு பொறுப்பு வாய்ந்த தொழில் நிலையாகவே இருந்தது. இத் தொழில், எக்காரணம்பற்றியேனும் சிறிது ஏறுமாறு செய்வரேல் அவர்களை உடனே கலீபாப் பதவிகளினின்றும் நீக்குவதற்கும் உரிமையிருந்தது. இதுவே கலீபாப் பதவியின் தத்துவமாகும். இதற்கேற்ப, பல முறைகளில் கலீபாக்கள் தம் நெறியில் சிறிது வழுவிய போழ்தெல்லாம் நல்லறச் சீலர்கள் கலீபாக்களுக்கு நல்லறிவுறுத்தித் திருப்பியும் வந்தனர் என்பதற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஹாரூன் ரஷீது என்னும் கலீபா "சுப்யானதவ்ரீ'' என்பவர்களை கண்ணியப்படுத்தக் கருதி அவர்களுக்கு அழைப்புத் திருமுகம் ஒன்றனுப்பி யிருந்தார். இத் திருமுகத்தைக் கண்ட சுப்யான தவ்ரீ "நீர் முஸ்லிம்களின் செல்வத்தை நேர்மையற்ற வழிகளில் செலவிட்டீராதலால், உமக்கும் எனக்கும் ஒருவிதத் தொடர்புமில்லை. எனக்கு உம் மீதிருந்த அன்பும் அகன்றுவிட்டது. நீர் பொதுமக்களின் பணத்தை அவர்கள் சம்மதம் கேட்டுச் செலவிட்டீரோ?'' என்று விடையளித்து ஹாரூன் ரஷீதுக்கு புத்தி புகட்டினர். கலீபா என்ற அச்சமும், கலீபா தம்மை அழைத்தனரே என்ற மகிழ்ச்சியும் படைத்துக் கலீபாவின் அழைப்பிற்கிணங்கி "சுப்யான தௌரீ'' அவர்கள் பக்தாத் நகர் நோக்கி ஓடோடிச் செல்லாது, இருந்த நிலையிலேயே இருந்து அறிவுறுத்தும் பெருந்தன்மை இற்றைக்கும் ஓர் நற்சான்றாயிருக்கின்றதன்றோ?

நிற்க; அக்காலத்தில் முதல் நான்கு கலீபாக்களே முற்றிலும் மதத்தொடர்பு கொண்டவர்களாய் மதத்திற்கே தம் உடல் பொருளாவி யனைத்தையும் தியாகம் செய்தவர்களாயிருந்தனர். தொழுகைக் காலத்தில் தலைமை வகிப்பதும், ஏழைகட்கு அறம் வழங்குவதும் ஏனைய மதச் சடங்குகளை யாற்றுவதும், முமினீன்களின் காவலர்களாய் இருப்பதும், அவர்கள் வாழ்க்கை முறையால் இருந்துவந்தது. பெரிய வெற்றிகள் தமக்குக் கிடைத்த தருணங்களிற்கூட அவர்கள் தம் கடமைகளை மறந்தனரல்லர். இதற்குப் பின்னர் இயற்கையாகவே மதத்தலைமையோடு அரசுரிமையும் பொருந்தலாயிற்று. சிற்சில சந்தர்ப்பங்களில் அரசுரிமை மதத்தலைமையினும் பிற்காலத்தில் மேம்பட்டதெனினும், தொடர்ச்சியாக எல்லாக் கலீபாக்களும் மதத்தலைமையினையே தம் முதற் பணியாகக்கொண்டொழுகினர் என்பதில் ஐயமில்லை. இதில் பனூ உமய்யாக்களைப் பார்க்கினும் பனூ அப்பாசியாக்கள் மதத்தைக் காப்பாற்றுவதில் சிறந்து விளங்கினர்கள்.

(தொடரும்.)

மதிப்புரை

பர்மிய பால போதினி:—பர்மிய பால போதினி என்னும் அழகிய நூலொன்று வரப்பெற்றோம். தானகவே பர்மா பாஷையைக் கற்றுக் கொள்ள விரும்புவோர் இந்நூலால் பெரும்பயன் காண்பர். பல மொழிகளிலும் பயிற்சி இருத்தலால் மக்கட்குப் பல துறைகளிலும் நலமேயாம். எனவே, தமிழகத்தின் கண்ணிருந்தும் பர்மா நாடு சென்று வாணிபம், உத்தியோகம் முதலியன புரிபவர்க்கும், புரியக் கருதியிருப்போர்க்கும் இந்நூல் சிறந்த துணைக்கருவியாம். இது நவீன கதா புத்தகசாலையாரால் அழகு பெறப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதன் விலை அணு 0—4—0. வேண்டுவோர் ரெங்கூன் நவீன கதா புஸ்தகசாலை 251 மங்கமாரி வீதி என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அநாதைக் குழந்தைகள்.

தீர்ப்பு நாளில் நானும் அநாதைக் குழந்தைகளைப் பாதுகாப்பவர்களும் நெருங்கிய இரு விரல்களைப் போன்றிருப்போம்—நபிகள்பெருமான்.

'அகதிக்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழியை அனைவரும் அறிவர். இஸ்லாத்தில் திக்கற்ற குழந்தைகளைப் பாதுகாப்பவர் இறைவன் கருணைக்கும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலான நட்பிற்கும் பாத்திரமாவார்கள் என்பதாகக் கூறப்பெற்றுள்ளதை மேற்கண்ட ஹதிதிலிருந்து நன்குணரலாம். இஸ்லாம் மதம் மற்றெல்லா மதங்களைப் பார்க்கினும் அருள்நெறியை வலியுறுத்திக் கூறியுள்ளதை ஏனை மதத்தினர் அறியாராதலின் ஈண்டு அதனை எடுத்துக் காட்டுதல் சிறப்பாகின்றது. திக்கற்ற குழந்தைகளைக் காப்பாற்றுதல் என்பது சமூகத்திற்கு ஓர் ஒப்பற்ற தொண்டாகும். திக்கற்ற குழந்தைகட்குத் தெய்வமே துணை யென்பதை அவ்வாறு காப்பாற்றுகின்றவர்களே மெய்ப்பிக்கின்றார்கள். திக்கற்றவர்களைப் பேணும் கடமை இறைவனது ஆகின்றது. இத்தகைய தன்கடமையைத் தம் கடமையாக மக்கள் மதித்து தொண்டாற்றுவரேல், இறைவன் இச்செயல்கண்டு அவ்வாறு காப்பாற்றியவர்கள் மீது தன் அருளைச் சுரக்கச் செய்வான் என்பதில் ஐயமுளதோ? அரிய தந்தை தாயினை இழந்து, சிறகில்லாப் பறவைகளாய்த் தத்தளிக்கும் சின்னஞ் சிறு குழந்தைகளின் எளிய நிலைமையினும் தாழ்வுடையோர் நிலைமை யாண்டும் இலது. கொடிது கொடிது வறுமை கொடிது என்றும், அதனிலும் கொடிது இளமையில் வறுமை என்றும் நாமறிவோம். அவ்வாறு இளமையில் வறுமையால் இன்னலுற்ற மக்களை இறைவன்றான் காப்பாற்ற வேண்டும். அன்புடைய பிறர் இக்கருணையின் மிக்கச் சேவையினால் நபிகள் பெருமானருடன் மற்றொரு விரல் போன்று தீர்ப்புநாளில் இருப்பர் என்பதி னின்று அநாதை ரட்சிப்பிற்கு எத்துணைப்பெருமையை இஸ்லாத்தில் அளித்துள்ளது பாருங்கள், தம்மக்கள் வேறு பிறமக்கள் வேறு என்று கருதாமல், திக்கற்ற குழந்தைகளைக் கண்டு இரங்கி, தம் குழந்தைகட்கும் இதே நிர்க்கதி ஆண்டவன் சித்தத்தினால் வாய்ப்பதற்கு நாட்செல்லாதே என்று உண்மை ஓர்ந்து, மனம் கவன்று, அக்குழந்தைகளை அன்போடு தாய்க்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய் வளர்த்து நன்னிலைமைக்குக் கொண்டு வரும் அறச் செயலினும் விழுமியதோர் செயல் இல்லை யென்றே கூறலாம். இதற்குச் சான்றாக நமது நபிகள் பிரானவர்கட்கு நிர்க்கதிவாய்ந்த குழந்தைகள் மீது எத்துணை அன்பு இருந்தது என்பதை அவர்கள் திவ்விய சரிதையினின்றும் ஓர் சம்பவத்தை எடுத்துக் கூறுதும்:—

திருமதினா நகரம். நகரெங்கும் விழாக் கோலமா யிருந்தது. தெருக்கள்தோறும் ஆடவரும் சிறாரும் கூட்டம் கூட்டமாய்ச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் அணிந்திருந்த ஆடைகள் கண்டார் உளத்தில் மகிழ்ச்சியை விளைக்கும் வனப்புடையனவாய் ஆடம்பர மற்றனவாய், தூயனவாய் இருந்தன. பொதுவாக அக்காட்சி பெரும் சிறப்புடையதாய்த் தோற்றியது. அன்று எத்தினம்? அனைவரும் விழாக் கோலமொடு எங்கு செல்கின்றனர்? அந்நாள் ஈது நாளாகும். எனவே எல்லோரும் களிப்பொடு காணப்பெற்றனர். இம்மகிழ்ச்சிப் பெருக்கு மதினமா நகரையே சூழ்ந்து கொண்டதென்று கூறுமாறு ஒருவர் மனத்திலேனும் கவலையோ துக்கமோ மற்றெந்த வகையான மாறுபாடான தோற்றமோ காணப்படவில்லை. கெம்பீரம் பொருந்திய தாடிகளை உடைய முதியார்கள்; திடகாத்திரத்தினாலும் பருவத்தினாலும் விளையாட்டுப் போக்குடைய இளவல்கள்; துள்ளிக் குதித்துக்கொண்டு தம் தந்தையர் கரங்களைக் கோர்த்துப் பிடித்த வண்ணமாய்ச் செல்லும் சின்னம் சிறு குழந்தைகள்; இவர்

கள் எல்லாம் ஈதுகாவை நோக்கி ஒரு முகமாகச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

நகரத்திற்கும் ஈதுகாவிற்கும் ஏறக்குறைய கால்மைல் தூரம் இருந்தது.

அத்தருணத்தில் ஒரு சிறு குழந்தை இக் கூட்டத்தில் சேராது தனியே நின்றுகொண்டிருந்தது. அதன் இளமதிபோன்ற முகத்தில் துக்கம் என்னும் களங்கம் தோன்றியது. இதனை அதன் இரு விழிகளும் நீர் சிந்தி எடுத்துக் காண்பித்துக் கொண்டிருந்தன. 'எல்லோரும் மஸ்ஜிது செல்கின்றனரே! எல்லாக் குழந்தைகட்கும் தாய் தந்தையர் இருக்கின்றனரே! நமக்கு யார் இருக்கின்றார்கள்! அந்தோ! அந்தோ!' அக்குழந்தையின் மனம் துயரக்கடலில் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தது. என் செய்யும்? அதுவோர் குழந்தை; அதன் பெற்றார் அதனைத் தம் இளம் பருவத்திலேயே விடுத்து விண்ணுலகு சென்று விட்டனர். திருநாளன்று அதற்கு ஆடைகள் அணிவித்து அலங்காரமாய் மஸ்ஜிது இட்டுச் செல்வதற்கு யாரே உளர்? இறைவன்தான் துணை.

குழந்தையின் இருகண்களும் ஆறாய்ப் பெருகின. அதுபோழ்து "அப்பா! குழந்தாய் நீ ஏன் அழுகின்றாய்?" என்று ஒருவர் கேட்டு அக் குழந்தையை எடுத்து அணைத்து முத்தம் ஈந்தார்.

குழந்தை:—எனக்கு தந்தை இல்லை. என்னை மஸ்ஜிதுக்குக் கூட்டிச் செல்ல யாரிருக்கின்றார்கள்? (என்று மீண்டும் அழுதது).

வந்தவர்:—இதற்கா அழுகின்றாய்? கவலைப் படாதே! நான் உனக்குத் தந்தையாய் இருக்கின்றேன்.

எனவும் குழந்தையின் முகம் சூரியனைக் கண்ட தாமரைபோல் பூத்தது. விசித்திர விளையாட்டுக் கருவிகளையளிக்கப்பெற்ற ஒரு குழந்தைக்கு எத்துணை மகிழ்ச்சி அரும்புமோ அத்துணை மகிழ்ச்சி இச் சிறு தந்தையிலாக் குழந்தை முகத்தில் பூத்தது.

குழந்தை:—அப்பொழுது என்னை உடனே மஸ்ஜிதிக்குக் கூட்டிச் செல்லுங்கள்.

வந்தவர்:—கண்ணே! நீ நடந்து சென்றால் உன் கால்கள் நோகும். என் தோள் மீது ஏறிக் கொள்.

என்று கூறி அக் குழந்தையின் மெல்லிய கரங்களைப் பற்றித் தம் புனிதமான தோள்களின்மீது வந்தவர் சுமந்து மஸ்ஜிது நோக்கி நடக்கலானார். இத்துணைக் கருணை பொருந்தியவர், திக்கற்ற தந்தையற்ற மகவுக்குத் தந்தையானவர்; தம் தோள் வருந்தச் சுமந்து சென்ற உத்தமர் யாராயிருக்கலாம்?

அவரே கருணை வடிவோடு இவ்வுலகத்தில் தோற்றுவிக்கப்பெற்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்! நபிகள் பெருமான் அவர்களே இத் தந்தையற்ற குழந்தைக்குத் தந்தையானார்கள். இதனினும் நபிகள் பெருமானவர்கள் தம் இரக்க மிகுந்த சிந்தைக்கு வேறு என்ன சான்று வேண்டும்? நபிகள் பெருமானார் அவர்கள் எல்லாச் செயல்களையும் பிறர் கண்டு அவ்வாறே ஒழுகுதற்குச் செய்தவர்களாவர். இத் திக்கிலாக் குழவியைத் தம் திருத்தோள்கள் நோவக் கால்மைல் தூரம் சுமந்து சென்ற இந் நிகழ்ச்சியிலிருந்து, நாம் அறிந்துகொள்ள வேண்டியது யாதெனின், நாமும் திக்கிலாக் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதே. ஆதலாலன்றோ எம் பெருமானாரும்,

"தீர்ப்பு நாளில் நானும் அநாதைக் குழந்தைகளைப் பாதுகாப்பவர்களும் நெருங்கிய இரு விரல்களைப் போன்றிருப்போம்" என்றார்கள்.

இதனை முஸ்லிம்கள் அனைவரும் தம் மனத்தில் ஓர்ந்து அதற்கேற்ப ஒழுகக் கடமைப் பட்டுள்ளார்கள் என்று கூறவும் வேண்டுமோ?

---

(1) துன்மார்க்கம் அகற்றி சன்மார்க்கத்தைப் புகட்டும் ஹிபாஜத்துல் இஸ்லாத்தைக் கைவிடாதீர்கள்!

(2) இத்தமிழக முஸ்லிம்களின் மார்க்கத்திற்கு உண்மையாய் உழைக்கும் தேனினும் இனிய இச் செந்தமிழ்ப் பத்திரிகையில் எல்லோரும் சந்தாதாராகச் சேருங்கள்!

(3) மார்க்க விரோதிகளின் அபாயத்தை நீக்குவது ஹிபாஜத்துல் இஸ்லாமே.

சங்கடம் யாருக்கு?

ஜனப் M. A. மலிக் சாஹிப் வரைவது.

சன்மார்க்க நெறிவிலகி, சத்வழிதெரியா
சத்தமிடும், ஒருவனுக்கு
சங்கடம், சங்கடமே!

இக் கட்டுரையைப் படித்துப் பரிசிலனை செய்ய, அபிலாஷையுடையவர்கள், இது சம்பந்தமான "தாவூதியா பாகவி" தாம், தமது "தாருல் இஸ்லாம்" என்ற பத்திரிகையில் கடந்த, 11-7-1930-லும் அப்படியே 18-7-1930-லும்..................................... "இக்காலத்துள்ள சில சங்கடங்கள்" என்ற மகுடத்தின்கீழ், மேற்கண்ட பிரதிகளின் 16-வது பக்கங்களைக்கொண்ட பத்திராதிபரங்கங்களில், முறையே வாய்விட்டிருக்கும், பிரதிகளை, தங்கள் பார்வையில் வைத்துக் கொண்டு பரஸ்பரம் எதிர் விவாதமான இரண்டு கட்டுரைகளையும் சீர்தூக்கிப்பார்த்து, நியாயத்துக்கும் தர்மத்துக்கு மாத்திரம் "ஆமன்ன" "சதக்ன" என்றுசொல்லி சம்மதங்கொடுக்க வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏனென்றால், ஆட்சேபிக்கவும் நிராகரிக்கவும் ஒழிக்கவும் தகுந்ததாய் கருதப்படும் ஒரு கட்டுரையை அல்லது வியாசத்தைப் பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் பொழுது விவாதத்திற்குரித்தான அவ் வியாசத்தைத் துவக்க முதல் கடைவரைக்குமுள்ள யாவற்றையும் ஒரு அட்சரமேனும் விடாமல் அப்படி அப்படியே ஏட்டுக்கொடுத்து தர்க்கிப்பதுதான் தர்க்கசாஸ்திர சம்பிரதாயமென தர்ம சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

இதனால் விவாதிப்போர் அல்லது தர்க்கிப்போர் தாம் எடுத்துக்கொண்டிருக்கும் விவாதத்திற்குரித்தான வியாசத்தைக் கூட்டியோ குறைத்தோ, செதுக்கியோ, பிதுக்கியோ திரித்தோ, கூறுகூறுக்கியோ தர்க்கித்துப் பேசுகிறார் என்ற பழி தர்க்கம்செய்வோரைச் சாராதிருப்பதோடு படிப்பவர் எத்தகைய சந்தேகமுங்கொள்ள இடமின்றி அவர்கள் விவாதத்தைத் தெளிவாய்க் கண்டுபிடிக்கவும் யதார்த்தம் அவர்களுக்குச் சரியாய் விளங்கவும் இடங்கொடுத்து நிற்கும்.

ஆனால் நான் அப்படிக் கையாளுவதற்கு தர்க்கத்துக்குரிய வியாசம் மிக்க நீண்டதாயும் அத்தனையும் நிராகரிக்கக்கூடியதாயு மிருப்பதால், அதற்கு இச்சிறு சஞ்சிகை இடந்தராதிருப்பதனிமித்தம் விவாதத்திற்குரித்தான "வியாசம்" முழுதும் படிக்கப் பிரியமுடையோர் தயவுசெய்து மேற்கூறிய விபரப்படிக்கான "தாவூதிய பாகவி"யின், "தாருல் இஸ்லாம்" பத்திரிகையையும் தம் முன் வைத்துக்கொள்ள திரும்பவும் பரிந்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

தாவூதிய பாகவியின் வியாசமகுடம்
இக்காலத்துள்ள சில சங்கடங்கள்
தாருல் இஸ்லாம், 11-7-1930, பக்கம் 16
" 18-7-1930, " 16-17
பார்க்க.

பக்தர்களே!

முதன்முதலாய் மகுடத்தின்கீழ் வெளிவந்திருக்கும் பத்திரிகையில் கண்ட வியாசத்தின் உள்ளும் புறமுமான சாராம்சத்தை மாத்திரம் முதலில் குறிப்பிட்டும் அதற்கு அதில் கண்டபடிக்கான ஆதாரங்களையும் எடுத்துக் காட்டிய பின்னர் அவைகளைப்பற்றி சர்வாங்கமாக ஆராய்ச்சி செய்வோம்.

வியாசத்தின் சாராம்சம்,

உருவப்படங்களைக் கையாடலாம்; என்பதே!

இதற்கு அவர் கூறி யிருக்கும் ஆதாரங்களும் சமாதானங்களு மாவன:—

1. அவர்கள், (ஜின்கள்) அவர் (சுலைமான்) நாடியபடி மாபெரும் மஹால்களையும், உருவங்களையும் ஏரிகளை போலுள்ள தடாகங்களையும் பெரிய பெரிய பத்திரங்களையும் செய்து கொடுத்தார்கள்..........

தா. இ. 11-7-30, பக்கம் 16.

மேற்காட்டிய வசனங்கள் திருக்குர்ஆன் "சூறத்ஸபா" என்ற 34-வது அத்யாயம் 13-வது வாக்கியத்துக்கு உரை என காட்டு கின்றார்.

இந்த உரையை அனுசரித்து, பின்னும் அவர் விளக்கி யிருப்பதாவது.

(A) "நாம் முன்னர் காட்டிய குர்ஆன் வாக்கியத்தில் ஹஸரத் சுலைமான் அவர்களுக்கு ஜின்கள் உருவப்படங்களையும் செய்து கொடுத்திருக்கின்றன, வென்று நன்கு தெரிந்து கொள்ளுகின்றோம்.................

தா. இ. 18-7-30. பக்கம் 16. காலம் 1.

(B) "எமதாண்டவன், சுலைமான் அவர்கள் உருவங்கள் வைத்துக்கொண்டிருந்தார் களென்று கூறி இருப்பதை நாம் விட்டுவிடுவோம்................

தா. இ. 18-7-30, பக்கம் 16, காலம் 2.

மேற்காட்டிய 1. லக்கமிட்ட திருக்குர்ஆன் வாக்கும், அதை அனுசரித்த அவருடைய (A), (B) விளக்கமும், உருவப் படங்களைக் கையாடலாம் என்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட மூதாரமான வேத அத்தாட்சிகளா யிருக்கின்றன.

இந்த வேத அத்தாட்சிகளுக்குத் துணையாக ஆகமப் பிரமாணங்களிலிருந்து, அவர் எடுத்திருக்கும் மேற்கோளும் அம் மேற்கோளாகிய, ஆகமப் பிரமாணத்துக்கும், வேத அத்தாட்சிக்கும், தாரதம்மியங்காட்டி அவைகளுக்கு அவர் கூறும் சமாதானமும் அவர் போடும் வினாக்களின்பால் ஏற்படும் உட் கருத்துமாவன.

2. எந்த வீட்டில், நாயும், உருவமும், காணப்படுகின்றனவோ அந்த வீட்டில் மலக்குகள் நுழையமாட்டார்கள்."—நாயக வாக்கியம்.

"யாரேனு மொருவன், தன்னுடைய உருவத்தை மனிதர்கள் செய்து வைக்கவேணு மென்று எண்ணங் கொள்வானாயின் அவன் தன்னுடைய இருப்பிடத்தை நரகமாக்கிக் கொள்வானாகை............

தா. இ. 11-7-30. பக்கம் 16. காலம் 1.

(A) "ஆனால் எம்பிரான் அவர்களுடைய திருவாக்கியங்களினால், உருவங்கள் வைக்கக் கூடாதெனக் கண்டிக்கப்பட் டிருப்பதாய்த் தெரிந்து கொள்ளுகின்றோம். குர்ஆனில் காணப்படும் ஆண்டவனுடைய வாக்கியத்துக்கும், எமது வள்ளலிரசூல் அவர்கள் சொல்லி யிருக்கும் திருவாக்கியங்களுக்கு மிடையே முரண்பாடு காணப் படுவதாகவே பஹிரங்கமாய்த் தெரிகின்றது. சிறிது ஆழ்ந்துகவனிக்கும் மேலானவர்கள் இவ்விரண்டினுக்கு மிடையே எவ்வித பேதமுமில்லை என்றே கொள்ளுவார்களென் றெண்ணுகின்றோம்.....

தா. இ. 18-7-30, பக்கம் 16, காலம் 1.

(B) "நாயகமவர்கள் எக்கருத்தை முன்னிட்டு இதை விலக்கி இருக்கிறார்களோ, அந்த தாத்பரியம் இக்காலை உண்டா? இல்லையா?

மேற்கண்ட 1. (a), (b), — 2. (a), (b) யில் கண்ட விளக்கங்களிலிருந்தும், அவைகளை யொட்டி, இக்காலை உண்டா? இல்லையா? என்ற கேள்வியிலிருந்தும், திருக்குர் ஆன் வாக்கையும் றசூல் அதிபர் வாக்கையும், எடுத்தாண்டு, இரண்டையும் சம்பந்தப்படுத்தி பரஸ்பரம் இருவாக்குகளும், ஒன்றுக்கொன்று முரண்போல் வெளிப்படையாய்த் தோன்றினாலும், கருத்துகளில் பேதமில்லை என்றும் திருக் குர்ஆன் வாக்கில் கண்ட, 1. (a), (b), விளக்கத்தின் கருத்து சுலைமான் நபீ (அலை) அவர்கள் உருவப் படங்களை கையாடினது அந்தக் காலத்துக்குச் சரி என்றும், திருக் குர்ஆன், அந்த காலத்தையே அனுசரித்து சொன்னதென்றும் நபீ அவர்கள் உருவப்படங்களைக் கையாடலாகாது என்று அருளிய வாக்கு, நபீ அவர்கள் காலத்துக்கே பொருத்தமென்றும், இக்காலை அதாவது 13-வது நூற்றாண்டுக்கு அந்தத் தாத்பரியம் சலாவணியாகாதென்றும், எனவே பரஸ்பரம் இருவாக்குகளும் முரண்பட்டதல்ல வென்றும், காலத்தை அனுசரித்ததே என்றும், நபீ திருவாக்கை இக்காலைக்கும் சலாவணிக்கு எடுத்துக் கொள்வதானால், உருவப்படம் கையாளுவோருடைய ஸ்திதியையும் மனோபான்மையையும் பொறுத்ததே என்றும், ஆகையால் உருவப்படங்களை இக்காலை நன்னோக்கத்துடன் கையாடலாம் என்ற ருஜு ஏற்படுகின்றது.

அடுத்தபடி இதற்கு அனுகுணமாக அவர் கையாண்டிருக்கும் ஒப்புமை நியாயமும் அதை அனுசரித்த வினாக்களுமாவன:—

வேலூர், வேதவித்தியாசாலைத்தலைவரா யிருந்த மௌலானா "அப்துல் வஹ்ஹாப் சாஹிப்" அவர்களிடம் "கிராமபோன்" வைத்துக் கேட்பது கூடுமா? கூடாதா? என்ற வினக் கிளம்பியபொழுது,- மௌலானா அவர்கள்;.

3. "ஆண்டவனின் அத்தியாச்சரியங்களை யும், அவனுடைய ஹிக்மத்தையும் மென்மே லும் சிந்தனைசெய்யும் எண்ணத்துடன் ஒருவன் "கிராமபோனை" வைப்பானாயின், அது குற்றமாகாது; ஆனால் வீண் விளையாட் டுக்காகவும் கேலிப் பரிகாசத்துக்காகவும் துர்எண்ணங்கொண்டு ஒருவன் அதே "கிராம போனை"க் கேட்பதுகூடாது நன்றன்று என்று சொல்லி கிராமபோன் வைத்துக் கேட்பது கூடுமா? கூடாதா? என்னும் விஷ யம் வைப்பவரின் பக்கமும் அவருடைய நிலைமையைப் பற்றியுமே யிருக்கின்றது என்று மார்க்கத் தீர்ப்பளித்திருக்கிறார்கள். இஃதல்லவோ பெரியாரின் நற்குணம்........

தா. இ. 18-7-30, பக்கம் 16, காலம் 3.

4. இதையெல்லாம் கவனிக்கும்போது பிரஸ்தாப விஷயத்தில் ஏதேனும் நன்னோக் குடன் உண்மையான உருவங்களை வெளி யிடுவது கூடுமா? கூடாதா?......................

தா. இ. 18-7-30, பக்கம் 16, காலம் 3.

மேலேகண்ட 3, 4 லக்கமிட்ட விளக்கங்கள் "கிராமபோனு"க்கும் உருவப்படத்துக்கும் ஒப்பிட்டுச்சொல்லிய நியாயமென்பது வெளி படை. கிராமபோனைக் கையாடுவது அதை வைத்துக்கொள்பவரின் ஸ்திதியையும், சார் பையும், பொறுத்திருப்பதுபோல உருவப் படத்தைக் கையாடுவது அதை வைத்துக் கொள்பவரின் ஸ்திதியையும் அவர் சார்பை யும் பொறுத்திருக்கிறதென்றும், "ஆண்டவ னின்" அத்தியாச்சரியங்களையும் அவனுடைய ஹிக்மத்தையும் மென்மேலும் சிந்தனைசெய் யும் எண்ணத்துடன் ஒருவன் கிராமபோனை வைப்பானாயின் அது குற்றமாகாது என்று தமக்கு கிடைத்த மார்க்கத் தீர்ப்பைப்போல் உருவப்படத்துக்கும் கிடைக்கவேணுமென் பதே அவர் உள்ளக்கிடக்கை. ஏனென்றால் அவருக்கு கிடைத்த மார்க்கத்தீர்ப்பை அவர் சம்மதங்கண்டு இஃதல்லவோ பெரியாரின் நற்குணம்என மெச்சுகின்றனர். உருவப்படத் துக்கும் இப்படியாவதே தமக்கு சம்மதமென

(3) ஒப்புமை நியாயத்தை அடுத்தும் (4)-ல் கேட்கும் வினவிலிருந்தும் உள்ளங்கை நெல் லிக்கனிபோல் பிரத்தியக்ஷமாய்த் தோன்று கின்றது.

இனி அவருடைய அநுஷ்டான ரூபகாரங்க ளாவன :—

5. "இஸ்லாமிய உலகத்துக்கே" மார்க்கத் தீர்பாளராய ஸுல்தான் அப்துல் ஹமீத் கான் காலத்திலிருந்த ஷைகுல் இஸ்லாமும் உலகத்திலேயே இஸ்லாமியப் பெரிய கலா சாலையான ஜாமியுல் அஜ்ஹரின் தலைவராய் விளங்கி நின்ற, உஸ்தாத் ஷைக் முஹம்மத் அப்துஹூ என்னும் பெரியாரும், இவ்விந்தி யாவின் சரித்திராசிரியராய் விளங்கிநின்ற மௌலானா ஷிப்லீநூஃமானி என்பாரும் மௌலானா அபுல்கலாம் ஆஜாதும் மிஸரில் இக்காலப் பெரிய இமாமேபோல் விளங்கிக் கொண்டிருக்கும் உஸ்தாத் ஷைக் தன்தாவீ என்பாரும் இப்படியே வட இந்தியாவின் பால் காணப்படும் பல மௌலானாக்களும் சொந்தமாய்த் தென் இந்தியாவிலுள்ள எமது மேன்மை பொருந்திய ஆசிரியர்களும் "தங்கள் உருவப்படங்களும் எடுத்திருக்கின் றனர்" எனவே இவர்களெல்லோரும் உரு வத்தை எடுப்பது தவறான ஒரு காரியமென் றெண்ணியா இவ்வாறு செய்திருக்கின்றனர். (நவூது பில்லாஹ்) இல்லை; இல்லை...................

தா. இ. 18-7-30, பக்கம் 16, 17; காலம் 3, 4.

6. இஸ்லாமிய தேசமான மிஸ்ரில் தபால் வில்லைகளிலெல்லாங்கூட இதுசமயம் ஷாஹ் புஆத் அரசருடைய உருவமே "நல்லமாதிரி யில்" வெளியாய்க்கொண் டிருக்கின்றது. அங்கு இதனை எந்தக் கல்விமானும் ஆக்ஷே பம் பண்ணியதாய்த் தென்படவில்லை...........

தா. இ. 18-7-30. பக்கம் 17, காலம் 1

(5), (6)-வது இலக்கங்களில் கண்ட மேற் கூறிய விளக்கத்தினால் துருக்கியிலும், எகிப்தி லும், வட இந்தியாவிலும், தென் இந்தியாவி லும், இஸ்லாத்துக்கு சிரசாய் விளக்கி நிற்கின்ற பல மேதாவிகள் தங்கள் தங்கள் உருவப்படத்தை எடுத்திருப்பதாயும் அப்படி எடுப்பது "தவறான ஒரு காரியம் அல்லது பஞ்சமாபாபத்தைப் போன்ற தீதை விளை விக்கக்கூடிய துர்க்காரியமாயிருக்கின்றது என் றிருக்குமானால், எடுத்திருப்பார்களா, இல்லை! இல்லை. அவர்களை அப்படி நினைத்தோசொல்லி

விடவே கூடாது. அப்படி அவர்களை எவரும் நினைக்காமலும் சொல்லாமலும் இருக்க (நவூது பில்லாஹ்) ஆண்டவனிடம் அடைக்கலம் தேடுகிறோம். அவர்கள் எவ்விதக் குற்றமும் தீமையும் இல்லை என்றுதான் தங்கள் தங்கள் உருவப்படங்களை எடுத்திருக்கிறார்கள். அன்றியும் எகிப்திய புஆத் அரசரின் உருவம் "நல்லமாதிரியில்," வெளி வந்திருப்பதை அத்தேசக் கல்விமான்கள் ஆக்ஷேபிக்கவில்லை யாதலாலும், இஸ்லாத்துக்கே ஊன்றுகோல் போலுள்ள இத்தகைய மேதாவிகளும் மன்னர்களும் சம்மதங் காட்டியிருப்பதிலிருந்து உருவப்படங்களைக் கையாடலாம் என நிரூபிக்கின்றனர்.

இனி, அவர் கூறும் வினுவிடு விடை விளக்க அத்தாட்சிகளாவன.

7. உருவம் வேண்டாமெனச் சொல்லும் ஒரு சிலர் இவற்றினை (நாணய வகைகள், தபால் தலைகள், கரன்ஸீ நோட்டுகள், இவை போன்ற இன்னமும் எத்தனையோ வஸ்துக்களை) எடுத்து, தம்முடைய பணப் பெட்டியிலும் சட்டைப் பையிலும் ஏன் பத்திரமாய் வைத்துக் கொள்ளுகின்றனர்? இல்லை, இல்லை, இந்த நோட்டுகளையும் பணங்களையும் தொடுவதின்றியே நாம் ஜீவித்துக்கொண்டு இருப்பதே முடியாத காரியமாய் வந்து முடியுமென்று கூறி இவை "ஹாலத்தே இல்திரார்" (போக்கற்ற நிலை) என்று சொல்லி இவை முக்கியமாய் வேண்டியனவாயிருக்கின்றன. எனவே, இவற்றை நாம் தீண்டலாம்; வைத்துக்கொள்ளலாம் என்று சொல்வார்களாயின் "உருவங்களை" வைத்துக் கொண்டிருக்கும் மனிதர்களும், இப்படியே சமாதானம் கூறுகின்றனர். எனவே, இது தான் முக்கியமானது, மற்றொன்று முக்கிய மானதல்ல வென்று சொல்லித் தீர்மானம் செய்ய யாருக்கே அதிகாரமிருக்கின்றது?....

....

தா. இ. 18, 7, 30, பக்கம், 16, காலம் 2

(7)வது இலக்கமிட்ட மேற்கூறிய விளக்கத்திலிருந்து பெரும்பான்மையோரல்லாத ஒரு சிலரே உருவப் படங்களைக் கையாடக் கூடாதென்று சொல்வதாயும், மேலும் நாணய வர்க்கங்களிலும் தபால் முத்திரைகளிலும், இன்னும் பல தஸ்தாவேஜ்களிலும் உருவங்கள் பதிப்பித்து, உலகெங்கும் சிலாவணியாக்கிக்கொண்டிருப்பதால் அதை ஏன், எல்லோரும் தங்கள் தங்கள் சட்டைப் பைகளிலும் பணப் பெட்டிகளிலும் வைத்து காபந்து செய்துக்கொள்ளுகிறார்கள் என்றும், அத்தகையோர் புகலற்ற ஸ்திதியில் என்று கூறுவாரானால் படம் வைத்திருப்பவர்களும் அப்படியேதான், சமாதானம் சொல்லுவார்கள் என்றும் ஆகவே நாணயத்தை முக்கியமென்றும், படத்தை கையாடி வருவதை முக்கியமல்ல என்றும் கூற யாருக்கு உரிமை உண்டு என்றும், இதனால் உருவப்படம் வைத்துக் கொள்வது தகுதியே எனவும், இதை மறுக்கவோ தடஸ்தம் செய்யவோ எவராலாகும்? எவருக்கு உரிமை? எனக் கூறி உருவப்படத்தை கையாடுவது கூடுமென வெளிப்படை வார்த்தையாலன்றி, உட்படைக் கருத்தில் கூறுகின்றார் என்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

மேலும் அவர் தீய முறையிலுள்ள பற்பல ஜாதி உருவப் படங்களைக் கையாடி வரும் ஒரு சிலர் ஏனையோரை உருவம் வைக்கக் கூடாதென சொல்லித் திரிகிறார் என்று விகடித்துக் காட்டி வினு விட்டிருப்பதிலிருந்து புலப்படும் ருஜுவாவன:—

8. உருவத்தையே வைக்கக் கூடாதென்றால் தன் உருவப் படத்தைத்தான் இது கட்டுப்படுத்துகின்றதா அல்லது வேறு எவ்வித ரூபமாயினும் இதில் சேருமா?............... ஒரு சிலர் ஊரிலுள்ள பற்பல ஜாதியார்களின் உருவப் படங்களை எல்லாம் துண்டுத் துணியை மட்டில் அரையில் கட்டி நிருவாணமுறையில் தம்மகத்தில் வைத்துக்கொண்டு, இன்னவரும் கூட உருவம் வைக்கக்கூடாதென பொது மக்களின்பால் சொல்லித் திரிவதாய்த் தோன்றுகின்றது. எனவே உருவங்களை ஏதோ நல்ல நோக்கத்துடன் எடுத்து வெளியிடலாமா? வெளியிடக்கூடாதா?.......

தா. இ. 18, 7, 30, பக்கம், 16, காலம், 2. 3.

(8)வது இலக்கமிட்ட மேற்கூறிய விளக்கத்திலிருந்து தீ முறையை அனுசரித்த உருவப் படங்களே கூடாதென்றும் நன்னோக்கத்துடன் கூடிய உருவப் படங்களை ஏன் கையாடுதல் கூடாது? உருவப் படங்களைக் கையாடுவது, கையாடுவோரின் நோக்கத்தையே பொருத்திருக்கிறதென்றும், நன்னோக்கத்தின்பால் கையாடுவது தகுமென்றும், தீனோக்கம்

தகாதென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிவதினால் இவருடைய இந்த நியாயத்தை இவரின் (5) லக்கத்தில் கண்ட விளக்கத்தோடு பிணைத்துக் கவனிக்கும்போது நன்னோக்குடன் உருவப் படங்களைக் கையாடுவது ஆகுமென்று இவர் சம்மதம் கொடுப்பதை இன்னும் ருஜூப்படுத்தும். மேலும் உருவப்படங்களை கூடாதென்று கூறுகிற ஒரு சிலர் தாம் மட்டும் தீமைக்குரித்தான நிர்வாணமுள்ள உருவப்படங்களை கையாடலாமோ என்று கூறுவதிலிருந்து: உருவம் கூடாதென்றும் சொல்பவர் ஒரு சிலரே என்றும், அமோகமான பேர்களுக்கு இந்தக் கொள்கையில்லை என்றும், அப்படிக் கூறும் ஒரு சிலருங்கூட நிருவாணமுள்ள உருவப்படங்களை தம்மகத்தில் வைத்திருக்கின்றனரே என்றும், எனவே இவர் இந்த ஒரு சிலர் மற்றவர்களுக்குச் சொல்லுகிறார்களே யொழிய தாம் தீ நோக்கமுள்ள நிருவாணப்படங்களைத் தாராளமாய் வைத்திருக்கிறார்கள். இவ்வாறு இருக்க நன்னோக்கத்துடன் கையாடிவரும் உருவப் படங்களை வைக்கக்கூடாதென்று சொல்ல எவருக்கு என்ன நியாயம் இருக்கிறது? கையாடலா மென்பதற்கு, அவர் இதையும் தமக்கு ஒரு நியாயமாகக் கருதுகிறார்.

(தொடரும்.)

இலௌகிக வைதிக சம்பந்தம்

இலௌகிக மென்பது உலகார்த்த சாதனங்களை யுன்னி விவகாரங்களில் ஈடுபட்டு இகத்தின் வாழ்க்கையை இனிது நடாத்திச் செல்வதற்கு சொல்லப்படுகின்றது. வைதிக மென்பது, ஆன்மார்த்த பரிபக்குவத்தை முன்னிட்டு சன்மார்க்க சட்டதிட்டங்கட்கு முற்றுங் கட்டுப்பட்டு மதபோதனைகளின் படி வரம்பை மீறாது நடந்து சத்கிரியையினையும் சற் குணத்தையும் பூண்டொழுவதற்குச் சொல்லப்படுகின்றது. இவை இரண்டும் மக்கட்கு இன்றியமையாத அரும்பெரும் சாதனங்களாகும். இலௌகிகமானது ஆன்மார்த்தத்துக்கு முதற்படியாய் நிற்பினும் வைதிக பக்தி யொழுக்கம் அதனினும் சிறந்ததாகும். வைதிகாசார மின்றேல் தனிப்பட்ட இலௌகிகத்தினால் ஆன்மார்த்தத்திற்கு எத்தகைய பயனுமுண்டாகாது. எனவே உலகார்த்த மென்னும் இலௌகிகமும், ஆன்மார்த்த மென்னும் வைதிக ஒழுக்கமும் ஒவ்வொருவர்க்கும் ஏககாலத்தில் வேண்டிபவைகளே யாகும். உடலுக்கு இருகரங்கள் இருக்க வேண்டியது அவசியமெனக் காணப்படுவதே போல் வாழ்க்கைக்கு இலௌகிகம், வைதிகம் இரண்டும் அத்தியாவசியமாகவே காணப்படுகின்றன. ஆகவே "மதமும், உலகமும் வெவ்வேறன்று" என பெரியார்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

ஒரு சாரார் உலகம் மாயையென்றும், அதில் காணப்படும் பல்கோடிப் பொருட்களும் உண்மையில் இல்லை யென்றும், உலகப் பற்றற்றிருத்தலே மதமென்றும், உலக சம்பந்தத்தையே விடுத்து சன்மார்க்க போத மொன்றையே கடைப்பிடித் தொழுகுதல் வேண்டுமென்றும் கூறிவருகின்றனர். மற்றொரு சாரார் விவாகம் புரிதல், வியாபாரம் விவசாயம் உத்தியோகம் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருத்தல் வைதிகாசாரத்துக்கு ஒவ்வாத தென்றும் கூறி வருகின்றனர். உண்மையில் இவையாவும் குருட்டுவாத மென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஏனெனில் இஸ்லாம் இலௌகிகம் வைதிகம் இரண்டினையும் ஒன்றுபடுத்தி விளக்கமாக இனிமையாக போதிக்கின்றது. இலௌகிக வாழ்க்கையினின்று தான் வைதிகத்தினால் கிடைக்கும் ஆன்மார்த்த சாதனத்தைப் பெறமுடியும். இலௌகிகத்திலும் வைதிகத்திலும் சம சம்பந்தம் வகித்து வாழ்ந்து, கரையேறியவனைத் தான் "இன்ஸானே காமில்" (பரிபூரண மனிதன்) எனக்கூறமுடியும்.

மேலும் இகலோக வாழ்க்கையானது பரலோக சாம்ராஜ்யத்துக்கு முதற்படியாக இறைவனால் அருளப்பட்டுள்ளது. உலக மனைத்தும் படைக்கப்பெற்றமை மானிட கோடிகளின் சவுகரியத்துக்காகவும், மானிட

னைப் படைத்தமை தன்னையும் இச்சரா சரத்தையும் படைத்துப் பரிபாலிப்போன் "யார்?" என்பதை தன் ஞானத்தால் தெரிந்துணர்ந்து அச் சிருஷ்டி கர்த்தாவை வணங்குவதற்காகவே யாகுமென்று ஞானிகள் பல்லோர் கூறிச் சென்றுள்ளனர். மேலும் பரலோக வாழ்க்கைக்கு இகலோக வாழ்க்கை முதல் உதவிப் பொருளாகுமென்பதை நமது நபிகள்நாயகம் ரஸூல் (ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அதாவது:—"உலகமானது பரலோக வாழ்க்கைக்கு ஒரு விவசாய நிலமாகயிருக்கின்றது" என்பதாகும் இஃதொன்றினின்றே இலௌகிகமும், வைதிகமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தப் பட்டதென்பது விளக்கமாகின்றது. மேலும் மனிதர்கள் தம் ஆண்டவனிடம் ஆன்மார்த்த முக்தி குறித்து பிரார்த்திக்குங்கால் இகத்துக்கும் பரதுக்கும் ஒருங்கே சேர்ந்தாற்போல் பிரார்த்திக்க வேண்டுமென்ற முறையை ஆண்டவனே திருக் குர்ஆனில் கூறியுள்ளான். அதாவது.— "எங்கள் இரக்ஷகனே! இவ்வுலகில் எங்களுக்கு நன்மையினை யளித்தருள்வாயாக. மேலும்(பிற்கால) பரலோகத்திலும் எங்கட்கு நன்மையை கொடுத்தருள்வாயாக. மேலும் எங்களை நகரத்தீயின் வேதனையை விட்டும் பாதுகாத்தருள்வாயாக" (குர்ஆன்) இந்த குர்ஆன் வாக்கியத்தினின்றுங்கூட நாம், இகமும் பரமும் அல்லது இலௌகிகமும் வைதிகமும் அல்லது உலகும் மதமும் அல்லது உலசார்த்தமும் ஆன்மார்த்தமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒருமித் திருக்கவேண்டிய தொடர்புடையதென்பதை யுணர்ந்து கொள்ளுகின்றோம்.

உண்மையான வைதிகம் இன்னதென்பதை உணர்ந்து கொள்ளாதோரும், ஆன்மார்த்தம் பெறுவதற்குச் சிறந்தவழி யாதென்பதைத் தெரிந்து கொள்ளாதோரும், துறவிகளின் ஞான சித்தாந் தத்தையே மர்க் கடப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருப்போரும் ஞானி என்றும், ஸூபி என்றும், துறவியென்றும், தபோதனர் என்றும் கூறப்படுவோரும் தாம் "உலகம் மாயை, அஃது ஆன்மார்த்த சாதகத்திற்கு மாறானது, ஆகவே உலகத்தை முற்றும் விட்டு வேறானல்தான் ஞானமார்க்கமும், இறைவனருளும் கிட்டும்" எனக் கூறி விதண்டாவாதம் புரிந்துவருகின்றனர். இவை சார மற்றதும், உண்மைக்கு முரணானதுமான குதர்க்க வாதமென்பதில் ஐயமில்லை. அல்லாஹ்வும், ரஸூலும் இவ்வுலக வாழ்க்கை பரலோக வாழ்க்கைக்கு அவசியமான சாதனஸ்தலம் என்றுக் கூறியிருக்குங்கால் இத்தகையோரின் கூற்றை எங்ஙனம் ஏற்றுக் கொள்ள இயலும்? உலக வாழ்க்கையிலிருந்து கொண்டு தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் கடைபிடித் தொழுகுதல் உலகத்தை வெறுத்துத் துறவியாகிக் கிடப்போரின் ஒழுக்கத்தைவிட மேலானதாகும்.

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் சிஷ்ய வர்க்கத்தார்க்கு இலௌகிக வைதிகத்தைப்பற்றி இதோபதேசம் புரிந்துகொண்டிருந்தார்கள். அது சமயம், உலகத்தை வெறுத்து மனைவி மக்களைப் பரதவிக்க விட்டு காடு சென்று வாழ்வோரைப்பற்றிப் பேச நேர்ந்தது. எனவே, எம்பெருமானர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களை நோக்கிக் கூறினார்கள்:—

> "............யான் தூங்கவும் செய்கின்றேன். தொழுதுங்கொள்கிறேன். நோன்பும் நோற்கின்றேன். (உணவு கொண்டு) நோன்பும் விடுவிக்கின்றேன். பெண்களை மணந்து வாழ்க்கையும் நடத்துகின்றேன். ஆகவே, ஏ உதுமான்; (ரலி) தாங்கள் ஆண்டவனுக்கு அஞ்சிக்கொள்வீர்களாக. தங்களது மனைவி மக்களைப் போஷிக்கவேண்டிய கடமை தங்கள் மீது உண்டு. தங்கள் விருந்தினரை உபசரிக்கவேண்டிய கடமையும் தங்கள்மீது உண்டு. மேலும் தங்களது ஆன்மார்த்தக்கடமைகளும் தங்கள்மீது உண்டு. ஆகவே, நோன்பு வைப்பீராக. உணவுங் கொள்வீராக. தொழுதுங் கொள்வீராக. தூங்கவும் செய்வீராக.
>
> (ஹதீஸ்—அபூதாவூத்)

இந்நாயகத் திருமொழியினின்று உலகார்த்தமும், மதாசாரமும் பிரிந்தவையன்றென்பது நன்கு விளங்குகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்திற்கு முன்னர் அராபிய தேசத்தில் "ருஹ்பானியத்" எனப்படும் துறவற வழக்கம் சர்வ

சாதாரணமாயிருந்து வந்தது. அக்காலப் புரோகிதர்களெனப் படுவோரும், பாதிரிகளெனப்படுவோரும் இல்லற வாழ்க்கையும், உலகார்த்த சம்பந்தத்தையும் முற்றும் வெறுத்து துறவுபூண்டு வாழ்ந்துவந்தார்கள். பிறகு எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் அவதரித்த பிறகும் இவ்வழக்கம் இருந்து வந்தது. இத்துறவற வழக்கத்தினால் நேரிடும் தீங்குகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனங்களுக்கு எடுத்தோதி வந்தார்கள். ருஹ்பானிய்யத்என்னும் துறவறம்பூண்டு உலகவாழ்க்கையை வெறுப்பவர் மனைவி மக்களைப் பிரிந்துழலவும், மனைவிமக்கள் வாழ்க்கையாதாரமின்றி வறுமையால் அல்லலுறவும் காரணராய் இருப்பதோடு இல்லறத்தை அத்தகையோர் இழந்து புண்ணியங் குறைந்தவர்களாவதையும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இனிது எடுத்தோதி வந்தார்கள். அவ்வரும்பெரும் போதனைகளை ஒரு சாரார் ஏற்றுக்கொண்டனர். குப்பார்களிலும் யூதர்களிலுமிருந்த ஞானவாதிகள் இத்தத்துவங்களைப் புறக்கணிக்கலாயினர். இத்துர்க்கொள்கை நமது இஸ்லாமிய ஆசாரத்தில் வந்து நுழைந்துவிடாதவாறு நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் அடிக்கடி தம் சிஷ்யகோடிகளுக்கு இஸ்லாத்தின் எளிய அனுட்டான முறைகளை போதித்து வந்தார்கள்.

இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் உலகத்திலுள்ள பொருட்களில் நம்மவர்க்கு ஆண்டவன் எவ்வெவற்றை இனியவையாய் (ஹலாலாகச்) செய்துள்ளானோ அவற்றிலிருந்து பூரணமாக சுகத்தைப் பெறவேண்டுமென்று போதிக்கின்றது. இங்ஙியதிக்குமாறாய் ஒரு சாரார் நடந்துகொண்டமையைக் கண்டித்து தூய திரு குர்ஆன் ஷரீபானது "ஆண்டவன் உங்களுக்கு ஹலாலாக்கியுள்ளதை எதற்காக நீங்கள் ஹராமாக்கிக்கொள்கிறீர்கள்?" என்று கூறியுள்ளது. இங்ஙியதிபோதனைவிளக்கத்தினின்றும் இலௌகிகமும் வைதிகமும் இகமும் பரமும் உலகமும் மதமும் ஒன்றுக்கொன்று இணங்கி நெருங்கிய சம்பந்தமுடையதாயிருக்கவேண்டுமென்பது நன்கு விளங்கவில்லையா? ஆகவே, ஒவ்வொரு மானிடரும் இயற்கையோடு முற்றிலும் இயைபுகொண்ட இஸ்லாத்தின் போதனைப்படி நடந்தொழுக முயல்வதே சாலச் சிறந்ததாகும். இயற்கை வாழ்க்கையை உள்ளவாறு இனிது வகுத்து எடுத்து அறிவுறுத்துவது இஸ்லாமொன்றேயாகும். இஸ்லாத்திலேயே முக்திக்குரிய சன்மார்க்கம் அமைந்திருக்கின்றது. இகமும் பரமும் நெருங்கிய சம்பந்தமுடையதாயிருப்பதேபோல் இஸ்லாமும் இயற்கையும் ஒத்தமைந்ததாயிருக்கிறதென்பதை நீங்களெல்லோரும் உணர்ந்து ஒழுகி உய்யக் கடவீர்களாக.

மதிப்புரை.

இயற்கை மதம்:—இயற்கை மதம் என்னும் இவ்வுயரிய நூல் மௌலவி A. K. அப்துல் ஹமீது சாஹிபு பாகவி அவர்களால் இயற்றப்பெற்றுளது. இவ்வரிய ஆசிரியரை இத்தமிழகமும், சிறப்பாக முஸ்லிம் சமூகமனைத்தும், நன்கறியுமாதலால் இவரது பெருமையும் எழுத்து வன்மையும் பாராட்டுக்குரியனவென்று கூறுவது மிகையாகா. நிற்க, இந்நூல் இஸ்லாத்தின் அசைபடா உண்மைகளைப் பற்றி ஆழ்ந்த கருத்துக்களோடு சுருங்கக் கூறுகின்றது. ஏனை மதங்கள் எல்லாம் இயற்கைக்கு முரண்கொண்டனவாய் இருப்ப, இஸ்லாம் ஒன்றே இயற்கைக்கு இயைபு கொண்டு நிலவுகின்றது என்னும் தகைசால் உண்மையினை இந்நூல் கற்பிப்பதோடு, இஸ்லாத்தில் வேற்றுமையில்லை, கள்ளமில்லை, வஞ்சகமில்லை, ஏமாற்றில்லை, தரகரில்லை, தாழ்ந்தோரில்லை என்றும், சத்தியம், சமத்துவம், சகோதரத்துவம், தயை, சீலம், ஒழுக்கம், அன்பு, பக்தி, ஞானம் முதலியன முற்றுமுள வென்றும் எடுத்துக்காட்டி, நம் மதத்தினர்க்கு மென்மேலும் மதபக்தியை உரப்படுத்தி, புற மதத்தினரை நம் மதத்தைத் தழுவும்படி நல்லுரை பகர்கின்றது. எனவே, இந்நூலின் அருமை பெருமையினை உள்ளவாறியம்பற் கியலாவே. மௌலவி அவர்கட்கு இத்தமிழுலகும் இஸ்லாமிய உலகும் இந்நூல் பொருட்டுக் கடமைப்பட்டுள்ளவெனின் இதுவே சால்புடைத்தாம். இஃது திருச்சி இஸ்லாமிய நூற் பிரசுராலயத்தின்றும் வெளியிடப் பெற்றுள்ளது.

இதன் விலை அணா 0—8—0

வேலூர் மத்ரஸா பாக்கியாத்-ஸாலிஹாத்தின் ஸ்தாபகரர்
ஆலி ஜனுப் மௌலானு மௌலவி ஹாஜி ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் ஹஜ்ரத் கிப்லா அவர்கள்
ஞாபக சின்னக் கட்டிடம்.



வெளிப்புறக் காட்சி



உட்புறக் காட்சி

ஒரு வேண்டுகோள்

வேலூர் மத்ரஸா பாக்கியாத்—ஸாலிஹாத்தில் தற்போழுது மார்க்கக் கல்வி சற்றுவரும் நபிமார்களின் அனந்தரகாரர்களாகிய (மக்தபில் பயிலும் பிள்ளைகளைத் தவிர) உயர்தர கல்வி கற்கும் மாணவர்கள், 175 பேர்கள் வரை மத்ரஸாவில் போஷிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் இருப்பதற்கு இப்போழுதுள்ள கட்டிட அறைகள் போதியனவன்று; வசதியுடையனவுமன்று. ஆதலால் என் தந்தை ஆலாஹஜ்ரத்கிப்லா மர்ஹூம் அவர்களின் ஞாபகார்த்தமாக மத்ரஸாவின் தேன்புறமாய்க் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மேன்மாடியில் மாணவர்கள் வசிப்பதற்கு வசதியான அறைகளும், புத்தகசாலைக்காக விசாலம் போருந்திய ஒரு மஹாலும் கட்டுவிக்கவேண்டுமேன்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இக்கட்டிடத்திற்கு ரூ. 30,000 சிலவாகுமேன மதிப்பிடப் (Estimate) பட்டிருக்கின்றது. இதன் ஒரு பகுதித் தோகையான ரூ. 15,000-க்கு ஏற்பாடாயிருக்கின்றது. மறு பகுதி 15,000 ரூபாய்களை மத்ரஸா பண்டி (Fund) லிருந்து எடுத்துச் சேலவு செய்வதேனின் பண்டி (Fund)ன் நிலைமை அதற்கு இசைந்ததாகயில்லை. எனவே, மார்க்க பக்தியும், கல்விப் பயிற்சிப் பற்றும் உடைய கனவான்களிடமிருந்து நன்கோடை திரட்டியே மேற்கூறிய கட்டிடங்களைக் கட்டுவேதேன்று முடிவு செய்யப்பட்டுள்ளது. "ஹஸனாத்துல் ஜாரியா" சதா காலமும் நீடித்திருக்கும் இந்நற்காரியத்திற்கு மதாபிமானமுள்ளவர்களும் அறச்சிந்தனை யுடையவர்களுமான புண்ணியவான்கள் தங்களால் இயன்ற உதவி செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

பணம் அனுப்பும் கனவான்கள் தயவுசெய்து கீழ்காணும் விலாசத்திற்கு அனுபபுவார்களாக.

இங்ஙனம்,

(மௌலானா மௌலவி அல்ஹாஜ்) ஜியாவுத்தீன் முஹம்மத் (சாஹிப்)

நாஜிர் மத்ரஸயெபாக்கியாத்-ஸாலிஹாத் வேலூர்.

குறிப்பு:— அல் பாக்கியாத் துஸ் ஸாலி ஹாத் என்னும் பெயரிய இவ்வுயர்தர அரபிக் கல்லூரியானது வேலூரின்கண் உள்ளது என்பதை நம்மவர் அனைவரும் அறிவர். இற்றைக்கு 60 ஆண்டுகட்கு முன்னர் நந் தமிழ் நாடானது மார்க்கக் கல்வியில் மிகவும் குன்றியிருந்தமையால், அதுகாலை பல தீய பழக்க வழக்கங்களும் தர்காக்கட்குகூடு எடுத்தல் கொடிவிழாநடாத்தல் கலியாணங்களில் மேளதாளமடித்தல் முதலிய செயல்களும் இன்னு மனேக தீய கருமங்களும் மலிந்திருந்தன. இவைகளையே சற்கருமங்கள் எனப் பல முஸ்லிம்களும் நம்பியிருந்தனர் என்பதும் வருந்தத்தக்கதோர் உண்மையாயிருக்கின்றது. இவைகட்கெல்லாம் காரணம் மார்க்கக் கல்விப் பயற்சி போதியபடி இல்லாதிருந்தமையே. அகன்ற மார்க்கக் கல்விப் பயிற்சி இல்லாக் குறையை, மார்க்க பக்தியுடைய உலமாக்கள் முதலியவர்கள் தனி ஹோதாவில் எத்தனை முயற்சி எடுத்தும் முற்றிலும் அகற்றமுடியாமற் போய்விட்டது. சன்மார்க்க விஷயங்களைச் சரிவரப் புகட்டவும் போதிக்கவும் மார்க்கக் கல்விச்சாலைகளை அமைக்கவும் பொருளாதார வசதியின்மையால் நந் தென்னாடுஅந்தகாரத்திடை ஆழ்ந்து கிடந்தது.

இப்பரிதாபகரமான நிலைமையில், நம் மக்களின் அறியாமையை அகற்றி மெஞ்ஞானம் புகட்டி இஸ்லாத்தின் உண்மைக் கருத்துக்களை எடுத்துப் போதித்து வருவதற்குரிய ஓர் உபாயத்தை இறைவன் நம் அஃலாஹஸ்ரத் மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஷாஹ் அப்துல்வஹ்ஹாப் ஹஸரத் கிப்லா குத்திஸ ஸிர்ருஹூ அவர்கள்உளத்தில் கற்பிப்பானாயினன் இதன் பயனாய்ஹஸ்ரத் அவர்கள் நம்மவர்களின் நிலைமையைக் கண்டு கவலைப் பெருக்கெய்தி நாடோறும் கண்ணீர் உகுத்து இறைவன் திருக்கருணையை உன்னி இறைஞ்சினார்கள். சமூக சீர்திருத்தத்திலேயே தமது வாணாட்களை அர்ப்பணம் செய்யத் துணிவு கொண்டவர்களாய்த் தமக்கு ஹைதராபாத் சமஸ்தானத்தில் அளிக்கப்பெற்ற உத்தியோகத்தையும் துறந்தார்கள். ஆண்டவனருளால் இவர்கடம் கோரிக்கை ஈடேறியது. தலைப்பில் குறிக்கப்பெற்ற மத்ரசாவை நிறுவினார்கள். இக்கலாசாலை நம் சமூகத்தினர்க்கு ஆற்றிய அரும்பெரும் பணிகள் அளவில்லை. ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இக்கலாசாலையில் கல்விதானம் பெற்றனர். இதன் உதவியால் பலர் தேர்ச்சிபெற்ற மௌலவிகளாயினர். மார்க்கஞானம் எங்கும் திகழ்வதாயிற்று. இதன்கண் கல்விபயின்ற உலமாக்கள் ஊர் ஊராய்ச் சென்று உண்மை ஞானத்தைப் புகட்டி வந்தார்கள். இதன்பயனாய் வறண்டு பட்ட வெளியில் பூஞ்சோலைகள் தோன்றிய போல் ஆங்காங்கு மத்ரசாக்கள் நிறுவப் பெற்றன. அனாச்சாரங்களும் அந்தகாரங்களும் ஒழிக்கப்பட்டுவருகின்றன. இம்மதரஸாவில் பயின்ற உலமாக்கள் இலங்கை, பர்மா, மலாய்நாடு முதலிய அக்கரைப் பிரதேசங்களிலும் சென்று மார்க்கப் பிரசாரம் புரிந்து வருகின்றனர். எனவே, ஆந்திர நாட்டைப் போலாது இத் தமிழ்நாட்டில் மார்க்க அறிவு செழித்தோங்குமாறு மேற்குறித்த மத்ரசா ஆற்றிய தொண்டு என்றைக்கும் மறத்தற்பாலதன்று. இம் மத்ராசாவை நிறுவிய ஹஸ்ரத் கிப்லா அவர்களையும் நம் நாட்டு முஸ்லிம்கள் மறப்பதற்கில்லை. இக்காரணம் பற்றியே அஃலா ஹஸ்ரத் கிப்லா அவர்கட்கு கவர்ன்மெண்டார் "ஷம்ஸுல் உலமா" உலமாக்களின் சூரியன் எனும் பட்டத்தை சமர்ப்பித்தனர். கனவான்களும், உலமாக்களும் அன்னவர்களுக்கு "முஹ்யில் உலூமில் அறபிய்யாபித்தியாரில் ஹிந்தியா" தென்னாட்டின்கண் அரபிக் கலைகளை உயிர்ப்பித்தவர்கள் எனும் காரண நாமம் சூட்டியிருக்கின்றனர்.

ஹஸ்ரத் அவர்கள் காலத்திற்குப் பின்னர் அவர்களின் புதல்வர் மௌலானா மௌலவி கான்பகதூர் அல்ஹாஜ் ஸியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் (பிரஸ்தாப கழகத்தின் நாஸிர்) அவர்கள் இம் மத்ரசாவைப் பொன்னே போல் போற்றி நிர்வகித்து வருகின்றார்கள். இற்றைக்கு இக் கல்லூரியில் உர்தரக் கல்வி கற்கும் மாணவர்களில் 175 பேர்கள் இருக்கின்றனர். இத்துணைப் பேர்க்கும் போதிய இடவசதி இன்மையால், இதற்கென்று புதியதோர் நிலயம் நிறுவத் தீர்மானிக்கப் பெற்றுள்ளது இக் கட்டிடம் மத்ரசாவின் ஸ்தாபகர் அவர்களின் ஞாபகார்த்தக் கட்டிடத்தின் மேன்மாடியில் அமைக்கப்படும். (இக் கட்டிடத்தின் தோற்றங்கள் மேலே பொறிக்கப் பெற்றுள்ளன.) இதற்கு 30,000 ரூபாய் செலவாகு மெனத் திட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கென்று 15,000 ரூபாய்க்கு வழி யேற்பட்டிருக்கின்

றது. எஞ்சிய 15,000 ரூபாய் குறைவாய் இருப்பதை நம் முஸ்லிம் பெருமக்கட்கு எடுத்துக் கூறின், இத்தொகை கடிதே உதவப்படும் என்னும் நம்பிக்கையால் வேண்டுகோள் வெளியாயிருக்கின்றது. இக்கட்டிடம் அத்யாவசியமாம் என்பதையும், இதற்குப் பொருளுதவி புரிதல் எல்லா முஸ்லிம்களின் கடமையாம் என்பதையும் இதனால் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. கல்விக்கு அதிலும் மார்க்கக் கல்விக்குப் பொருளுதவி புரிய நம் சமூகம் பின்னிற்குமா?

நம் சமூகத்திற்கு இம் மத்ரசாவில் ஆற்றப்பெற்றும் ஆற்றியும்வரும் பணி நாவால் புகழும் தரத்ததன்று. நம் தென்னாட்டில் நம்மவர்கட்கு ஓர் கண்ணேபோல் விளங்கும் இக் கல்லூரிக்கு நம்மாலியன்ற உதவிகளைப் புரிதல் நம் கடமையாகின்றது என்பதை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? ஆதலின் இப்பொழுது வேண்டிய 15,000 ரூபாய்களும் அதிகடிதில் இக் கல்லூரிக்கு உதவி செய்யப்படும் என்று நம்புகின்றோம். நம் மார்க்க வளர்ச்சியைக் கோரும் எல்லா முஸ்லிம்களும் இதற்குதவி புரிய முன்வருவார்களாக.

(ப-ர்)

நிருபசாரம்

காதியானிகளின் கண்கட்டி வித்தை.

மாண்புமிக்க மெய்யன்பீர்!

வட இந்தியாவில் மிர்ஸாகுலாம் அஹ்மது காதியானி என்பவர் தோன்றி தம்மையே நபி யென்றும், மஹ்தியென்றும், மஸீஹென்றும், கூறி பாபரமக்களை ஏமாற்றி வந்தது மட்டுமல்லாமல் தமக்கு இறைவனிட மிருந்து வஹீ வருகிறதென்றும் இன்னும் எத்தனையோ எண்ணத் தொலையாத மார்க்கத்திற்கு முற்றிலும் விரோதமான கொள்கைகைகளைப் பரப்பி வந்தார். அவைகளைக் கண்ட சங்கைபெற்ற உலமாக்கள் மிர்ஸாயி கோஷ்டியினர்மீது குபிர் (பத்வா) வரைந்துள்ளார்கள். அத்துடன் ஹிஜ்ரி 1311 வது வருடம் சென்னை மௌலானா ஜனாப் உபைதுல்லா சாஹிப் அவர்களால் மார்க்கத் தீர்ப்பு வரையப்பட்டு அது பல ஊர்களிலுள்ள பிரதானமான உலமாக்களுடைய கையொப்பங்களுடன் வெளியாகி யிருக்கிறது. அப்பத்வாக்களில் மிர்ஸாயிகளுடன் உறவுகொள்ளக் கூடாதென்றும் முஸ்லிம்களின் மாதர்களை அன்னவர்களுக்கு விவாகம் செய்துகொடுக்கலாகாதென்றும் அவர்களின் மாதர்களை முஸ்லிம்கள் நிகாஹ் செய்யக் கூடாதென்றும், அப்படிச் செய்யின் நிகாஹ் பிரிந்து போய்விடுமென்றும், இன்னும் எத்தனையோ காரியங்களை நமது உலமாக்களால் மார்க்கத் தீர்ப்பு வரையப்பட்டிருந்ததென்பதை யாரும் மறுப்பாரில்லை. அந்த மிர்ஸாயி விஷக்காற்றானது நாளுக்குநாள் கொஞ்சங்கொஞ்சமாக நமது தென்னாட்டிலும் பரவி, அந்த மிர்ஸாவால் ஈன்றெடுத்த குஞ்சுகள் ஒன்று கூடி முஸ்லிம் மக்களை வழிகெடுக்கவும் ஆரம்பித்து வருகிறார்கள். எத்தனையோபேர்களை வழிகெடுத்துவிட்டார்கள். இப்போது நமது தென்னாட்டில் குறிப்பாக சென்னையில் மிர்ஜாய்களின் ஏஜெண்டாக பா. தாவுத்சா விளங்குகின்றார் என்பது யாவரு மறிந்ததே. இம் மகான் தோன்றி, மார்க்கத்தின் மூலக்கொள்கைகளையே ஆட்டிவிட்டாரென்றால் இவரின் மார்க்கப்புரட்டு எம்மட்டுமென்பதை விளக்க வேண்டியதில்லை. இத்துடன் நில்லாது தனது தீய பிரசாரத்திற்கு பக்கபலமாக ஒரு மௌலவி சாஹிபையும் தனது பாசக்கயிற்றில் சிக்க வைத்துக்கொண்டார். இந்த தாவூத்சாவின் மாயவலையில் எத்தனையோ வாலிபர்கள் மயங்கி அவரின் மார்க்கப் புரட்டைக் கண்டு தெளிவு பெற்றிருக்கிறார்கள். (இவர்கள் தெளிவுபெற்றதற்கு காரணம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கமும் அதன் அரும் பெரும் மாசிகையின் பிரசாரத்தின் கைங்கரியமே). உண்மையில் இறைவன் இந்த ஹிபாஜத்துல் இஸ்லாத்தை நம்முலகிற்கு உதயமாக்காவிடில் எத்தனையோ பேர்கள் காதியானி என்ற படுகுழியில் வீழ்ந்

திருப்பார்களென்பதில் சற்றும் சந்தேக மில்லை. யார் செய்த தவப்பயனே? நிற்க, சகோதரர்களே மிர்ஜாயிகளின் மாய வலையி லகப்பட்டு ஈமானைப் போக்கிக் கொள்ளாதீர் கள். அவர்கள் பற்பலவிதமாய் சூழ்ச்சிகள் செய்து நுங்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். எவரேனும் அவர்களைப் பின்பற்றுவார்களா யின் தக்ஷணமே மார்க்கத் துரோகியாவார்க ளென்பது திண்ணம். எமது உலகரக்ஷகர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் 1300 வருடங் களுக்கு முன்பே கடைசிக் காலத்தில் பொய் யர்களான தஜ்ஜால்கள் கிளம்பி நீங்களும் உங் கள் பெற்றோர்களும் கேள்விப்படாத நூதன விஷயங்களைக் கூறுவார்களென்றும், ஆதலின் உங்களுக்கும் அவர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறேன் என்று நவின்ற திருமொழி யானது எனக்கு மிர்ஜாய்களையே சுட்டிக் காட்டுகின்றது. தவிர ஹி. இ. சஞ்சிகையின் 1930 ம் வருஷம் செப்டம்பர்மீ இதழில் தா. இ. ஆசிரியர் பா.தா. அவர்கள் லாஹுர் அஹ்மதியா பார்ட்டியாருடன் எவ்விதசம் பந்தமில்லையென்று கூறிவந்த பொய்க்கூற்றை மெய்ப்பிப்பான் வேண்டி ஷை மாசிகை 375 பக்கத்தில் வெளியிட்ட ஷை பார்ட்டியாரின் 8 பத்திரிக்கைகளுள்ள போடோவை வெளி யிட்டதற்கு எமது தாழ்மையான வந்தனத் தை அதன் நிர்வாகிகளுக்கு செலுத்துவ துடன் மிகமிகப் போற்றுகிறேன். ஏனெனில் பெரும்பாலரான சகோதரர்களுக்கு பா. தா. வின் பொய்க் கூற்று தெரியாமலிருக்கலாம். இப்போது போடோவினல் சந்தேகமின்றி பா. தா. வுக்கும் ஷை பார்ட்டியாருக்கும் சம் பந்தமுண்டென்பதை ஹி. இ. வெளியிட்ட படத்தால் நன்கு ருஜுவாகிவிட்டது. இப் படிப்பட்ட பிரயாசைக்கு பொதுமக்கள் ஹி. இ. நிர்வாகிகளுக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். தவிரவும் பா. தா. சிலோன் பிரயாணத்தின்போது இலங்கை யில் "பிரைஸ் பார்க்" மைதானத்தில் செய்த பிரசங்கத்தைவிட வெட்கக்கேடு வேறொன்று மில்லை. கேவலம் பிரசங்கத்தில் கொஞ்சமும் அனுபவம் பெருதவனுங்கூட இவ்வித பிரசங் கத்தை சபையில் கூற நாணமடைவான். அப் படியிருக்க, பா.தா. தம்மை பெரிய மேதாவி யென்றும், பி. ஏ. பட்டதாரியென்றும் பறை யறையும் ஒரு மகானின் பிரசங்கம் எவ்வளவு நீசத்தனமாகவும் நகைப்பிற் கிடமாகவும் இருக்கிறது. வெட்கம்! வெட்கம்! இப்பேர் பட்ட மகானுடனேயா யான் ஒத்துழைத்து அவர் பத்திரிகையை ஆதரித்து வந்தேன்? இனிமேலாவது பா.தா. வினுடன் ஒத்துழைக் கும் குழாத்தினர் பா. தா. வின் ஊழலை யறிந்து அவரையும் அவரது பத்திரிக்கையை யும் விட்டொழிப்பார்களா? ஆகையால் காதி யானிகளின் கூற்றையும் இப்போலிகளின் ஏமாற்றுதலையும் நம்பி மோசம் போகாதீர் கள். எல்லாம் வல்ல இறைவன் நேரான பாதையிற் சீராக நடத்தாட்டுவானுக. வஸ் ஸலாம்,

த. சே. பா. முஹம்மத் ஜமாலுத்தீன்,
(ஜமீன் ஆத்தூரி) சங்கராபுரம்போஸ்ட்.

வேஸ்மினிஸ்டர் புகையிலைக் கம்பேனி
யாரின் மன்னிப்புக் கடிதம்.

குறிப்பு:—நபிகள் நாயகம் (ஸல்) அவர் களைக் குறிப்பிடுவதாகக் கருதி, வியாபார நிமித்தம் மலாய் நாட்டில் உள்ள வெஸ்டு மினிஸ்டர் புகையிலைக் கம்பெனியாரின் ஏஜண்டுகள், சில உருவப்படங்களை வெளி யிட்டமையும், அதனைநமது ஹி. இ. சங் கம் கண்டித்து சிங்கப்பூர் நகரில் உள்ள கம் பெனி கிளை ஸ்தாபனத்திற்கு எழுதியிருந்த மையும், அதற்கிணங்கி அக் கிளை ஸ்தாபனத் தார் உடனே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு உருவப்படங்களின் பிரசுரத்தை நிறுத்தி விட்டு வழங்கப்பெற்ற படங்களை மீண்டும் சேகரித்து நம்மவர்கள் கையில் ஒப்புவித்து விட்டமையும், நம் அன்பர்கள் அறிவார்கள். அது தவிர கீழ்க்காணும் கடிதம் இச் சங்கத் திற்கு ஷை தலைமை ஸ்தாபனத்தார் லண் டனிலிருந்து நேர்முகமாய் எழுதியதாகும்:— (ப—ர்)

வெஸ்டர்மினிஸ்டர் ஹௌஸ்
7, மில்பாங்க், லண்டன் (S. W. I.),
3—9—1930.

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக்காரியதரிசி யவர்கட்கு. அன்புள்ள ஐயா!

ஜூன் 30-ம் தேதியில் தாங்கள் வரைந்த நிருபம் வரப்பெற்றோம். எதிர்பாராமல் எங் கள் செயலால் முஸ்லிம்களின் மனத்தைப் புண் படுத்தியமைக்கு நாங்கள் மிகவும் வருந்துகின்றோம்.

உண்மையைக் கூறு மிடத்து, தவறுத லாகவே அப்படங்கள் மலாய் நாட்டிற்கு

அனுப்பிவிடப்பெற்றன. தங்களின் கண்டனக் கடிதங்களைக் கண்டதும் அவ்வாறு அனுப்பிப் பிரசுரமாய படங்களை மீண்டும் சேகரித்து விட்டோம். இந்தியாவுக்கும் மற்றைப் பாகங்கட்கும் இப்படங்கள் அனுப்பப் படவில்லை.

எனவே, தாங்கள் தயவு கூர்ந்து எங்கள் மனமார்ந்த மன்னிப்புக் கடிதத்தை அங்கிகரிப்பீர்கள் என்று நம்புகின்றோம். இத்தகைய தவறான வருந்தத் தக்க நிகழ்ச்சிகள் இனி நிகழாவாறு நாங்கள் கவனிப்போடு நடந்து கொள்வோம்.

தங்கள் உண்மையுள்ள
வெஸ்ட்மினிஸ்டர் புகையிலைக் கம்பெனி
(லிமிடெட்)
ஒப்பம்——

யௌமுந் நபி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கடம் வாழ்க்கைத் திருச்சரிதை இஞ்ஞாலத்து மக்கட் கோடிகட்குப் பெரும் பயன் அளிக்கவல்லது என்பது ஒருதலை. தம்மைப்பற்றி உலகோர்க்கு அறிவுறுத்துதல் கடமையாகும் என்று நாயகமவர்களும் வலியுறுத்தி யுள்ளார்கள். இதுபற்றி வீரத்துக் கமிட்டிகளும் நாயக சரித்திரத்தை உலகமெங்கணும் பல மொழிகளிலும் வெளியிட்டு இப்புனிதமான சேவை புரிந்துவருகின்றது. வெளியிடப்பட்டமொழிகளேயல்லாது வெளியிடப் பெறாது எஞ்சிய பல மொழிகளிலும் இத்திருச் சரிதை பிரசுரமாதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளப் பெற்று வருகின்றது. இவ்வுயரிய சேவைக்கு ஆண்டுதோறும் ரபீஉல் அவ்வல்மாதம் 12-ம் நாள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க இவ்வாண்டின் கண்ணும் இத்திருநாளில் யௌவ்முந் நபிக்காக நாயகத் திருச்சரிதையை நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் தமிழில் மொழிபெயர்த்து அப்பிரதிகளைஇம்மாகாணம் எங்கும் வழங்கியது. இத்திருத்தொண்டிற்குப் பொருள் உதவிபுரிந்த கனவான்கள் பெயர்களையும், 'நபிகள் திலகத்'தைச் சொந்தச் செலவில் வாங்கி இலவசமாய் வழங்கிய கனவான்களின் பெயர்களையும், சங்கத்தாரால் இலவசமாய் அனுப்பப் பெற்ற ஊர்களின் பெயர்களையும் ஈண்டு குறிப்பிட்டுள்ளோம். 15,000 பிரதிகள் அச்சிட்டு வழங்கியும் அவை போதியனவாய்க் காணப்படவில்லை. அநேக ஆர்டர்கட்கிசைந்து பிரதிகள் அனுப்ப முடியாமற் போய்விட்டமை வருந்தத்தக்கதே. எனவே அடுத்த ஆண்டின்கண் இதனினும் அதிசமான பிரதிகளை அச்சிடவும், இதர மொழிகளிலும் மொழி பெயர்ப்புச் செய்யவும் இச்சங்கம் தீர்மானித்திருப்பதால், அறச் சிந்தனை வாய்ந்த கனவான்கள் இதற்குரிய பொருளுதவி புரிய முன் வருவார்களாக. இறைவன் அவர்கட்கும் கருணை புரிவானாக.

சொந் ஹோதாவில் வாங்கி
விநியோகித்தவர்கள்.

மத்ராஸ் பீடி அஸோஸியேஷன்	1000
காரைக்கால் ஹாஜி மு. தம்பிசாஹிபு மரைக்காயர் & பிரதர்ஸ்	500
இளையாங்குடி முஸ்லிம் கல்வி அபிவிர்த்தி சங்கம் ...	300
நாகை தீனிய்யா நஜ்மு	250
ரெங்கூன் மௌலவி முஹம்மதுயாகூபு சாஹிபு	200
ரெங்கூன் கேம்தான் அஹ்மது ஜலாலுத்தீன்	200
பேட்மா நகரம் எஸ். பத்ருத்தீன் சாஹிப்	150
சென்னை மெஸர்ஸ் அ. ம. அப்துல்லா சாஹிபு சன்ஸ்	100
பேட்மா நகரம் எஸ். அப்துற் றவூப் சாஹிபு	100
கீரனூர் அஞ்சுமன் குவ்வத்துல் இஸ்லாம்	100
அரங்குடி கை. அஹ்மது சாஹிப்	100
வடகரை அன்வாருல் இஸ்லாம் சங்கம் ...	100
முத்துப்பேட்டை மளிகை M.S.M. Cs:	100
சிலோன் ஊர்கா ஜைனுத்தீன்சாஹிப்	100
சுந்திரபாண்டியன் பட்டணம் S. M. மொய்தின் சேக்காதியார்	100

ரெங்கோன் மேகோமொய்தீன்பிள்ளை 100
சித்தியங்கோட்டை முஸ்லிம் வித்யாபி விர்த்தி சங்கம் 100
அய்யம்பேட்டை முஸ்லிம் முன்னேற்ற சங்கம் 100
முக்குளம் சேக் இஸ்மாயில் அம்பலம் 75
குன்னூர் அஞ்சுமன் ஹிதாயத்துல் இஸ்லாம் 75
ஐம்பை ஜ. கா. கபீர்சாஹிப் ... 75
கொச்சி மலபார் இஸ்லாம் 50
சிலோன்புத்தளம் எம் என். கே. முகமது ஹுசேன் ... 50
கோவில் பாளயம் காதர்சா ராவுத்தர் 50
சிலோன் மாவநல்லே ஒ. எஸ். அப்துல் காதர் 50
சிலோன் கலஹா அப்துகரீம் சாஹிப் 40
புத்தளம் ப. மு. முஹம்மது கமருத்தீன் 30
இளம் குளத்தூர் கே. வி. இ. ஹஸன் முகம்மது ருவுத்தர் 25
விஜயநகரம் அப்துல் கரீம் சாஹிப் 25
சிலோன் தலவாக்கொல்லே நெய்னு முஹம்மது சாஹிப் 25
மங்கலக்குடி அஞ்சுமன் 25
திருமங்கலம் அப்துல்லா சாஹிப் 20

ஆகப் பிரதிகள் 4315

சங்கம் மூலியமாய் அனுப்பிக் கோடுக்கப் பட்டவைகள்.

கூத்தாநல்லூர் ஈதேமீலாதே நபவி 1500
ரெங்கூன் சோலிய முஸ்லிம் அஸோவியேஷன் 1000
கொழும்பு 650
பினங்கு ... 250
கிள்ளான் 275
சிங்கப்பூர் 250
மதுரை ... 350
தஞ்சாவூர் 200
திருச்சினைபள்ளி 200
அய்யம்பேட்டை ... 200
காயல்பட்டணம் 150
புதுச்சேரி 150
செய்கோன் 112
வடகரை 100
பழணி ... 100
பள்ளபட்டி ... 100
பரங்கிப்பேட்டை 100
திண்டுக்கல் 100
மடத்துகுளம் 100
கொடிக்கால்பாளையம் ... 100
நாகூர் 100
ஏனங்குடி ... 100
வேலூர் ... 100
மாயவரம் 100
கரூர் 100
நெல்லிக்குப்பம் ... 100
கம்பம் 100
உத்தமபாளையம் 100
ஈரோடு 100
நாகை 50
காஞ்சிவரம் 50
கூடலூர் 50
சித்தார்கோட்டை ... 50
கீழக்கரை ... 50
நீடூர் 50
கும்பகோணம் 50
லால்குடி 50
சேலம் 50
கோயம்புத்தூர் ... 50
திருப்பூர் ... 50
மேட்டுப்பாளையம் ... 50
அதிராம்பட்டணம் 50
சாத்தான்குளம் 50
மதுக்கூர் 50
மேல்விஷாரம் 50
ஆம்பூர் 50
வாணியம்பாடி 50
சென்னை நகர் 1000
25, 10, 5, வீதம் சுமார் 150 ஊர்களுக்கு அனுப்பியது 1898

ஆக கூடுதல் 15,000

நன்கோடை அளித்த கனவான்கள்

சென்னை மெஸர்ஸ் மு. அ. முஹம்மது அலி சாஹிப் & Co., ரூ. 100
கூத்தாநல்லூர் ஈதேமீலாதேநபவிய்யி 100
ஜனுப் ஸவுக்கார் வி. அப்துல் ஹக்கீம் சாஹிப் பகதூர் 50
மெஸர்ஸ் அ. ம. அப்துல்லா சாஹிப் சன்ஸ் 50
மெஸர்ஸ் ச. யி. சி. அப்துல் கரீம் & பிரதர்ஸ் 50
ரெங்கூன் சோலிய முஸ்லிம் அஸோசியேஷன் வைஸ் பிரஸிடெண்டு

ஜனப் அ. சி. இ. முகம்மது இப்ருஹீம் சாஹிப்	50		
ஜனப் தா மு. முகம்மது இப்ருஹீம் ரூவுத்தர்	25		
சிலோன் தலவாக் கொல்லே ஜனப் N. A. நெய்னு முகம்மது சாஹிப்	5		
ஆக ரூ.	430		
விற்பனையான காப்பிகள் 4315-க்கு	201	12	
கொழும்பில் விற்பனை செய்தது ரூ.	34	0	
பழனி மௌல்விபீர்முகம்மதுசாஹிப் விற்பனை செய்தது ரூ.	8	0	
ஆக ரூ	673	12	

சிலவு

15,000 பிரதிகள் & போஸ்டல் அச்சுப்போட காயிதம் அச்சுக் கூலி	629	0	0
பல ஊர்களுக்கும் கப்பல், ரயில் & போஸ்டில் அனுப்பிக் கொடுத்த சிலவு	105	3	11
பாக்கின் செய்ய சாக்கு காகிதம் நூல் சிலவு	3	11	9
ஆக ரூ,	737	15	8
வரவு ரூ.	673	12	0
பாக்கி ரூ.	64	3	8

பாக்கி ரூபாயை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் மூலியம் கொடுக்கப்பட்டது.

காரியதரிசிகள்,
ஹி. பா. இஸ்லாம் சங்கம்.

ஆசிரியர் குறிப்பு

வட்டமேசை மகாநாடு:—லண்டன் மாநகரில் இந்திய அரசியல் திட்டங்களில் சில மாறுபாடுகளைப் புகுத்தக் கருதி உண்மையில் ஓர் மகாநாடு கூடப்போகின்றது என்பதை நம் நேயர்களறிவர். இம் மகாநாட்டுக்கென்று இர்வின் பிரபு அவர்கள் இந்தியாவினின்றும் இந்தியர்கள் பலரைப் பிரதிநிதிகளாக நியமித்திருக்கின்றூர். அவர்களுள் நம் முஸ்லிம் சமூகத்தைப் பற்றியவரை, நம் சென்னை மாகாணத்தினின்றும் ஒரு பிரதிநிதியைக் கூட இவ்வரசாங்கத்தார் நியமிக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கதாயுள்ளது. ஏனைய சமூகத்தினர்கள் அவ்வவ் மாகாணங்களிலிருந்து அவ்வவ் மாகாண நிலைமையை அறிந்தவர்களாக இர்வின் பிரபுவால் தெரிந்தெடுக்கப் பெற்றிருக்க, இம்மாகாணத்து முஸ்லிம் சமூகத்தினரில் ஒருவரேனும் இப்பொறுப்பிற்கு இலக்காமற் போயினமையை என்னென்போம்! இச்சங்கத்தின் ஆதரவிலும் மாகாண முஸ்லிம்களின் சார்பாகவும், இம் மாகாணத்து முஸ்லிம்கட்கும் இவ்வட்டமேசை மகாநாட்டில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சென்னை கவர்னர் அவர்கட்கும் அரசப் பிரதிநிதிக்கும், தந்தி மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் வற்புறுத்திக் கூறியிருந்தும், அரசாங்கத்தார் இக் கூற்றின் வலிமையை உணராதவர்களாய் முற்றிலும் இச் சென்னை மாகாணத்து முஸ்லிம்களின் முறையீட்டைக் கண்ணேட்ட மிடாது வாளாவிருந்து விட்டனர். இந்திய முஸ்லிம்களின் சார்பாய் வட்டமேசை மகாநாட்டிற்கு எத்துணைப்பேர் பிரதிநிதிகளாகத் தோன்றினும் சென்னை முஸ்லிம்களின் நிலைமையை அறிந்த இச் சென்னை மாகாண வாசி ஒருவரேனும் அங்கிலையேல், நமக்கு இம் மகாநாட்டால் ஒரு நலனும் விளையாது என்பதை நம்மவர்கட்கும், குறிப்பாக அரசப் பிரதிநிதியவர் கட்கும் வலியுறுத்திக் கூறுகின்றேம். இறுதி நாள்வரைப் பிரதிநிதிகளின் தொகையில் கூடுதலாக நியமனம் புரிய இர்வின் பிரபுவுக்கு உரிமை உள்ளவாற்ருல், இனியேனும் காலந் தாழ்த்தாது சென்னை மாகாணத்திலிருந்து ஒரு முஸ்லிமை நியமிப்பாராக. இல்லையேல் இக்குறைபாடு இத் தமிழகத்து முஸ்லிம்களின் மனத்தில் ஓர் ஆற்றெணுப் புண்போன்று துன்புறுத்தும் என்றும் அதனுல் இர்வின் பிரபுவின் நியமனத்திலும், வட்டமேசை மகாநாட்டுத் தீர்மானங்களிலும் அதிருப்தியேற்படும் என்றும் திண்ணமாய்க் கூறுகின்றேம்.

ஹிபாஜத்துல் இஸ்லாம் புத்தகசாலை

அல்பாக்கியாத் ஸாலிஹாத்தின் அழகிய சரிதை

இது வேலூர் மத்ரஸயே பாக்கியாத் ஸாலிஹாத்தின் நாஜிரும் மீர்மஜ்லிசுமான அஃலா ஹஜ்றத் ஹாஜீ மௌலவீ ஜியாவுத்தீன் முஹம்மது ஸாஹிப் கிப்லா அவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. இதில் வேலூர் மத்ரஸாவின் சரித்திர வரலாறு எழுதப்பட்டிருந்தாலும் இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தைய சரித்திர சம்பந்தமான பல அரிய விஷயங்களும், சுமார் 50 வருஷங்களுக்கு முன் நமது தென் நாட்டு முஸ்லிம்களின் நிலைமையும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. புத்தகத்தின் இடையிடையே மத்ரஸா கட்டிடத்தின் அழகிய ஆப்டோன் படங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு நான்கே.

ஹஜ்ஜு யாத்திரை

அல்லது

ஹிஜாஸ் பிரயாணம்

இது சென்னை "ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர் மௌலானா மௌலவீ அஹ்மது ஸயீது ஸாகிப் அவர்களால் இனிய எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. இந்நூலில் ஹஜ்ஜு யாத்திரை செல்லும் ஒவ்வொரு முஸ்லிமும் தம் இருப்பிடம் விட்டுப் புறப்பட்டது முதல் ஹஜ்ஜு, உம்ரு ஜியாரத்து முதலியவைகளை நிறைவேற்றித் திரும்பும் வரை ரயில், கப்பல், ஒட்டகங்கள், மோட்டார் முதலிய பிரயாணங்களில் நடந்துகொள்ள வேண்டிய விபரமும், அவைகளுக் கேற்படும் செலவு தொகை விபரமும், ஹனபீ, ஷாபிஈ ஆகிய இருமத்ஹபுகளின்படி ஹஜ்ஜுடைய பர்லு, வாஜிபு முதலிய மஸ் அலாக்களும், துஆச் செய்யவேண்டிய விபரங்களும் அடங்கி இருக்கின்றன. இதன் விலை அணு நான்கே.

கிடைக்குமிடம்:—

ஹிபாஜத்துல் இஸ்லாம் புத்தகசாலை,
48, அங்கப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் A. M. அப்துல்லாஹ் சாஹிப் & Co,
77, மார்கட் ஸ்டிரீட்.

ஜனாப் K. V. முகம்மது சுல்த்தான் அவர்கள்,
91, மார்க்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் M. M. துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனாப் ஹாஜீ K. O. முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரம்பா ஸ்டிரீட்.

பினங்

ஜனாப் V. O. ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனாப் V. M. அப்துற்றஹ்மான் அம்பலம் அவர்கள்,
85, மொகல் ஸ்டிரீட்.

Messrs. A. P. N. அப்துல் ஜப்பார் & பிரதர்ஸ்,
77, எடுவர்டு ஸ்டிரீட்.

கொழும்பு

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,
220, 2nd கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் A. M. K. ஹாஜி முகம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்,
220, அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் M. A. காதர் பாவா & பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் M. M. காதர்பகீர்ருவுத்தர் & கம்பெனி,
21, சைனபஜார் ரோடு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R. Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.